www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

පිටු 20 ... பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් ஜூன் 14–20,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 261

## புறப்பாடும் கைப்பற்றலும்



### திசை தெரியாத செய்திகள்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

# முரசம்

## மாணவர்கள் நினைத்தால்....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இந்தோனேசியாவில்
முப்பத்திரெண்டு வருடகால
சர்வாதிகாரியை
நாற்காலியைவிட்டு இறக்கியுள்ளனர்!

"இறங்கு போடு" என்று
இரங்கிக் கேட்டால்
எந்த மயிலும்
இறகு போட்டதேயில்லை!

அடக்குமுறையாளர்களும்
அப்படித்தான்!

ஆண்டு ருசி கண்டவர்களும்
அடக்கித் திமிர் கண்டவர்களும்
தாமாக இறங்கிவந்து
நாற்காலிகளை உதறியதுமில்லை;
நாகரிகமாக நடந்ததுமில்லை!

இந்தோனேசிய ஜனாதிபதி
சுகார்ட்டோவும்
அந்த ரகம்தான்!

மக்கள் என்றால்
தானும் தன் குடும்பமும்
தன் சுற்றமும் மட்டும்
என்று நினைத்தவர்!

தட்டிக் கேட்க
யாருள்ளனர், என்று
படைபலம், அதிகாரபலம்
தந்த போதையில்
தலைகீழாக ஆடினார்!

இறுதியில் பூகம்பம்
வெடித்தது!
அது-மாணவர் புரட்சி!

மாணவர் நினைத்தால்
நடத்திக் காட்டுவர்!
என்பதை நிரூபித்துள்ளனர்!

இராணுவம் சுட்டது;
சிறையில் அடைத்தது;
நடுவீதியில்
நையப் புடைத்தது!
500 பேர்வரை
பலியான போதும்,
மாணவர் போராட்டம்
உயர்ந்து வளர்ந்தது!
உரம்பெற்று நிமிர்ந்தது!

நாற்காலியை
கெட்டியாகப் பிடித்தபடி,
போராடுவோரை
சுட்டுத்தள்ள உத்தரவிட்ட
சுகார்ட்டோ
இறுதியில் பணிந்தார்!

சுகார்ட்டோ பதவி
துறந்தது
முதற்கட்ட வெற்றிதான்!

ஏனெனில்,
தற்போது அதிகாரம்
கைமாறியிருப்பது
சுகார்ட்டோவின்
உறவினரிடம்தான்!

ஆனாலும், ஒரு பெரும்
மலையை அகற்றியாகிவிட்டது!
ஏனைய சிறு மலைகளை
அகற்றுவது கடினமல்ல!

நம்பிக்கையுடன் ஒன்றுபட்டு
போராடினால்
வெற்றி நிச்சயம் என்பதை
மீண்டும் ஒரு தடவை
வரலாற்று ஏட்டில் பதித்துள்ள
இந்தோனேசிய மாணவர்களுக்கு
பாராட்டுத் தெரிவிப்போம்!

போராட்டம் இல்லாமல்
தீர்வுகள் கிடைத்ததில்லை!

அதிகாரக் கதவுகள்
தட்டியதும் திறந்ததாகவோ,
அடக்குமுறைக் கரங்கள்
கேட்டதும் கொடுத்ததாகவோ
ஒரு உதாரணம்கூட
வரலாற்றில் கிடையாது!

'ஒரு, கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தைக் காட்டு!'
என்றார் யேசுநாதர்.
'மறு கன்னத்திலும் அறைந்தால்
என்ன செய்வது?'
என்று அவரும் கூறவில்லை!

காரணத்தோடுதான்
கூறாமல் விட்டிருக்கிறார்!

திருப்பிக் கொடுத்தால்தான்
சிலர் அடிப்பதை
நிறுத்துவர்!

எப்படி, எந்த விதத்தில்
திருப்பிக் கொடுப்பது
என்பதை
அந்தந்தச் சூழ்நிலைதான்
தீர்மானிக்கிறது!

போராட்டத்தின் வடிவங்கள்
இரண்டு:
ஒன்று:- ஆயுதம்
ஏந்தாத போராட்டம்.
இன்னொன்று:
ஆயுதம் ஏந்திய
போராட்டம்!

இந்தோனேசிய மாணவர்கள்
ஆயுதம் ஏந்திய
போராட்டம் நடத்தவில்லை!

நாளை என்னாகும்
என்பதை அங்குள்ள
சூழல்தான் தீர்மானிக்கும்!

வடிவங்கள் மாறலாம்;
ஆனால்-
போராட்டம் இன்றி
இரும்புத்திரைகள் விலகாது-
தகுந்த நீதி கிடைக்காது
என்ற உண்மை மட்டும்
மாறவே மாறாது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## நாம சங்கீர்த்தன மகிமை

பரம்பொருளை அடைவதற்கும், உணருவதற்கும் சொல்லப்பட்டுள்ள கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், ராஜயோகம் என்ற நான்கு வகை மார்க்கங்களில் இக்கலியுகத்தில் 'பக்தியோகந்தான்' சுலபமானது, என்று கூறப்படுகிறது. அந்த பக்திக்கு மூலகாரணம் நாம சங்கீர்த்தனம்.



த்ரேதாயுகத்திலும், துவாபரயுகத்திலும் இறைவனை தரிசிக்க கடுமையான யாகங்களும், தவங்களும் தேவைப்பட்டன. ஆனால் இக்கலியுகத்தில் இறைவனையடைவதற்கு நாம சங்கீர்த்தனம் ஒன்றே போதுமானது. இதைத்தான் வியாசபகவான் நைமிசாரண்யத்து முனிவர்களுக்கு கூறுகிறார். "முனிபுங்கவர்களே! கலியுகத்தில் பிறப்பவர்களே பெரும் பாக்கியவான்கள். ஏனென்றால் கலியுகத்தில் இறைவனின் நாம சங்கீர்த்தன மகிமையால் மோக்ஷத்தை அடையலாம். அவனது நாமத்தை அன்புடனும், உண்மை பக்தி நம்பிக்கையுடனும் ஜபித்தால் போதும்!"

எனவே இதிலிருந்து தாம் தெளிவாக அறியக்கூடியது யாதெனில், இறைவனின் நாமத்தினை அனுதினமும் ஜபித்து பயன் பெறுவோமாக!

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.

## சிறப்பான மனைவியின் சீரிய குணம்

கலீபா ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் மலிக் என்ற அரசனின் மகளை திருமணம் செய்தார்கள்.

அப்போது அப் பெண்மணி அதிகமாக நகைகளை தன் உடலில் அணிந்திருந்தார். இதனைக் கண்ணுற்ற அப்துல் அஸீஸ் தன் மனைவியிடம், பின்வரும் இரு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு கூறினார்.

"ஒன்று- உன்னிடம் உள்ள நகைகள் அனைத்தையும் அல்லாஹ்விற்காக கொடுத்துவிடு, நான் அதை முஸ்லிம்களின் பொதுச் சொத்தாகிய பைத்துல் மாலில் சேர்த்து விடுகிறேன்.

அல்லது என்னை விட்டு நீ நீங்கிக்கொள்! ஏனெனில் நானும் உன்னுடைய நகைகளும் ஒரே வீட்டில் இருப்பது பொருத்தமற்றது."

இதைக்கேட்ட மனைவி "இதோ என்னிடம் உள்ள நகைகள் அனைத்தும். இதை பைத்துல் மாலில் சேர்த்து விடுங்கள். நான் ஒரு போதும் தங்களைவிட்டு பிரிந்து வாழ விரும்பவில்லை" என்றார்.

பெண்களே! இச் சிறப்பான மனைவியின் சீரிய குணம் ஏனைய பெண்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டாக அமையட்டும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.258

### பரிசுக்குரிய கவிதை

## மீனவப் புலி

தரையிலே கண்டதனால்
மீனவர்கள்-
கடலிலே கண்டால்-
கடற்புலிகள்!

இரா. சபாபதி- ஆலி எல.



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

## விடியல்

விடிந்தும் விடியாத
வாழ்க்கைக்கு-ஒரு
விடியல் உதவிடும்
விந்தையைப் பார்!

ச. மகாலிங்கம்- வெலிமடை.

## தாங்கு

தாங்கு தாங்கு
சுமையைத் தாங்கு
வாழ்வு மலர
சுமையைத் தாங்கு!

அ. யாழினி-
மட்டக்களப்பு.

## இலங்கையில் மட்டும்...

வேலை நிறுத்தம்
தேசத்துரோகம்!
வேலை செய்வதைத் தடுப்பது
'பாதுகாப்பு ஏற்பாடு!'

'யாழ் பாரதி'-கொழும்பு-10

## விலை

"ஆனை விலை
குதிரை விலை-அல்ல! இது
மீன் விலை!
கேட்டு ஓடாதே!
வீசிடுவேன் வலை!"

எம். ராமமூர்த்தி-வெலிமடை.

## நிதியும் நீதியும்

சுமந்தாலும் தூக்கினாலும்
சுமைகள் சுகமல்ல;
நீதித் தராசின்
பிழைகளும் சரியல்ல!

க. நாகராசா- சாவகச்சேரி.

## நேரமில்லை

சந்தை முடிந்தென்ன....
இளைப்பாற நேரமில்லை!
குண்டு வந்து போடுமுன்னே
ஓடிப் போய் விடுவோம்!

அ. அன்னலெட்சுமி-மூதூர்.

## தீர்வுப் பொ(றி)தி

போகப் போக பொதி சிறுத்து,
போகிற இருளுக்குள்ளே
ஏதுமில்லை; அதற்குள்ளே
ஏமாளியாய் கூடைகாவி,
இன்னும் நீ பின்னாலே,
ஏனிப்படி அலைகின்றாய்?

ஆரையம்பதி இதயம்.

## வழிமுறை

இருள்களைப் பற்றி
பயம் கொள்வதை
விட்டு,
மெழுகுவர்த்தியைப் பற்றி
சிந்திப்பது உத்தமம்!

சுபா வரன்- கண்டி.

## வழியும் பொறியும்

கட்டை வண்டியும் கால் நடையும்
பண்டைக் காலம்!
ஆகாய விமானமும் நீர் மூழ்கியும்
இடைக்காலம்!
கால் நடைக்கும் கடும்பயம்
இந்தக்காலம்!

க. ஜெயரஞ்சினி- தம்பிலுவில்-02.

# கவிதைப் போட்டி இல.261



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 20.06.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.261,
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.



தளராத போராட்டம்

# வாசக(ர்)சாலை

20ம் பக்க புகைப் படங்களும் தகவல்களும் மெருகேறிவருகின்றன. அபூர்வமான தகவல்கள். 'அன்னபூரணி அம்மா' அருமையிலும் அருமை!

சி. வசந்தகுமார்,
திருமலை.

முரசுக்கு! என் அபிமான இதழான மலரில் ரசிகனின் 'இலக்கிய நயமு'ம் அவர் இப்போது சுடச் சுடத் தரும் 'இடி அமீன்' தொடரும் மிகப் பிரமாதம்.

ஆர்.கே.
செல்வநாயகம்,
லபுக்கலை.

என் இனிய முரசே! நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வெகுஜோர். என் இனிய கவியரசு கண்ணதாசனின், 'நில்-கவனி-முன்னேறு' என்னைக் கவர்ந்துள்ளது. 'இலக்கிய நயம்' அசத்துகின்றது.

ஆர். சீத்தாதேவி, சாமிமலை.



என் இனிய முரசுக்கு,

புதியதொரு உத்வேகத்துடன் ஆரோக்கியமான வாசக வளர்ச்சியை ஆர்ப்பாட்டமில்லாமல் நீ மேற்கொண்டு வருவது சிலருக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கும். வரட்டுத்தனமான வாதங்களை நீ வரவேற்பதில்லை என்பதால் ஏற்பட்ட எரிச்சல் அது. விட்டுவிடு! உன் வாசகர் வட்டம் பரந்து விரிந்து செல்கிறது. எத்தகைய இரசனையுள்ள வாசகனும் உன்னைத் தொட்டுவிடுகிறான். காரணம் உன் படைப்பாக்கங்கள்!

க. விஜயகுமார், தெல்தோட்ட
குரூப், கலஹா.

அன்பின் முரசே

உன்வரவை எதிர்பார்த்திருக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். கடல் கடந்து நான் வாழ்ந்தாலும் வாரம் ஒருதடவை உன் இதழ்கள் என் கரங்களில் தழுவும்போது நான் அடையும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. கண்ணதாசனின் 'நில்-கவனி-முன்னேறு' மற்றும் நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' என்பன நான் விரும்பிப் படிப்பவையாகும். 'காதிலை பூ கந்தசாமி'யின் கற்பனைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. அரசியல் இலாபங்களுக்காக உண்மைக்குப் புறம்பான செய்திகள் வரும் இக்காலத்தில் உண்மையைத் தாங்கி வரும் ஒரு பத்திரிகையின் வாசகன் என்ற வகையில் நான் பெருமை அடைகின்றேன்.

ம. லவரதன், ஸ்காபரோ, கனடா.

முரசுக்கு!

தமிழ் எழுத்துலகில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள பட்டுக்கோட்டை பிரபாகர் அவேர்களின் 'மேக்கப் புன்னகை' என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. இந்தக் கதையை வாசகர்களின் முன் படைக்கும் முரசுக்கு என் பாராட்டுக்கள்.

ஏ.எல். நஸீர், கிண்ணியா-03.

முரசே!

நீ தந்த 'விடியாத இரவு' படித்ததும் அழுதே விட்டேன். தமிழ் மக்களின் அவல நிலையை கதையாக தரும் உனக்கும், ஞானகணேசன் அவர்களுக்கும் நன்றி. சுமதியை போல எத்தனை சுமதிகளுக்கு இந்த அவல நிலமையோ? தமிழர்களுக்கு ஒரு விடிவு காலம் வராதா? என்று ஏங்குகிறேன்.

எம். சந்திரா, லெபனான்.

என் அன்பு முரசே!

உமது அனைத்து ஆக்கங்களும் அருமையிலும் அருமை. அதில் 'இடி அமீன்' திக் திக் தொடர் வெகுஜோர். மேலும் 'மேக்கப் புன்னகை'யில் மதுமிதாவின் திருமணம் அசலா, நகலா, எனக் குழம்பும் அளவுக்குப் பிரபாகர் அசத்துகிறாரே!

செல்வன் லக்ஸ்மணராஜ், மட்டுநகர்.

## மனித உரிமை நாடகம்

கொழும்பில் அரசுக்காக சில பெண்கள் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இப் பெண்கள் அமைப்புக்கள் அடிப்படையில் சுயநல அரசியல் சக்திகளின் கைப்பாவைகளே. வெந்ததைத் தின்றுவிட்டு அவ்வப்போது பொழுது போக்காக வீதியில் நின்று கையில் அட்டை பிடித்து கோஷம் போடுவர். சிலருக்கு இது ஒரு தொழில். தொண்டர் நிறுவனம் என்ற போர்வையில் வெளிநாடுகளில் பணம் பெறுவர். கணக்குக் காட்டவே இப்போராட்டங்கள். மறக்காமல் புகைப்படம் எடுத்து பணம் அனுப்புவோருக்கு அனுப்பி வைப்பர். தாங்கள் பக்கச்சார்பில்லாதோர் என்று காட்டுவதற்காக எப்போதாவது அரிதாக தமிழ்ப் பெண்களுக்காகவும் குரல் கொடுப்பர். அவ்வளவே. தக்க தருணங்களில் அரசுக்கு மறைமுக ஆதரவான போராட்டங்களை நடத்துவதில் இவர்களது சுயரூபங்கள் தெரிந்துவிடும்.

வே. திருநாவுக்கரசு. கொழும்பு-08.

## திட்டியதும் தட்டியதும்

கடந்த காலத்தில் ஒருவரை ஒருவர் திட்டித் தீர்த்தன தட்டித் தீர்த்தன இயக்கங்கள். தவறுகள் நடப்பது இயல்பு. அவற்றை இனிமேலாயினும் நேராது தடுத்தலே சிறப்பு. நீ அன்று என்ன செய்தாய்? நான் அன்று என்ன செய்தேன் என ஒருவருக்கு ஒருவர் மல்லுக்கட்டாமல், நடந்ததை மறந்து, இன்றைய பாரிய இக்கட்டு நிலை உணர்ந்து திருந்த வேண்டும். அக் கருத்தை புலிகளும் கூறுவதாக நாரதர் சுட்டிக்காட்டியிருந்தார். அவ்வாறெனில் வரவேற்கத் தக்கதே!

ம. பேரம்பலம், சாவகச்சேரி.

## தோதலால் பயனில்லை

முரசே! 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் குறிப்பிட்டிருந்தது நூறுவீதம் உண்மை. உள்ளூராட்சித் தேர்தல்வரை யாழில் தமிழ்க கட்சிகளுக்கும் புலிகளுக்கும் முறுகல் நிலை ஏற்படவில்லை. கெட்ட தேர்தல் என்று கூறிக்கொண்டே போட்டியிட்டு விட்டு,"மக்கள் எம் பக்கம்" எனக் கொக்கரித்தன தமிழ்க் கட்சிகள். இன உரிமைப் போரில் தேர்தல்கள் தலைமைகளை உருவாக்குவதில்லை. அதனால்தான் '77ல் மாபெரும் வெற்றி பெற்ற கூட்டணியை பின்னே தள்ளிவிட்டு இயக்கங்களால் வளரமுடிந்திருந்தது. வரலாறுகளை மறந்து அற்ப சுகங்களில் திளைக்கலாமா?

ஜி. சுரேந்திரன், யாழ்ப்பாணம்.

அன்பின் முரசிற்கு!

வருடத்தில், மாதம், வாரம், தவறினாலும் உன்னை வாங்கி வாசிக்கத் தவறாத பல கோடி இரசிகர்களில் ஒருவன் நான். 'இலக்கிய நயம்', 'தேன் கிண்ணம்', 'விளையாட்டுச் செய்தி' மற்றும் மொத்தத்தில் எல்லா அம்சங்களும் என்னைக் கொள்ளை கொண்டவையே.

என் முரசிற்கு நன்றிகள்.

ஜெ. சசிகுமார், இரத்தினபுரி.

முரசே!

கவியரசு கண்ணதாசனின் நில்-கவனி-முன்னேறு' படிப்பினையாக இருக்கிறது. 'இடி அமீன்' வரலாறைத் தரும் உனக்கு நன்றி. 'நந்தினி 440 வோல்ட்' சூப்பர். ஆக்கங்கள் எல்லாமே பிரமாதம். நீ வளர வாழ்க. வாழ்த்துகிறேன்.

கே.எஸ். சாஜஹான், லெபனான்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# இழுத்தடிப்பு நாடகத்தில் தமிழ்க் கட்சிகள்

# செய்தித் தணிக்கையை கண்டிக்கவும் தயக்கம்

# பத்திரிகையாளர்கள் – புத்திஜீவிகள் அதிருப்தி

(அரசியல் நிருபர்)

இலங்கை அரசின் அரசியல் இராணுவ நகர்வுகளுக்கும் விருப்பு வெறுப்புக்கும் ஏற்பவே தமிழ்க் கட்சிகள் செயற்பட்டு வருவதாக இலங்கையின் பத்திரிகையாளர்கள் பலரும் அரசியல் விமர்சகர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து தீர்வொன்றைக் காணப்போவதும் இல்லை. இரு தரப்புக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு திருப்தியளிக்கும் தீர்வை வழங்குவதில் ஆர்வமும் இல்லை என்பது உறுதியாகி விட்டது.

ஆயினும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்காக இரு கட்சிகளும் தமக்கிடையே புரிந்துணர்வு காண விழைவதுபோல காட்டிக் கொள்கின்றன.

தமக்கு தோதான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே இரு கட்சிகளும் காத்திருக்கின்றன. அந்த சந்தர்ப்பம் ஏற்படும்வரை தமக்கிடையே தமிழ்க் கட்சிகளை தூதுவர்களாக்கி இழுத்தடிக்கப் போகின்றன.

இதனை தமிழ்க் கட்சிகள் நன்கு உணர்த்துள்ளன. எனினும் அரசின் தீர்வு யோசனை தயாரிப்பில் பங்கெடுத்ததாகக் கருதப்படும் தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் ஏனைய தமிழ்க் கட்சிகளை இழுத்தடிப்புக்கு ஏற்ற திசையில் கொண்டு செல்ல அரும்பாடுபட்டு வருகிறாராம்.

குறிப்பிட்ட பிரமுகரின் ஏற்பாட்டின் பெயரிலேயே பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியை சில தமிழ்க்கட்சிகள் சந்திக்க முடிவு செய்யப்பட்டதாம்.

குறிப்பிட்ட பிரமுகர் ஆளும் அணிக்கு சார்பானவர், தீர்வு யோசனை தயாரிப்பில் பங்கெடுத்தவர் என்பது ஐ.தே.கட்சி வட்டாரங்களுக்கு தெரியுமாம். "தமிழ்க் கட்சிகள் மூலம் எதிர்க்கட்சியை குற்றம் சாட்டும் அரசின் இராஜதந்திரத்துக்கு உதவுவதற்காகவே தமிழ்க் கட்சிகளை எம்மிடம் அழைத்துவருகிறார், பேச்சில் முரண்பாடுகளை ஏற்படுத்தப் பார்க்கிறார்." என்று ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

### திசைதிருப்பல்

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளை மட்டுமே தமிழ்க் கட்சிகள் என்று குறிப்பிட்ட பிரமுகர் அழைத்துத் திரிகிறார். மேற்படி பிரமுகரின் முயற்சியை ஈ.பி.டி.பி. நிராகரித்து விட்டதாம்.

இலங்கைக்குள் பிரச்சனையை தீர்க்க முடியாது என்ற அபிப்பிராயம் உள்ளூரிலும், உலக அளவிலும் எப்போதெல்லாம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் அரசையும், எதிர்க்கட்சியையும் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர முயற்சிப்பதுபோல செய்திகள் வரச் செய்து, திசைதிருப்புவதுதான் குறிப்பிட்ட பிரமுகரின் பணியாக இருக்கிறது என்று தமிழ்க்கட்சி பிரமுகர் ஒருவர் கூறினார்.

குறிப்பிட்ட பிரமுகரின் இவ்வாறான முயற்சிகளால் தமக்கும் அபகீர்த்தி ஏற்படுவதாக கிழக்குமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

### ஏன் தயக்கம்?

இதற்கிடையே செய்தித்தணிக்கையை கண்டிக்க தமிழ்க் கட்சிகள் நீண்ட தயக்கமும், தாமதமும் காட்டியமை பத்திரிகையாளர்கள் மற்றும் புத்திஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

இது போருடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக மட்டும் தமிழ்க் கட்சிகள் கருதுமானால் அவற்றின் அரசியல் வங்குரோத்துத்தனம் என்றே கொள்ள வேண்டும். ஆளும் தரப்பின் நோக்கம், மற்றும் எத்தகைய தீர்வில் அதன் நாட்டம் செல்கிறது போன்ற பல அடிப்படை விடயங்கள் அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

இதன் பின்னரும் ஆட்சியாளருடன் ஒத்துழைப்பதும், அரசியல் தீர்வு என்பது இவற்றுக்கு புறம்பாக இந்த அரசுமூலம் வானத்தில் இருந்து குதிக்கும் என்பதுபோல மக்களை நம்பவைப்பதும் இக்கட்சிகளது கையாலாகாத்தனங்களேயாகும் என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் விசனம் தெரிவித்தார்.

## யாழ் வர்த்தகர் படுகொலை

## தனிப்பட்ட தகராறு காரணமா?

யாழ் வர்த்தக சங்க முன்னாள் தலைவரும் கூட்டணியின் யாழ் கிளை உப தலைவருமான நமச்சிவாயம் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக இருவர் கைதாகியுள்ளனர். தியாகராசா சதானந்தன் (23), தியாகராசா குகதாசன் (21) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இருவரும் சகோதரர்கள்.

இவர்களில் குகதாசன் என்பர் யாழ் நகரில் மகாராணி புடவைக்கடை கொள்ளை, வலைக்கடைக் கொள்ளை என்பவற்றில் ஈடுபட்டதாக கைதாகியவர். சிறையில் இருந்தவர். அதற்போது வழக்கு நடந்துவருகிறது.

அப்போது வர்த்தகர் சங்கத் தலைவராக இருந்த நமச்சிவாயம்தான் மேற்படி கொள்ளைகள் தொடர்பான தகவலை படையினருக்கு வழங்கி துப்புத் துலங்க உதவினாராம்.

### கடையில் இல்லை.

குகதாசன் யாழ் கொட்டடிச் சந்தியில் மோர்கடை வைத்திருக்கிறார். அங்கிருந்து பார்த்தால் நமச்சியவாயத்தின் 'சிவகுமார் ஸ்ரோஸ்' நன்கு தெரியும். குறிப்பிட்ட தினத்தன்று நமச்சிவாயம் சாப்பாட்டுக்காக புறப்பட்டதை அவதானித்திருக்கலாம்.

பின்னர் அவரது வீட்டுக்கு அருகே சென்று காத்து நின்று காரியத்தை முடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற நேரத்தில் குகதாசன் கடையில் இருக்கவில்லை. பின்னர் மதிய உணவுக்காக வீடு சென்ற குகதாசன் "நமச்சிவாயத்தை யாரோ கொன்றுவிட்டனர்." என்று தன்னிடம் கூறினார் என்று அவரது தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

நமச்சிவாயத்தின் வீடு உள்ள ஒழுங்கையில் இரண்டு வீடுகளில் மட்டுமே ஆட்கள் உள்ளனர். அந்த ஒழுங்கையில் நடப்பது தெருவில் நிற்போருக்கு தெரியாது. ஒழுங்கையின் திருப்பத்தில் நின்றே வெட்டியுள்ளனர். வெட்டு ஆழமாக விழுந்தமையால் கழுத்து தொங்கிக்கொண்டிருந்தது. கழுத்தை வெட்டியபின்னர் அருகிலிருந்த மரத்தின் கொப்பையும் வெட்டி விட்டு போயுள்ளனர்.

### எச்சரிக்கை.

கொலையுண்ட நமச்சிவாயம் நீண்டகால கூட்டணி ஆதவரவாளர். பின்னர் புளொட் ஆதரவாளராக இருந்தவர். கூட்டணி மீண்டும் யாழ்ப்பாணம் சென்ற பின்னர் கூட்டணிக் கிளையின் உபதலைவரானார்.

யாழ் மேயர் சரோஜினியின் இறுதி அஞ்சலிக்கூட்டத்தில் முன்னின்றதோடு அவருக்கு "சிலை வைத்தே தீருவேன் " என்றும் உரையாற்றியிருந்தார்.

தம்மை வந்து சந்திக்குமாறு சமீபத்தில் புலிகள் கடிதம் அனுப்பி இருந்தனராம். அவர் செல்லவில்லை என்று தெரிகிறது. நிதியும் கோரப்பட்டிருந்ததாம்.

## பின்வழியால் தப்பினார் எம்.பி.

## புளொட் எம்.பி.க்கு புலிகள் குறி

(நமது நிருபர்)

புளொட் அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான பாலச்சந்திரனை தீர்த்துக் கட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதலில் சிக்காமல் தப்பிக்கொண்டார் பாலச்சந்திரன்.

இதுபற்றி அறியப்படுவதாவது: புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரனின் வீடு வவுனியா பண்டாரிக்குளத்தில் இருக்கிறது.

இப்பகுதி பாதுகாப்பு படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். சம்பவதினமான 08.06.98 அன்று மாலை வேன் ஒன்றை புலிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

திருமண வீடொன்றுக்காக என்று வாடகைக்கு அமர்த்திய வாகனத்தையே இடைநடுவில் வைத்து புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். இவ்வாகனச்சாரதி துப்பாக்கி முனையில் கட்டிப் போடப்பட்டார்.

அதன் பின்னர் அந்த வாகனத்தில் தமது மறைவிடத்தில் இருந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாலச்சந்திரன் வீடுஉள்ள பகுதிக்கு சென்றனர்.

### சந்தேகம்.

வீட்டுச் சூழலை நோட்டமிடுவதற்காக பாலச்சந்திரன் வீட்டுக்கு எதிராக உள்ள பாதையில் இரண்டு மூன்று தடவைகள் வேன் சென்று வந்திருக்கிறது.

வேனையும் அதற்குள் இளைஞர்கள் சிலர் அமர்ந்திருந்ததையும் கண்ணுற்ற பாலச்சந்திரனின் வீட்டாருக்கு சந்தேகம் வந்துவிட்டது. பாலச்சந்திரனுக்கு காவலாக நின்ற பொலிஸாரும் சந்தேகப்பட்டனர்.

எனவே பொலிஸார் பாலச்சந்திரனையும் குடும்பத்தினரையும் வீட்டின் பின்புறமாக உள்ள பாதையில் அழைத்துச் சென்றுவிட்டனர். அவர்கள் பின்புறமாக சென்றுவிட்டது தெரியாமல் வேனில் வந்த புலிகள் துப்பாக்கி பிரயோகம் செய்தபடி வீட்டுக்குள் புகுந்தனர். அங்கு யாரும் இருக்கவில்லை. பின்னர் பாலச்சந்திரனின் வாகனத்தையும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர். தாம் கடத்திய வாகனத்தை சாரதியிடம் கொடுத்துவிட்டு பாலச்சந்திரனின் வாகனத்தில் சென்றனர்.

அது எம்.பியின் வாகனம் என்று தடை அரண்களில் தெரியும் என்பதால் தப்பிச்செல்ல தடை இருக்காது என்று கருதி அதில் சென்றிருக்கலாம். பின்னர் இராசேந்திர குளத்தில் எம்.பியின் வாகனம் அநாதரவாக கைவிடப்பட்டிருந்தது.

## 'புலிகள் செய்யவில்லை!'

## கூட்டணி தெரிவிப்பு!

யாழ் மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் கொலைக்கு எல்.ரி.ரி.ஈ யினரைக் குற்றம்சாட்ட முடியாது. அரசாங்கத்திடம் பண உதவி பெற்று ஆயுதங்களுடன் உலவும் குழுக்களில் ஒன்றுதான் இக்கொலையைச் செய்திருக்க வேண்டும், என்று பெயர் குறிப்பிடவிரும்பாத கூட்டணி பிரமுகர் கூறியதாக கொழும்பு ஆங்கில வார ஏடு ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை இலக்கு வைத்து கொலை செய்வதையும் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்புவதையும் எல்.ரி.ரி.ஈ செய்திருக்க முடியாது என்று கூட்டணி திட்டவட்டமாக நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி வன்முறையில் நம்பிக்கை வைக்காமல் அரசியலில் ஈடுபட்டு வருகிறது. இதனால் மக்கள் கூட்டணியை ஆதரிக்கின்றனர். ஆகவே கூட்டணியை ஒழித்துக்கட்ட ஆயுதம் தாங்கிய குழுக்கள் முயற்சிக்கின்றன. இக்குழுக்கள் எல்.ரி.ரி.ஈ யினர் செய்யக்கூடிய சமூகவிரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். கூட்டணி அரசியலில் ஈடுபடுவதை இக்குழுக்கள் விரும்பவில்லை என்பதனால் கூட்டணியையே தமது இலக்காக இக்குழுக்கள் தாக்குகின்றன, என்றும் அப்பிரமுகர் சொன்னார்.

## சுதுமலையில் சடலம்

யாழ்ப்பாணம் சுதுமலையில் அநாதரவான நிலையில் இளைஞர் ஒருவரது சடலம் கிடந்தது.

04.06.98 அன்று இச்சடலம் யாழ் பொது மருத்தவனையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

சுதுமலைப் பகுதி மக்களின் தகவலின் படி இறந்து கிடந்தது திருட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் என்று தெரிகிறது. அதனை உடனடியாக ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை.

## "கல்விக் கல்லூரிகள் அமை!"

## தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

இலங்கை தமிழாசிரியர் சங்க ஆட்சி மன்ற மாநாடு சுமார் நான்கு ஆண்டுகளின் பின்னர் தற்போது நடைபெற்றுள்ளது. சுமார் 45 தாய்ச்சங்கப்பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். திருமலை பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாநாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, மலையகம் ஆகிய பகுதிகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

உடனடியாக வடக்கு- கிழக்கில் கல்வி வலயம் ஏற்படுத்த வேண்டும். தமிழாசிரியர்களுக்கு இடர் காலக் கொடுப்பனவுகளை உடன் வழங்கவேண்டும், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆகிய பகுதிகளில் கல்விக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். வவுனியா கல்விக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படவேண்டும்; ஆகியன உட்பட பலதீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ●

## திருவிழாவில் திரட்டல்!

## புலிகளின் பிரசாரம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களை தங்கள் பிரசார உத்திகளால் புலிகள் கவர்ந்திழுக்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலிருந்து ஆலயத்துக்கு வாகனங்களில் சென்ற பக்தர்களுக்கு எதுவித கெடுபிடிகளுமின்றி ஆயுதப் படையினர் அனுமதி அளித்தனர். அதேபோல் அக்கரையில் இருந்த புலிகள் இயக்கத்தவர்களும் பக்தர்களிடம் கண்ணியமாக நடந்து கொண்டனராம்.

ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதிலும் புலிகள் இயக்கத்தவர்கள் முன்னணியில் நின்றனராம். ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல் வைத்து மோர், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றையும் வழங்கின்ராம்.

ஆலய வீதிக்கு அப்பால் சுவரொட்டிகள், சுவர்ச் சித்திரங்கள் போன்றவற்றினூடாகவும் இயக்கப் பிரசாரங்களை மேற்கொண்டனர். மோதல்களின்போது எடுக்கப்பட்ட வீடியோப் படங்களையும் பெரிய திரைகளில் காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய பிரசாரங்களால் கவரப்பட்ட பல இளைஞர்களும் யுவதிகளும் தாமாகவே முன்வந்து புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனராம். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் பயிற்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர்களில் சிலர் வயதில் குறைந்தவர்கள் என்று காணப்பட்டதால் அவர்கள் அவர்களுடைய பெற்றார்களிடம் ஒப்படைப்பட்டனர் என்றும் தெரியவருகிறது. ■

## வெளிநாட்டு வானொலிச் சேவை

செய்தித் தடையால் வெளிநாட்டு வானொலிச் செய்திகளை கேட்க மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழ் பிரதேசங்களில் ஐ.பி.சி. வானொலிச் சேவை பிரபலம் பெற்றுவருகின்றது.

பி.பி.சி. வானொலிச் சேவை தற்போது இலங்கை அரச வானொலி அலை வரிசைகளில் ஒலிபரப்பாவதால் முன்னர் இருந்த வேகம் குறைந்திருப்பதாக பி.பி.சி. நேயர்கள் பலர் கூறுகின்றனராம்.

இதனால் அந்த இடத்தை ஐ.பி.சி. வானொலிச்சேவை பெற்றுவருகிறது.

இலங்கை நேரப்படி தினமும் காலை ஆறுமணிக்கு ஐ.பி.சி. வானொலிச் சேவையின் தமிழ் நிகழ்ச்சிகளை தெளிவாகக் கேட்க முடிகிறது. ■

## அவசர வேண்டுகோள்

இரத்ததானம் வழங்குமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது. கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாரியளவில் இரத்த தேவை ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் புதிதாக அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதே இதன் காரணமாகும். 05.06.98 முதல் இரத்ததான அறிவிப்புக்கள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருகின்றன.

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இரத்த வங்கிகள் திறந்து உள்ளன.

வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகள் ஊடாக வேண்டுகோள் விடுத்தும் எதிர்பார்க்கப்பட்டளவு இரத்தம் கிடைக்கவில்லை என்றும் இரத்த வங்கி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## மாகாணசபைத் தேர்தல் ஆயத்தங்கள்

## போட்டியிடத் தயங்கும் பிரபலங்கள்

நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன முன்னணி கணிசமான வெற்றியைப் பெறாவிட்டால் தொடர்ந்து வரப்போகும் தேர்தல்களில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இதனால் எப்படியாவது மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அக்கட்சித்தலைவர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

பொது ஜன முன்னணி மாகாண சபைக்கான தனது வேட்பாளர்களைத் துரிதமாகப் பட்டியல் போட்டு வருகிறது. அமைச்சரவையிலுள்ள பல அமைச்சர்களை மாகாணசபை முதல் அமைச்சர்களாகப் போட்டியிட வைக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க திட்டமிட்டுவருகிறார்.

ஆனால் அமைச்சர்களில் பலர் இத்திட்டத்துக்கு ஆதவரவாக இல்லை என்றும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டால் தாம் தோல்வியைத் தழுவ வேண்டியநிலை ஏற்படக்கூடும் என்றும் அஞ்சுவதாகத் தெரிகிறது. அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, கிங்ஸ்லி விக்ரமரட்ண மற்றும் டி.எம். ஜயரட்ண ஆகியோரை அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து மாகாண சபை முதல்வர் பதவிகளுக்குப் போட்டியிடுமாறு பொதுஜன முன்னணி அதிகார பீடத்தினர் அழுத்தம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியும் தனது வேட்பாளர்களைப் பொறுக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

மாகாண சபைத்தேர்தலில் பிரதானமாகக் கருதப்படுவது கொழும்பு நகரை உள்ளடக்கிய மேல்மாகாணத்துக்கான முடிவுகளே. பொதுஜன முன்னணி தற்போது முதல் அமைச்சராகவுள்ள சுசில் பிரேம் ஜெயந்த் அவர்களையே தலைவராகக் கொண்ட குழுவை நிறுத்தவிருக்கிறது.

தற்போது கொழும்பு மாநகரசபை மேயராகவுள்ள கரு ஜெயசூர்யாவின் தலைமையிலான குழுவை ஐக்கிய தேசியக் கட்சி நியமிக்கப்போவதாக செய்திகள் கூறுகின்றன.

தற்போது முதல் அமைச்சராகவுள்ள பிரேம் ஜயந்தை விட கரு ஜெயசூர்யா அதிக செல்வாக்குள்ளவர் என்று கருதப்பவதனால், மேல் மாகாண சபை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கக்கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர். ■

## பெண்புலிகள் பலி

வன்னியில் 04.06.98 அன்று ஏற்பட்ட வெடி விபத்து ஒன்றில் பத்துப் பெண் புலிகள் பலியானதாக புலிகள் அறிவித்தனர்.

05.06.98 அன்று தமது தரப்பில் 42 புலிகள் பலியானதாகவும் 08.06.98 அன்று தமது தரப்பில் 26 புலிகள் பலியானதாகவும் புலிகளின் குரல் அறிவித்தது.

## மின்மாற்றிகள் தொடர்ந்து தகர்ப்பு!

## நாடளாவிய ரீதியில் தாக்குதல்

அக்கரைப்பற்றுப் பகுதியில் பெரிய பள்ளியடி, புதுப்பள்ளியடி ஆகிய இடங்களிலிருந்த மூன்று மின்மாற்றிகள் ஜூன் 05 ஆம் திகதி புலிகளால் தகர்க்கப்பட்டன. இதனால் அக்கரைப்பற்று நகரம் இருளில் மூழ்கியுள்ளது. மின்மாற்றித் தகர்ப்புச் சம்பவத்தின்போது தெருவில் வந்த பொது மக்களும் நையப்புடைக்கப்பட்டதாகப் பொலிஸில் தெரிவித்துள்ளனர்.

சமீப சில காலமாக நாடெங்கிலுமுள்ள மின்மாற்றிகளும் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையங்களும் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் இலக்குகளாக மாறியுள்ளதால் அரசின் கவனம் அவற்றின் பக்கமும் மாறியுள்ளது. நாடு பூராவிலுமுள்ள மின்மாற்றிகளின் பாதுகாப்புக்கு அப்பகுதிப் பொதுமக்களினதும், பொலிஸாரினதும், படையினரதும் இணைந்த கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது விடயமான புதிய உத்தரவுகளைப் பொலிஸ்மா அதிபர் பிறப்பித்துள்ளார். நாடெங்கிலும் சுமார் 10 ஆயிரம் மின்மாற்றிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றினதும் பெறுமதி ரூபா ஐந்து இலட்சத்திலிருந்து ஐம்பது இலட்சம் வரையுமாகும்.

இவ்வருடத்தில் மட்டும் நாடெங்கும் 17 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. 05.06.98 அன்று நீர்கொழும்பில் ஒரு மின்மாற்றி முற்றாகத் தகர்க்கப்பட்டது. ■



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்தினப் போட்டியில் மோசடி?

## திருத்தி எழுதப்பட்ட தீர்ப்புகள்

(நமது நிருபர்)

திருக்கோணமலை கோட்டமட்டத்திலான தமிழ் மொழிதினப் போட்டிகளில் பல குளறுபடிகள் நடந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

குறிப்பாக நாட்டிய நாடகப் போட்டியில் தீர்ப்புக்களைத் திருத்தி எழுதும் பணியில் போட்டி அமைப்பாளர்கள் ஈடுபட்டிருந்ததாகப் பல பாடசாலைகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

21.05.98இல் நடைபெற்ற நாட்டிய நாடகப் போட்டியில் மூன்று பாடசாலைகள் கலந்து கொண்டன. உடனே அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

அடுத்தநாள் போட்டி அமைப்பாளர் க. தங்கராசாவால் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட ரிர்/ரிஅ/1 இலக்கக் கடிதத்தின் பிரகாரம் போட்டி முடிவுகள் இரத்துச் செய்யப்பட்டதோடு, 24ம் திகதி போட்டிகள் மீள நடைபெறும் எனவும் கூறப்பட்டிருந்தது. போட்டி முடிவுகள் இரத்துச் செய்யப்பட்டதற்குக் கூறப்பட்ட காரணம் நாடக விதிமுறைகள் பேணப்படாமையும் நடுவர்களுக்கு வழங்கப்பட்ட புள்ளியிடற் படிவத்தில் ஏற்பட்ட தவறுகளுமே எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடித வாசகங்களின் படி, நாடக விதிமுறைகளை அறியாமலேயே நடுவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதையும், மூன்றே மூன்று போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கு புள்ளியிடற் படிவம் தயாரிக்கத் தெரியாதவர்களாகக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் இருந்துள்ளார்கள் என்பதையும் திரு. தங்கராசா ஒப்புக் கொண்டுள்ளார்.

**சிவப்பும் நீலமும்**

முரசுக்குக் கிடைத்த தகவல்களின்படி நடுவர்களுக்குப் புள்ளியிடுவதற்காகச் சிவப்புப் பேனாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனினும் ஒரு படிவம் எவ்வாறு நீலப்பேனாவால் புள்ளியிடப்பட்டது என்ற குழப்பமும் போட்டி அமைப்பாளர்களிடையே இருப்பதாகத் தெரியவருவதுடன், திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரால் முந்நூறு புள்ளிகளை ஒழுங்காகக் கூட்டத் தெரியாது போய்விட்டதே என்ற ஆதங்கம் எழுந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இரண்டாவது தடவையாக நாட்டிய நாடகப் போட்டி-பிறிதொரு கடிதத்தின்படி 25ம் திகதியே நடைபெற்றது. போட்டியில் இடம்பெற்ற ஒழுங்கீனங்களை விசாரிக்கக் கோரி இரண்டு பாடசாலைகள் காட்டிய எதிர்ப்புக்கள் திணைக்களத்தால் உதாசீனப்படுத்தப்பட்டதால் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும், விவேகானந்தா கல்லூரியும் மீள்போட்டியில் பங்குபற்றவில்லை. எனினும் மூன்றாவது பாடசாலை தனியாகவே போட்டியில் பங்குபற்றி முதலாவது பரிசையும் தட்டிக் கொண்டது.

**தொடர் ஏமாற்றம்**

மெதடிஸ்த பெண்கள் கல்லூரி கடந்த காலங்களிலும் இரண்டு தடவைகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கிறது. இது மூன்றாவது தடவை என்று கூறும் பெற்றோர்கள், "கல்வித் திணைக்கள அதிகாரிகளின் திறமைக்குறைவும் கையாலாகாத தன்மையும் எங்கள் குழந்தைகளின் மனோநிலையையல்லவா பாதிக்க வைக்கிறது!" என்றும் தெரிவிக்கிறார்கள்.

"இம்முறை இடம்பெற்ற போட்டிகளில் பல தில்லுமுல்லுகள் நடைபெற்றிருக்கின்றன. முதலாவதாக வந்த எங்கள் நிகழ்ச்சியை நாங்கள் அடுத்த மட்டப்போட்டிகளுக்கு அனுப்புவதில்லையென்றும் இனிமேல் வரும் காலங்களில் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் கலந்து கொள்வதில்லையென்றும் ஏகமனதாக முடிவெடுத்துள்ளோம்!" என்று விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் முரசு நிருபரிடம் தெரிவித்தார்.

# ஆட்கள் இல்லாத போராட்டம்?



சுமார் அறுபது இலட்சரூபா செலவில் திருக்கோணமலை நகராட்சி மன்றத்தால் கட்டி முடிக்கப்பட்ட புதிய சந்தையைத் திறப்பதற்கு அடாத்தான ஜனநாயக விரோத முட்டுக்கட்டைகள் போடப்படுவதைக் கண்டித்து நகராட்சிமன்ற உபதலைவர்களாலும் உறுப்பினர்களாலும் 20.05.98ல் பணிமனைக்கு முன்பாக வீதியோரத்தில் நடத்தப்பட்ட ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தின்போது எடுத்த படம் இது.

உண்ணாவிரதிகளால் நகரபிதாவிடம் கையளிக்கப்பட்ட மகஜர் உடனடியாக மேலிடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. முரசுக்குக் கிடைத்த தகவலின்படி உள்ளூராட்சி ஆணையாளர் அனுப்பி வைத்த பதிலின் சாரம்- "இராணுவ இணைப்பதிகாரியுடன் பேசித் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்!" என்ற ஆலோசனை மட்டுமே!

உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அணி திரளுமாறு தலைவர் துண்டுப் பிரசுரம் மூலம் பலதரப்பாரையும் கோரியிருந்தார். ஆனால் பதினைந்து பேரைத் தாண்டவில்லை.

"இவர்கள் தங்கள் அரசியல் நலனுக்காகப் போராட்டம் என்பர். பின்னர் சமரசம் செய்து விட்டுக்கொடுப்பர். நாம் ஏன் இவர்கள் பின்னால் செல்ல வேண்டும்?" என்று கருதியே மக்கள் எட்டிப் பார்க்கவில்லையாம்.

# அமைச்சர் – அதிகாரிகள் இழுபறி

## மாகாண கல்வி அமைச்சு தடுமாற்றம்

(நமது நிருபர்)

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவருக்கும் மாகாண கல்வி அமைச்சர்களுள் ஒருவருக்கும் இடையில் நிலவும் கருத்து வேறுபாடுகளினால் எழுந்துள்ள சர்ச்சையினால் சில தமிழ்ப் பாடசாலை அதிபர்கள் தாம் விரும்பிய மாதிரி செயற்படுகிறார்களாம்.

அமைச்சர் ஒருவர் தமது அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ய முற்பட்டதும் இந்த லடாய்தான் பின்னணியாக இருப்பதாக பரவலாக கல்வி வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

மலையகத்தில் சுமார் 430 தமிழ்ப் பாடசாலைகள் இயங்கும் இத்தறுவாயில் இப்பாடசாலைகள் பலவற்றில் அரசியல் தலையீடுகள் காரணமாக நிருவாகச் சீர்கேட்டையும் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். தமிழ்ப் பாடசாலைகளில் மாணவர்களின் கல்வியை உயர்த்துவதற்கு பலரும் வேண்டுகோள்கள் விடுக்கும் இவ்வேளையில் தாம் நினைத்தமாதிரி எந்த ஒரு கருமத்தையும் செய்ய முடியாதுள்ளது. அதுமட்டுமன்றி மத்திய மாகாண கல்வி அமைச்சுக்குத் தனியான ஒரு செயலாளர் இயங்கும் வேளையில் சகல சந்தர்ப்பங்களிலும் அவரது அனுசரணையுடனேயே பணியாற்ற வேண்டி இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சில பாடசாலைகளில் அதிபர்கள் தாம் விரும்பிய மாதிரி செயற்படுவதுடன், அது மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் பலமுறைப்பாடுகள் தமிழ் கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அமைச்சர்களின் கட்டளைப்படி இயங்குவதா? அல்லது திணைக்கள விதிகளுக்குக் கட்டுப்பட்டு அதற்கேற்ப தொழிற்படுவதா? என்ற இருநோக்குச் செயற்பாடுகளினால் பல எதிர்விளைவுகளை மாகாண கல்வி அமைச்சு எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது.

# நாய்கள் தயார்!

(கண்டி நிருபர்)

மோப்பம்பிடித்து குற்றச் செயல்களைத் துப்புத் துலக்க உதவும் பொலிஸ் நாய்களின் சேவை நாடுபூராவும் பரவலாக்கப்பட உள்ளது.

குண்டு வெடிப்பு, போதைப் பொருள். திருட்டு மற்றும் கொலைச்சம்பவங்கள் தொடர்பாக இதில் விசேட பயிற்சியளிக்கப்படும் நாய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்.

கண்டி அஸ்கிரியாவில்தான் இவ்வாறு மோப்பம்பிடிக்கும் நாய்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. தலைமையகமும் இங்கு தான் உண்டு. இப்பொழுது தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்த நாய்ப்பயிற்சி பொலிஸ் பிரிவு பல புதிய நடைமுறைகளை மேற்கொள்ள இருக்கின்றது.

# பொலிஸார் நடத்திய பதிலடி – பொது மக்கள் மீது சூடு

(திருமலை நிருபர்)

**23.05.98** காலை 7.15 மணியளவில் சாம்பல்தீவு சந்தியில் பஸ்ஸிற்காக காத்து நின்ற பொலிஸ்காரர் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ரத்நாயக்கா என்ற பெயருடைய இவர் அண்மையில் முதூர் பகுதியிலிருந்து புலிகளின் இராணுவ நடவடிக்கைகளில் தப்பி சாம்பல்தீவுக்கு மாற்றம் பெற்று வந்தவர் என அறியப்படுகிறது. காலையில் திருகோணமலையிலிருந்து வந்து திரும்பவிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்யக் காத்திருந்தார்.

திடீரென அங்கு வந்த விடுதலைப் புலிகள் இவரைச் சுட்டனர். தப்பியோட அவர் முனைந்த போதிலும் முடியாதுபோய்விட்டது. சுட்டவர்கள் உடனே திரும்பிவிட்டார்கள். முகாமுக்கு அருகிலேயே இவர் சுடப்பட்டிருக்கிறார்.

சரமாரியாக பொலிஸார் சுடத்தொடங்கினார்கள். சம்பவம் நடந்த இடத்திலிருந்து இருநூறு யார் தொலைவில் சாம்பல்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்தனர். 81 மாணவர்கள், 7 ஆசிரியர்கள், 2 பெற்றோர்கள், ஒரு சமையலாள் எனத் தொண்ணூற்றொரு பேர் இரண்டு பஸ்ஸில் ஏறிக்கொண்டிருந்தனர்.

அங்கு வந்த பொலிஸார் மாணவர்களுடன் பஸ்ஸைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டு இறந்தவரை அதிற்தூக்கிப் போட்டுத் தாமும் ஏறி திருகோணமலைக்கு விடச் சொன்னார்கள்.

இரண்டு பஸ்களும் ஒன்றன் பின் ஒன்றாகப் புறப்பட்டன. தெருவோரத்து வீட்டைச் சேர்ந்த ஒருவர் தமது வளவில் நின்றவாறே சுற்றுலா பஸ்ஸைப் பார்த்திருக்கிறார். விழுந்தது சூடு அவருக்கு. மாணவர்களுடன் பஸ்ஸிலிருந்த பொலிஸ்காரர் ஒருவரே சுட்டிருக்கிறார். ராசுக்குட்டி என்றழைக்கப்படும் வேலுப்பிள்ளை தவராச (31 வயது) அந்த இடத்திலேயே பலியானார்.

இடைவழியில் இறந்த உடல் பஸ்ஸிலிருந்து ஜீப்புக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அவ்வேளை அந்த இடத்துக்கு வந்த சீருடையில்லாத பொலிஸ்காரர் தூஷண வார்த்தைகளைப் பிரயோசித்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் பயமுறுத்தி இருக்கிறார்கள். மாணவர்கள் பஸ்ஸிலும், உடைகளிலும் பட்ட இரத் தக்கறைகளைக் கந்தளாய் குளத்தில் கழுவிவிட்டு சுற்றுலாவைத் தொடர்ந்தனர்.

# பிரதேச சபை சாதனை

(திருமலை நிருபர்)

**07.05.1998**ல் இடம்பெற்ற முதூர்ப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சியினால் கொண்டுவரப்பட்ட அனைத்துப் பிரேரணைகளும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட பிரேரணைகளின் மொத்த எண்ணிக்கை 69 ஆகும்.

இத் தோற்கடிப்பு முதூர்ப் பிரதேசசபை வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும் நடந்திராத சம்பவமாகும்.

இப்பிரதேச சபை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆளுங்கட்சியாகக்கொண்டு இயங்கி வருகிறது.


விளம்பரப் பகுதி

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**



அன்ரனிரா பெப்பஜூவா பெர்ணண்டோ
**Antoinetta Perpetua Fernando**

இலக்கம் 43/2 சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13ஐ சேர்ந்த ஜோசப பெர்ணண்டோ-ரெசில்டா தம்பதியினரின் செல்வப் புதல்வி **அன்ரனிரா பெப்பஜூவா பெர்ணண்டோ** 13.06.98ல் தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, ஞானப்பெற்றோர், தாத்தாமார், பாட்டிமார். அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மதினிமார் அனைவரும் புனித அந்தோனியார் அருள்பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

**மனோதத்துவ வைத்தியம்**

கொழும்பு விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது.
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
**வவுனியாவில்**
**ஜூன் 13,14ம் திகதிகளில்**
வவுனியாவில் 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் வீதி.
VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
**கொழும்பில் 5 நாட்கள் மட்டுமே தங்குவார்**
**ஜூன் 21முதல் 25 வரை**
**DR. P.ARUMUGAM**
BEAUTY LODGE
(ஐந்துலாம்படிச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ளது.)
67, A. Wolfendhal Street, Colombo-13.
Tel: 338165 - 338166 Fax- 338161
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் இல 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடிதத் தொடர்பு வைக்கவும்.

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

**தபால் மூலம் தையற்கலை.**
டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை பயிற்றுவிக்கப்படுகிறது. சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். பரீட்சை எழுதிய மாணவிகளுக்கு மாத்தளை நகரில் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதை அறியத் தருகிறோம்.
Director
**Mrs. Sithy Kamila Rafi**
7/1 Gongawala Road
MATALE

**45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



அமரர் சுப்பையா தங்கேஸ்வரன்
(சண்முகா ஏஜன்சி கணக்காளர்)

மலர்வு~19.02.1940 உதிர்வு~23.04.1998 திதி~06.06.1998

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்
அவணியில் நாம் வாழ்வாங்கு வாழ வைத்த
தெய்வம் நீங்கள்! உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் என்றும் நிலைக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய என் குணத்தாண்
தாள் போற்றுகின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் அனுதாபச் செய்திகளை கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தெரிவித்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்தியேட்டி கிரியைகள் 6.6.98ல் நடைபெற்றது.
மனைவி -அன்னபூரணி தங்கேஸ்வரன்– கொழும்பு T.P. No: 502270
பிள்ளைகள்– த. பரமேஸ்வரன்– சுவிஸ்
ஜெ. மணிமேகலா– சுவிஸ் T.P.No: 00411-7403385
த. விஜயகுமார்– கனடா T.P.No: 514-3420259
த. விஜயலோசனி– கொழும்பு– T.P.No: 502270
மருமகன்– எஸ். ஜெகநாதன்– சுவிஸ் T.P.No: 00411-7403385

**ஈராண்டு நினைவு**



சதாசிவம் சிறீகரன்[பாபுஜி]

மலர்வு: 08.07.1975 — உதிர்வு: 22.05.1996

ஈராண்டு ஆனாலும் எம் துயர் மாறாது, என்றும் உன் நினைவுகளோடும் உணர்வுகளோடும் கலந்து வாழும் அப்பா, அம்மா, அக்காமார், அத்தான், மருமகள்மார், அம்மம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: வை. சதாசிவம், பிரதான வீதி, களுதாவளை.4, களுவாஞ்சிக்குடி

**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில்
மகிழ்ச்சி பெறுவதற்கு,
மட்டக்களப்பு மாந்திரீக வசியம்
செய்து கொள்வதற்கு
பரம்பரை வைத்திய மனோதத்துவ
நிபுணர் டாக்டர் 'குட்டி'
அவர்களுடன் தொடர்பு
கொண்டு வெற்றி பெறுங்கள்.
இரகசியம் வெளியாகாது.
**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.



**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA**
**UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET,**
**MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தணிக்கை தணிக்காத சந்தேகங்கள்

கிளிநொச்சி நகரை சார்ந்த பகுதிகளில் 04.06.98 அன்று பெரும் சமர் மூண்டது.

இச் செய்திகள் வெளியான சூட்டோடு சூடாக செய்திதணிக்கை கொண்டு வரப்பட்டது.

**அதனால் மீதிச் செய்திகளை வெளியிடமுடியாமல் செய்தியாளர்கள் தடுக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி சமர் தொடர்பாக தமக்குக் கிடைத்த தகவல்களை செய்தியாக்கி தணிக்கைக்கு அனுப்பினார்கள் பத்திரிகையாளர்கள்.**

நூற்றுக்கு 90 வீதமான பகுதிகள் தணிக்கைக் கத்தரியின் இரக்கமற்ற பசிக்கு இரையாகின.

இதனால் கிளிநொச்சி சமர் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

**கிளிநொச்சியில் தொடரும் சமர் தொடர்பாகவும், ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் தொடர்பாகவும் புலிகள் விளக்கமாக தகவல்களை வெளியிட, வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் அதனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு உறுதி செய்துகொள்கின்றன. எனவே புலிகளது தகவல்களை பொய் என்று நிராகரிக்கவும் முடியாதுள்ளது.**

கடந்த ஒருவாரமாக இலங்கைக்குள் இருக்கும் செய்தி ஊடகங்களின் வாயை அடைத்து, கைகளைக்கட்டிப் போட்டு தடுத்த போதும், களமுனைச் செய்திகள் இங்கும், வெளியேயும் சுடச் சுட வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

ஆனாலும் சாதாரண சிங்கள மக்களுக்கு

**ஆக, செய்தித் தடை என்பது குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்ட கதைதான். இன்னமும் சிறப்பாக சொல்வதானால் பூனை கண்களை மூடிக்கொண்டு உலகமே இரண்டுவிட்டது என்று எண்ணிக் கொண்டு இருக்குமாமே, அது போன்றதுதான்.**

களமுனைச் செய்திகளை வெளியிடத் தடை போட்டகையோடு, இரத்த வங்கிகளுக்கு அவசர உதவி கேட்டு நாடெங்கும் அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

**கிளிநொச்சி சமரின் பின்னர் விடுக்கப்பட்ட இரத்ததான அவசர வேண்டுகோள்கள் சொல்லாமல் சொல்லும் செய்தியை எப்படி தடுப்பது?**

தலைநகரப் பொது மருத்துவமனை மற்றும் பல்வேறு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக சென்று வருவோர் கூறும்

தான் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றுக்கான பரீட்சார்த்த களம்.

பொதுஜன முன்னணிக்குள் சிறிமணி அணி மாகாண சபைத் தேர்தலில் பிய்த்துக் கொண்டுபோய் ஐ.தே.கட்சிக்குத்தான் ஆதரவு தரப்போகிறது.

**கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் வீசிய நீல அலையை இப்போது கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவே முடியவில்லை.**

ஆகவே, மறுபடி அலைவீச வைப்பதற்கான தேவை ஆளும் அணிக்கு இருக்கிறது. பல்லைக் கடித்தபடி ஒரு மாதமாவது இருந்தால், மூச்சுப் பிடித்து முயன்று வெற்றிக் காற்றை வீசச் செய்ய முடியாதா என்ற இறுதி நம்பிக்கையில் இருக்கிறது ஆளும்

தரப்பு.

**வாக்காளர் முன்பாக முஷ்டியை உயர்த்திக் காட்டவும், புஜபலத்தை தட்டிக் காண்பிக்கவும் கூடிய சூழலை உருவாக்க கணிசமான விலை கொடுக்கவும் ஆளும் தரப்பு தயாராகி விட்டது போல தோன்றுகிறது.**

தனது பிரசார சாதனங்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதை அரசு ஒப்புக்கொண்டுவிட்டது. அதனால்தான் ஏனைய செய்தி ஊடகங்களைக் கண்டு மிரள்கிறது.

**மாபெரும் பிரசார பலம் கையில் இருந்தும், அவற்றால் தன்னை தற்காத்துக் கொள்ள முடியாத நிலையில்தான், ஏனைய செய்தி ஊடகங்களை நிராயுதபாணியாக்கியுள்ளது அரசு.**

செய்தி தடை அறிவிப்புக்கு முன்னர் புறப்பாடுகள், கைப்பற்றல்கள் பற்றி திசை

தொடர்பாக தென்னிலங்கை மக்களிடம் கூட பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மக்கள் இப்போது அனுபவப்பட்டு விட்டனர். அதனால் ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற சாதாரண கணக்கு அவர்களுக்குத் தெரியாமல் போகுமா?

**இதற்கிடையே தலைநகரில் மணிக்கு பத்துக்குக் குறையாத ஆம்புலன்ஸ் வண்டிகள் 5ம் 6ம் திகதிகளில் கடுகதி வேகத்தில் ஓடுப்பட்டுத் திரிந்தன.**

**எந்தத் தணிக்கையாலும் ஆம்புலன்ஸ் வண்டிகள் எழுப்பும் அபாய ஒலிகளை தடை செய்ய முடியாது.**

கொழும்புக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வந்து போகிறார்கள்.

அவர்கள் மூலம் ஆம்புலன்ஸ் ஒலிகளும், ஒரு மணி நேரத்தில் மட்டும் எத்தனை ஆம்புலன்ஸ்கள் ஓடுகின்றன என்ற தகவலும் வாய்வழியாக நாடு பூராவும் பரவிவிடும்.

சாதாரண காலங்களைவிட தணிக்கைகள் உள்ள காலங்களில்தான் வாய்வழிச் செய்திகளுக்கு மவுசு அதிகம்.

**பத்திரிகைகள் மூலமும், ஏனைய செய்தி ஊடகங்கள் மூலமும் வெளியாகும் செய்திகள் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட, வாய்வழிச் செய்திகள் ஏற்படுத்தும் தாக்கம் பல மடங்கு அதிகம்.**

கிளிநொச்சி சமர் செய்திகளை செய்தி ஊடகங்கள் சுதந்திரமாக வெளியிட அனுமதித்திருந்தால் அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பைவிட, ஊகங்களாகவும், வதந்திகளாகவும், அரைகுறைச் செய்திகளூடாகவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பாதிப்பு பன்மடங்காகும்.

**செய்தித் தணிக்கையால் இலங்கைக்குள் உள்ள செய்தி ஊடகங்கள் மட்டும்தான் பாதிக்கப்படுகின்றன.**

இலங்கை செய்தி ஊடகங்கள் போர்க்கள நிலவரத்தை வெளியிடுவதை மட்டுமே தடுக்க முடியும். இலங்கை மக்கள் தகவல்கள் அறிவதற்காக இங்குள்ள செய்தி ஊடகங்களை மட்டும் நம்பியிருக்க வேண்டிய காலமல்ல இது.

**வெளிநாட்டு செய்தி ஊடகங்கள் வான்வழியாக வந்து செவியில் பாய்வதை எந்த செய்தித் தடையும் தடுத்து நிறுத்த முடியாது.**

அதேபோல இலங்கையில் இருந்து போர்முனைச் செய்திகள் உலகெங்கும் பறந்து செல்வதையும் செய்தித் தடை தடை செய்ய இயலாது.

**சற்றலைட் தொலைபேசி ஊடாக புலிகளின் தகவல்கள் வன்னியில் இருந்து உலகெங்கும் உள்ள புலிகளது கிளைகளுக்கு பறந்து செல்கின்றன.**

புலிகளின் கிளைகள் அவற்றை இன்டர் நெட் முதற்கொண்டு சகல செய்தி ஊடகங்கள் ஊடாகவும்



# பத்துத் தலையும் இருபது கைகளும்

வெளிநாட்டு செய்தி ஊடகத் தகவல்கள் எட்டாது என்று அரசு கருதக்கூடும். அல்லது, திருப்திப்படக்கூடும்.

ஏனெனில் சிங்கள மொழியில் நம்பகமான வெளிநாட்டு செய்திச் சேவைகள் அரிதாகவே உள்ளன.

**பி.பி.சி. வானொலி சிங்களச் சேவை பிரபலமானது. ஆனால் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலைவரிசையில் ஒலிபரப்பாக தொடங்கிய பின்னர், பி.பி.சி.யின் செய்திகளில் சமரசத் தன்மை தெரிகிறது.**

தற்போது செய்தித் தணிக்கை இருப்பதால், செய்திகளை வடிகட்டும் கட்டாயம் பி.பி.சிக்கும் ஏற்பட்டுள்ளது. இல்லையெனில் இலங்கை அரச வானொலியின் அலைவரிசை ஊடாக ஒலிபரப்ப முடியாமல் போகும்.

**ஆனால் தனது நம்பகத்தன்மையை காப்பாற்ற பி.பி.சி. முடிந்தவரை முயற்சிக்கிறது. 08.06.98 இரவு அரச வானொலியூடாக ஒலிபரப்பான பி.பி.சி. சிங்களச் செய்தியில் புலிகளால் கைப்பற்றப்பட்ட 70 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.**

மேற்கண்ட செய்தி ஒலிபரப்பாக இலங்கை அரசு அனுமதிக்க வேண்டியதாகியது. ஆனால் செய்தியில் அச்செய்தி ஒலிபரப்பாகவில்லை.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், மற்றும் அரசவானொலிகள் தங்கள் சொந்த செய்தி அறிக்கையில் புலிகள் தரப்பு இழப்புக்களை மட்டும் கூறின.

5.6.98 அன்று நடந்த சமரில் 42 புலிகள் பலியானதாக புலிகளின் குரல் அறிவித்த தகவலை மட்டும் ரூபவாஹினி 07.6.98 அன்று மாலைத் தமிழ்ச் செய்திகளில் தெரிவித்திருந்தது.

தகவல்களும் நிலவரம் எத்தனை தீவிரம் என்பதை உணர்த்துகின்றன.

08.06.98 அன்று கொழும்பு மயூராபதி அம்மன் ஆலயம் முன்பாக வேன் ஒன்று மோதி சிறுமி ஒருத்தி காயமடைந்தாள்.

**உடனடியாக கொழும்பு பொதுமருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டாள். அங்கு அனுமதிக்க மறுத்துவிட்டனர். சிகிச்சைக்கு அனுமதிக்க இடப்பற்றாக்குறை இருப்பதாக கூறப்பட்டதாம். அது உண்மைதான் என்று கண்ணால் கண்டனராம். அதனால் பிரச்சனைப் படாமல் திரும்பினர்.**

மொத்தத்தில் ஒரே குழப்பம். ஆனால் குழப்பம் மக்களுக்கல்ல. அரசுதான் குழப்பத்தில் சிக்கி இருக்கிறது.

**கணிப்புக்கள் தொடர்ந்து பொய்யாகி, காலநிலை கணிப்புகளுக்கு நேர்மாறாகி, 'உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா' ,என்ற கதையாகாமல் எப்படி சமாளிக்கலாம் என்பதுதான் அரசின் இன்றைய தலைவலி.**

பொதுஜன முன்னணியின் மாகாண சபைத் தேர்தல் வியூகத்திற்கு ஏற்ற எதிர்பார்ப்புக்கள் சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் இருப்பதால்தான் இராணுவத் தணிக்கை கொண்டுவரப்பட்டுள்ளது. அதிர்ச்சியால் ஏற்பட்ட அவசர முடிவா இது என்று கேள்விகள் தொடுக்கப்படுகின்றன.

**ஏறிவிடலாம் என்ற நம்பிக்கையில் பல நாள் முயன்று, தினம் ஒரு பாதையால் மலை ஏறினாலும் பாறைகள் எதிர்பாராமல் உருண்டுவர, மலையுச்சிக்கு செல்ல முயன்றவர்களின் தலை உச்சிக்கே ஆபத்தாகி விடுவதும் உண்டு. அவ்வாறு உச்சிக்கு ஆபத்து வரும்போது அதிர்ச்சி ஏற்படுவது இயல்பு. அதுதான் இன்றைய நிலவரம்.**

பொதுஜன முன்னணி மாகாண சபைத் தேர்தல் வெற்றியை எப்படியாவது பெற்றுவிடத் துடிக்கிறது. ஏனெனில் இத் தேர்தல்

தெரியாத தகவல்கள் தப்புத் தப்பாக வெளியாகிக் கொண்டிருந்தன. அவற்றை பத்திரிகைகளும் பிரசுரித்திருந்தன.

அவற்றை உறுதிப்படுத்தி, உண்மை, பொய்யை அதே பத்திரிகைகள் ஆராய முன்னர் செய்தித் தடை பாய்ந்து வந்து விட்டது.

ஆனால், தற்போதைய செய்தித் தடை

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசுக்கு சேதத்தையே ஏற்படுத்தி உள்ளது.

நிலவரங்கள் தமக்கு சார்பாக அமையாததால், தவிர்க்க முடியாமல் தமது ஜனநாயக முகங்களை ஆட்சியாளர்கள் கழற்றி வைக்க வேண்டி இருக்கிறது.

**பத்துத்தலை இராவணன் போல சென்ற கால ஆட்சி அணிந்திருந்த தலைகள் கழற்றிவைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அணிந்து கொள்வதைத்தவிர இன்றைய அரசுக்கு வேறு வழி எதுவுமில்லை.**

பத்துத் தலையும் இருபது கையும் இருந்தாலாவது தங்கள் எண்ணப்படி தேரை நகர்த்தி நினைத்த இடத்தில் கொண்டுபோய் நிறுத்தலாமா என்று ஆதங்கம்

தமது பழைய தோற்றத்துடன் தேரை நகர்த்தி தாம் நினைத்த இடத்தில் கொண்டுபோய் நிறுத்த வேண்டுமானால், தேர் நகரும் பாதையில் தடைகள் இருக்கக் கூடாது.

**ஆனால் இங்கோ கடும் தடைகள் குறுக்கே நிற்கின்றன. தேர் நகரமாட்டாமல் தடுமாறுகிறது. வடம்பிடிக்க தடம் தெரியவில்லை. தேரை நகர்த்த முடியாமைக்கு காரணம் சொல்லியும் சலித்தாகிவிட்டது.**

சலிப்பும் ஆத்திரம் ஏற்படுத்தும். ஆத்திரம் கண்ணை மறைக்கும். இங்கே செய்தியை மறைத்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் முக்கால் முனகியுள்ளார். களத்தில், வெற்றி என்கிறார்கள் பின்னர் ஏன் தணிக்கை போடுகிறார்கள். இது சந்தேகத்தை அன்றோ தருகிறது என்கிறார்.

இதற்கு மேல் அவர் பேசமுடியாது. ஏனெனில் செய்தித்தடை பல போட்ட செம்மல்கள் அவர்களும்தான்.

செய்தி ஊடகங்களின் சுதந்திரம் இன்று அவர்களுக்கு உபயோகம். புலிகள் மீதான வெற்றியை பொதுஜன முன்னணி நாடுவதால், புலிகளின் வெற்றியை மனதுக்குள் விரும்புகிறது ஐ.தே.கட்சி. எல்லாமே குறுகிய அரசியல்தான்.


ஆக, செய்தித் தடைக்கு எதிரான அக்கட்சித் தலைவரின் முனகலை உண்மையான வருத்தம் என்று நம்பலாம்.

நாரதர்

## இன்னிங்ஸ் வெற்றி

போர்முனை அலசல் கூடாது என்பதால், இந்தவாரம் கிரிக்கெட் ஆராய்ச்சி.

முதலில் களம் இறங்கிய அணிக்கே வெற்றிவாய்ப்பு என்று நம்பப்பட்டது. நம்பிக்கையுடன் துடுப்பெடுத்து ஆடியது அந்த அணி.



ஆனால் பொறுமையாக களத் தடுப்பு (பீல்டிங்) செய்த மறு அணி துடுப்பாட்டத்திற்கு வாய்ப்புக் கிடைத்ததும் விளாசத் தொடங்கியது.

களமும் புதிது என்பதால் (காலி மைதானம்) முதல் புகுந்த அணியால் ஓட்டங்களை குவித்து ஸ்கோரை உயர்த்தவும் முடியவில்லை. களத்துக்கு ஏற்ப பந்துவீசி விக்கெட்டுக்களை சாய்க்கவும் முடியவில்லை.

என்னதான் இருந்தாலும் மறு அணி தனக்கு பரிச்சயமான மண்ணில் ஆடியதால், புதிய களம் அதற்கு பிரச்சனையாக இருக்கவில்லை.

எட்ட முடியாத ஸ்கோர் என்பதால் முதல் அணி தோல்வியுடன் ஆட்டத்தை முடித்தது. மறு அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி.

ஆம், நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி காட்சிகள்தான் அவை.

தோற்றது நியூசிலாந்து அணி தற்போதெல்லாம் கிரிக்கெட் நாடுகளுக்கிடையே நடைபெறும் சமர் போல கருதப்படுகிறது. இரசிகர்களுக்கும் வெறி வந்துவிடுகிறது.

இரு அணிகளும் மூன்றாவது டெஸ்ட்டில் மோத ஆரம்பித்துள்ளன. வெற்றி யாருக்கு?

## அதிரடி அப்பாத்துரை



**வெல்வெட்டுக்கு** ஒரு காலத்தில் பேர்போன பகுதியில் கெடுபிடிகளை அதிகரித்துள்ளார்களாம். இரவிரவாக கதவு தட்டப்படுமாம். ஒரே அலசலாம். 'நடந்த சம்பவத்துக்கு நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும்!' எனக் கூறப்படுகிறதாம். பாவம் மக்கள்.

**'ரெண்டு எழுத்தார்'** நடமாட்டம் அதிகமான பின்னர்தான் யாழிலுள்ள தமிழ்க் கட்சிகள் அரவணைக்கப்படுகிறதாம். முன்னர் புறங்கையால் அலட்சியம் பண்ணி 'கட்டளை' போட்டவையெல்லாம், "'ஆய்போவன்' சொல்லுகினம்" என்று தமிழ்க்கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார். பார்த்தியளோ தமிழ்க் கட்சிகளுக்கு ஆங்காங்கே மவுசு ஏற்படவும் ரெண்டு எழுத்தாரின் காரியங்கள்தான் தேவையாக இருக்குது!

**யாழ் மாநகரசபையில்** பதவியை தலையைச் சுற்றிப் போட்டு விட்டெறிந்த பெண்மணி உதிர்த்த முத்து: "அவவுக்கு என்றாலும் பிள்ளைகள் இல்லை; எனக்கு அப்படியோ? அதுதான் தூக்கிப் போட்டுவிட்டேன்!"

**குட்டிச் சபைகளில்** மேலும் பலர் கடிதங்களை அடித்து தயார் நிலையில் வைச்சிருக்கினமாம். அங்காலை இங்காலை சத்தம் கித்தம் கேட்டால், பதவி ஆசையை சுத்தமாகத் துடைத்தெறிந்துபோட்டு கடிதத்தை நீட்ட ரெடிப் பொசிசனில் இருக்கினமாம். கடும் புத்திசாலிகளப்பா!

**முன்னணியில் நின்று** பாடுபட்டோர் அனைவருக்கும் ரெண்டு எழுத்துத் தலைவர் கௌரவம் வழங்கிப் பாராட்டினாராம். அதனால் கடும் உற்சாகமடைந்தனராம். பரிசுகள் பெற்றவர்கள் மகிழ்ச்சியில் திளைக்க, ஏனையோரும் பரிசு பெறும் ஆவலில் சுறுசுறுப்பாக இருக்கினம்போல கிடக்கு!

**வெளிநாடு செல்ல** ஸ்பொன்சர் கிடைத்தாலும், பொலிஸாரின் கிளியரன்ஸ் கடிதம் கேட்கினமாம் வெளிநாட்டுத் தூதரகங்கள்! கிளியரன்ஸ் எடுப்பது என்றால் கையடையாளம் சரிபார்க்க, காலடையாளம் சரிபார்க்க என்று அலையவேண்டிக் கிடக்கு. அதற்குள் ஸ்பொன்சர் காலாவதியாகினாலும் ஆச்சரியமில்லை என்கிறார் அலைந்து அலுத்த ஒருவர். தூதரகங்களுக்கு உதெல்லாம் எங்கே தெரியப்போகுது?

**'கொழும்பு கற்பகம்'** முன்னால் கொஞ்சம் அம்மணிகள், கொஞ்சம் சுலோகங்களுடன் கூடி நின்று அரச தொடர்பு சாதனங்களுக்கு போஸ் கொடுத்தவை. 'ஆயுத அரசியல் ஒழிக'வாம். நெஞ்சம் பொறுக்குதில்லையாம். அதே நாள் யாழில் ஒரு இளம் பெண் அநியாயமாகப் பலியானவரல்லோ? அப்படியான சம்பவங்களை மட்டும் நெஞ்சு பொறுக்குதாக்கும்! இன்னொரு விஷயம்: 'ஆயுத அரசியல் ஒழிக' என்று சுலோகம் தூக்கிய அம்மணிகள் சிலரது பின்னணியில் ஆயுதங்களில் நிழல் தெரிந்ததை யார் அறிவாரோ?!

**வெளிநாடு ஒன்றில்** ரெண்டு எழுத்தாருக்கு மாறான இயக்கம் ஒன்றின் பிரதிநிதியுடன் அந்த நாட்டு பொலிசார் பேசிக் கொண்டிருந்தவையாம். "ரெண்டு எழுத்தாரால் உமக்குப் பிரச்சனை வரக்கூடும்," என்றனராம். "கதவைப் பூட்டிவிட்டுத்தான் இருக்கிறேன்," என்றாராம். அதற்கு ஒரு பொலிஸ்காரர் சொன்னாராம்: "உமக்குத் தெரியுமா- காற்றுப் புக ஒரு வழியிருந்தாலும் அதன் வழியே ரெண்டு எழுத்தார் வருவார்கள்!"

**'இண்டர் நெட்'டில்** 'தமிழ் நெட்' என்ற ஒன்று வெளியாகிறது. தலைநகரில் உள்ள தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர்தான் முக்கிய பங்கு வகிக்கிறார். நன்மை எவர் செய்மினும் பாராட்டலாம்!

**யாழில் தமிழ்க் கட்சி** ஒன்று அந்தக்கால ஞாபகத்தில் அறிக்கை விட்டிருக்கிறதாம். "மாணவ, மாணவிகள் பண்பாட்டை காக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறியுள்ளனராம். அதனை பார்த்துவிட்டு ஒருவர் சொன்னது இது: "இவை ஓடும் 'திரில்' வாகன ஓட்டங்களில் இருந்து பெண்கள் தப்பினால் போதும், அதுவே பெரிய காரியம்."

**குடாநாட்டு சீருடை** அதிகாரி ஒருவர் நடத்திய கூட்டத்தில், பேசவேண்டிய 'சப்ஜெக்டை' விட்டுப்போட்டு, "சேர் உங்கள் பாதுகாப்பு முக்கியம், கவனம் சேர் கவனம், சேர் பத்திரம் சேர்" என்று தமிழ்க் கட்சி பிரதிநிதி ஒருவர் காட்டிய கடும் லொள்ளுத் தாங்காமல் அதிகாரியே கடுப்பாகிவிட்டாராம். வெளியே ஹிட் அறிக்கை! உள்ளே ஐஸ் ஒத்தடம்! ரெல்...ரெல்...ரெல்லுங்கோ!

**இவ்வாரம்** குட்டிக் கவிதை:

**செருப்பு**

**"என்னைப் போலத்தான்**
**உன் வாழ்வின் ஆயுளும்**
**தேய்ந்துகொண்டிருக்கிறது**
**என்பதை உணர்த்தும்**
**தத்துவப் பொருள்"**



படிப்பகம்

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது




**வ**டக்கு-கிழக்கு மாகாணசபையை கலைக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் அங்கு தேர்தல் நடந்தால் புலிகளின் மக்கள் முன்னணி போட்டியிடும் என்றும் புலிகள் கூறிவந்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கு பிரேமதாசாவும் விரும்பினார்.

**அமிர்தலிங்கத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்டபோது, திருமலையில் வைத்து நடத்தப்பட்ட செருப்பு வீச்சை அவர் மறக்கவில்லை.**

'வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரான வரதராஜப் பெருமாள் நாட்டை

வடக்கு-கிழக்கு மாகாண சபைக் கலைப்புடன் மிக முக்கியமான உண்மை ஒன்றை புலிகள் நிரூபித்தனர்.

**இலங்கை அரசு தனது படைபலம் மற்றும் பலம், வளம் கொண்டு முயன்றால் என்ன, வேறு பலம் பொருந்திய வல்லாதிக்க துணைகளை நாடினால் என்ன, விடுதலைப் புலிகள் பங்குகொள்ளாத, தீர்வுகள் பயனளிக்க மாட்டாது.**

வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பிற்கு பின்னர் அரச படைகளுடன் புலிகளின் முறுகல் நிலை தீவிரமானது.

வவுனியாவில் படையினருடன் புலிகளுக்கு பிரச்சனை ஏற்பட்டது. முகாம்களை

### மூவரைப் பிடித்தனர்

மட்டக்களப்பு கல்முனையில் மூன்று இராணுவத்தினர் புலிகளால் பிடிக்கப்பட்டனர்.

அந்த மூன்றுபேரும் கல்முனை மாடிவீட்டு இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள்.

**முகாம் பொறுப்பதிகாரிக்கு தெரியாமல் முகாமிலிருந்து நைசாக நழுவி குடியிருப்புப் பகுதிகளுக்கு அவர்கள் சென்றபோது புலிகளிடம் மாட்டிக்கொண்டனர்.**

தாம் வந்த நோக்கத்தை கூறமுடியாத தர்மசங்கடமான நிலையில் அவர்கள் தடு

"1948ம் ஆண்டில் இருந்த சிங்கள இனவாத அரசால் குடியுரிமை வாக்குரிமை ஆகியன பறிக்கப்பட்ட தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டும், வாழ்விடங்களைவிட்டு கலைக்கப்பட்டும் வருகிறார்கள்.

மலையக மக்களை கலந்து பேசாமல் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் அவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

**மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்வோர்கள் தமது சுயநலனுக்காக தம் மக்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள்" என்று அறிக்கையில் சாடியிருந்தனர்.**

இ.தொ.கா.மீதும், அதன் தலைமைமீதும்

இருக்கிறோம்.

இலங்கை அரசு இனப் பிரச்சனை தொடர்பாக எங்களுடனும், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டும்." என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பிரேமதாசாவுக்கும் அவர் ஒரு கடிதம் எழுதினார்.

பேச்சு நடத்த தம்மை அழைக்குமாறு கூறிய பிரேமச்சந்திரன், அந்த கடிதத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

**'பேச்சுவார்த்தையில் அந்தரங்கத்தையும் இரகசியத்தையும் நாம் பாதுகாப்போம்.'**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அத்தனைதூரம் கேட்டுக் கொண்டதால், பிரேமதாசா அரசு அவர்களுடன் பேச்சு நடத்த முன் வந்தது.

• முதற்கட்ட பேச்சின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கொடுத்த செய்தி: "பேச்சு திருப்தி அளிக்கும் பட்சத்தில் வரதராஜப் பெருமாளும் பத்மநாபாவும் வந்து கலந்து கொள்வர்"

எனினும் பின்னர் அம் முயற்சி கைகூடவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புடன் பேச்சு நடத்தியதை புலிகள் காட்டமாக எதிர்த்தனர்.

பின்னர் புலிகள் அரசு பேச்சு முறிந்தபின்னர், பிரேமதாசா அரசு ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்களுடன் நெருக்கத்தை அதிகரித்தது. அதிலும் ஈ.பி.டி.பி.யுடனேயே அதிக நெருக்கம் ஏற்பட்டது.

அதனால் பிரேமதாசா அரசுடன் நின்ற இயக்கங்களை பிரேமதாசாவின் செல்லப் பிள்ளைகள் என்று பின்னர்

# முன்னேறிய படைகளை

விட்டுச் சென்றுவிட்டார். எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. எனவே செயற்படாத மாகாண சபையை கலைப்பதில் தவறு இல்லை என்று கூறியது அரசு.

ஆனால் மாகாண சபையை கலைத்து தேர்தல் நடத்த சட்டத்தில் இடமில்லை.' எனவே அதற்கு வழிசெய்யும் சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

**வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது.**

கலைப்பு நடந்தபோது வடக்கு-கிழக்கு மாகாணசபை முதல்வர் வரதராஜப் பெருமாள் இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில், கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பில், தனக்காக ஒதுக்கப்பட்ட தனி மாளிகையில் இருந்தார்.

### கலைப்பும் மகிழ்ச்சியும்

மாகாண சபையை கலைத்து தேர்தல் நடத்தினால் பங்கு கொள்ளலாம் என்று மாத்தையா, யோகி ஆகியோர் கூறிய



புலிகள் தொடுத்த மறைமுகமான தாக்குதலே அதுவாகும்.

இ.தொ.காவுக்கு மாற்றாக மலையக மக்கள் முன்னணி உருவாகும் என்று புலிகள் மட்டுமன்றி பலரும் அன்று எதிர்பார்த்தனர்.

**இன்று பாராளுமன்ற மாயையில் மலையக மக்கள் முன்னணியும் அதன் தலைவரும் மீளமுடியாமல் சிக்கிவிட்டதாகவே தெரிகிறது.**

புலிகளின் மக்கள் முன்னணி நடத்திய கரிநாள் பூரண வெற்றியளித்தது.

### பரவாயில்லை

**பிரேமதாசா அரசுடன் நட்புறவை ஏற்படுத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். விரும்பியது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் அந்த முயற்சியில் ஈடுபட்டார்.**

கொழும்பில் இருந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கை கொஞ்சம் அதிர்ச்சியானது:

**"வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது குறித்து நாம் கவலைப்படவில்லை. ஏனெனில் அது அதிகாரமில்லாத அமைப்பாகவே இருந்தது. வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு நியாயமான, நீதியான தேர்தல் நடத்தப்பட்டால் நாம் போட்டியிடத் தயாராக**

# தடுத்து நிறுத்திய புலிகள்

போதும், பிரபாகரன் அதனை விரும்பவில்லை.

**'தேர்தலில் போட்டியிடுவது இயக்கப் போராளிகளுக்கு சோர்வை ஏற்படுத்தும், அவர்களது போர்க்குணத்தை மழுங்கடிக்கும். சிங்கள அரசை நம்ப முடியாது. ஏமாற்றுவார்கள். பலம் இல்லையானால் பணியவே மாட்டார்கள்' என்பதே பிரபாகரனின் உறுதியான நம்பிக்கை.**

விட்டு வெளியேறிய படைகளை புலிகள் தடுத்து நிறுத்தினர்.

தமது முகாம்களை அண்டிய பகுதிகளில் புலிகள் பதுங்கு குழிகளை வெட்டி தயாராகிறார்கள் என்று வடக்கு-கிழக்கில் உள்ள படை அதிகாரிகள் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவுக்கும் தகவல்களை அனுப்பிக்

மாறியது புலிகளுக்கு சந்தேகத்தைக் கொடுத்துவிட்டது.

மூவரையும் பிடித்து தடுத்து வைத்தனர் புலிகள். முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் வெளியே சென்றதே தனக்கு தெரியாது என்று கூறிவிட்டார்.

இருவாரங்களுக்குப் பின்னர் மூன்று இராணுவத்தினரும் புலிகளால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். கேலி செய்தது.

புலிகள்-அரசு பேச்சு முறிவுக்கான பொறி மட்டக்களப்பில் கிளர்ந்தது.

போர் மூள அப்பொறி காரணமாகியது.

(தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

இதனை தனக்கு நெருக்கமானவர்களிடம் அடிக்கடி கூறியிருக்கிறார். ஆனால் மாகாண சபைக் கலைப்பு பிரபாகரனுக்கு ஒருவிதத்தில் மகிழ்ச்சி தான்.

இலங்கை-இந்திய அரசுகள் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதிகளுடன் கலந்து பேசாமல், கருத்து அறியாமல் கொண்டு வந்த அரைகுறைத் தீர்வுதான் மாகாண சபை.

இந்திய அரசு நடத்திய போலியான தேர்தல் மூலம் உருவானதுதான் வடக்கு-கிழக்கு மாகாணசபை.

**தீர்வும் தவறு, அதன் மூலம் உருவான சபையும் தவறு என்பதால், அவை உருவாகக் காரணமானவர்கள் மூலமே அவற்றை செயலிழக்கச் செய்யவேண்டும் என்று பிரபாகரன் நினைத்தார். அதனால்தான் மாகாணசபையை கலைத்தால் தேர்தலில் பங்குகொள்ள தயார் என்பதை தந்திரோபாயமான கோரிக்கையாக முன்வைக்க அனுமதித்தார்.**

அந்த வகையில் வடக்கு-கிழக்கு மாகாணசபைக் கலைப்பு பிரபாகரனுக்கு மகிழ்ச்சியே.

இந்தியப்படை அனுப்பப்பட்டது தவறு என்று ஒப்புக்கொண்டு, வி.பி.சிங் தலைமையிலான இந்திய அரசு தமது படைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு முன்னரே வாபஸ் பெற்றுக்கொண்டது.

**இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது எந்த அரசுக்களுக்கிடையே நடைபெற்றதோ, அந்த அரசுகளாலேயே பலி கொடுக்கப்பட்டது.**

கொண்டிருந்தனர்.

உத்தரவு வரும்வரை பொறுமையாக இருக்கும்படி கொழும்பில் இருந்து தகவல் போனது.

**வவுனியா பகுதியில் முன்னேற முயன்ற படையினரை புலிகள் தடுத்து நிறுத்தினார்கள்.**

மோதலுக்கு தயாரான சூழ்நிலை, எப்போது மோதல் வெடிக்கும் என்று எங்கும் பதற்றம் நிலவியது.

கொழும்பில் இருந்து அவசர உத்தரவு பறந்தது.

"முகாம்களுக்கு உடனே திரும்புக!"

அதனால் படைகள் திரும்பின. மோதல் தவிர்க்கப்பட்டது.

மறுபடி போர் மூண்டால் எவ்வாறு செயற்படுவது, எங்கெங்கு இலக்கு வைப்பது என்பதுதான் புலிகளின் சிந்தனை.

**போர் எப்படியும் மூளத்தான் போகிறது. மூண்டதும் நாம் முந்திக் கொள்ளவேண்டும், போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை மூலம் அரசாங்கம் பயனடைய விடக்கூடாது. பலனை நாம்தான் அறுவடை செய்து கொள்ள வேண்டும் என்று புலிகள் முடிவு செய்து கொண்டனர்.**

சர்வகட்சி மாநாடு என்று பிரேமதாசா காலத்தை இழுத்தடிப்பது, தமக்கு சாதகமான காலகட்டத்தில் மீண்டும் இராணுவ பலத்தை தமிழர்மீது கட்டவிழ்த்து விடுவதற்காகவே என்று புலிகள் கூறினர்.

காலத்தை இழுத்தடிப்பது மூலம் தமிழர்களது அரசியல் இராணுவ தலைமையை பலவீனப்படுத்தி சிதறடிப்பதே பிரேமதாசாவின் நோக்கம் எனறும் புலிகள் கூறினார்கள்.

### மலையகத்திற்காக

மலையக தமிழ் மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டபோது தந்தை செல்வா குரல் கொடுத்தார்.

அதனை கூட்டணியினர் அந்தக் காலத்தில் கூறாத மேடையில்லை. ஆனாலும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்ததுக்கு புறம்பாக வேறு வழிகளில் மலையக மக்களுக்காக கூட்டணியினர் போராடியதில்லை.

**திம்பு பேச்சுவார்த்தையில் மலையக மக்களுக்கான கோரிக்கையையும் சேர்த்து முன்வைத்ததும் ஏனைய போராளி இயக்கங்களேயாகும்.**

1990ல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மலையக மக்கள் மீதான இராணுவ கெடுபிடிகளை எதிர்த்து பூரண கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோதே, இக் கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் மலையக மக்கள் முன்னணிக்கும் புலிகளுக்கும் இடையே நட்பு ஏற்பட்டிருந்தது.

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன், பி.ஏ.காதர் ஆகியோர் புலிகளுடன் நெருக்கமான நட்பு கொள்ள தொடங்கியிருந்தனர்.

நுவரெலியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார்.

**இக்கால கட்டத்திலேயே 20.05.90 அன்று பூரண கரிநாள் அனுஷ்டித்தனர் புலிகளின் மக்கள் முன்னணி.**

புலிகளின் அரசியல் பிரிவான புலிகள் மக்கள் முன்னணி என்னும் பெயருக்கு ஒத்ததாகவே தமது அமைப்புக்கும் மலையக மக்கள் முன்னணி என்று சந்திரசேகரன், காதர் போன்றோர் பெயர்சூட்டினார்களோ தெரியவில்லை.

**மலையக மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறை, மலையக மக்களின் குடியுரிமை பறிப்பு என்பவற்றுக்கு எதிராக காட்டமான அறிக்கை விட்ட புலிகள், அந்த அறிக்கையில் குறிப்பிட்ட இன்னொரு விடயம் முக்கியமானது. அது இதுதான்:**

## விடுதலைப் புலிகளும் 'றோ'செய்த குளறுபடிகளும்

இலங்கைப்.பிரச்சனையில் 'றோ' நடத்திய குளறுபடிகளிலேயே மிகவும் அபத்தமானதாக அமைந்தது இடுப்பு எலும்பும் கை கால்களும் உடைந்து சிகிச்சைபெற்று வந்த சில விடுதலைப் புலிகளைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்து வைத்த நிகழ்ச்சியாகும். இந்தியாவில் பல்வேறு நகரங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களை இவர்கள் செய்யப் போவதாக்க் கூறப்பட்டது!

ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தம் போடப்பட்டு அமைதிப்படை புலிகள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்து ஓராண்டு கழித்து 1988 ஆகஸ்ட் மாதத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இருமுறை சென்னைக்கு வந்தார். அவர் புலிகளைக் கடுமையாக விமரிசித்துப் பேசிவிட்டுச் சென்ற அன்றிரவே சென்னையிலும் மதுரையிலும் 152 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டார்கள்.

**இவர்களில் பலரும் அரசாங்க மருத்துவ மனையிலிருந்து நேரே சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். சிறை பிடிக்கப்பட்ட அத்தனை பேரும் இந்தியாவுக்குக் கள்ளத் தோணியில் வந்ததாகவும், இங்கே வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் டிடென்ஷன் ஆர்டரில் கூறப்பட்டது.**

ஆனால் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வந்த இவர்களில் பலரையும் இங்கு அழைத்து வந்ததே இந்திய அரசாங்கம்தான்! 1987 ஆகஸ்ட் 12ஆம் திகதியன்று சிங்கள இராணுவத் தாக்குதலில் காயமடைந்த 15 விடுதலைப் புலிகளை இந்திய விமானப்படை ஹெலிகொப்டரில் மதுரைக்கு அழைத்து வந்த புகைப்படம்கூடப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

**வித விதமான காயங்கள் நோய்களுக்காக மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த புலிகளின் மெடிக்கல் ரெக்கார்டு களிலேயே அவர்கள் மதுரைக்கு வந்த தேதி உட்பட குறிப்பிடப்பட்டிருந்தது.**

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான காஸ்ரோ சென்னையில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்தவர். வவுனியாவில் புலிகள் பிடித்து வைத்திருந்த இந்திய இராணுவ வீரரை விடுவித்த நிகழ்ச்சிக்கு காஸ்ரோவை சென்னையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துப் போய் திரும்பக் கொண்டு வந்ததும் அரசாங்கம்தான்!

**'றோ' அதிகாரிகள் எந்த முறைகேடு பற்றியும் கவலைப்படாமல் நடவடிக்கை எடுத்தார்கள். மதுரை மாவட்ட கலெக்டர் புலிகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்வதற்கான உத்தரவு போடும் அதிகாரமே கலெக்டருக்கு கிடையாது என்பதைப் பற்றிகூட 'றோ' கவலைப்படவில்லை.**

கடைசியில் இந்தச் சட்டக் குளறுபடியைச் சமாளிக்க, இன்னோர் அபத்தத்தில் தமிழக அரசு இறங்க வேண்டியதாயிற்று. சட்டப்படி அதிகாரமுள்ள தமிழக அரசின் டெபுடி செக்ரெட்டரி (ஏற்கனவே கைதானவர்களை மீண்டும் கைது செய்ய) இன்னோர் உத்தரவு போட்டார். இந்த உத்தரவில், கலெக்டருக்கு உத்தரவிட அதிகார வரம்பு இல்லை என்பதும் குறிப்பிடப்பட்டது.

**திராவிடர் கழகம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. சுப்ரீம் கோட்டிலும் ரிட் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதற்குள்ளாக வீட்டுக்காவலிலிருந்த கிட்டு உண்ணாவிரதம் மேற்கொள்ளவே, அவரையும் கைதானவர்களையும் இந்திய அரசு அவசரஅவசரமாக யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் கொண்டு போய் இறக்கி விட்டுவிட்டு விவகாரத்திலிருந்து ஒரு வழியாகக் கழட்டிக் கொண்டது.**

சுப்ரீம் கோர்ட்டில் மட்டும் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்திருந்தால், நிலைமை மேலும் சிக்கலாகியிருக்கும். அதிகார வரம்பில்லாத கலெக்டரின் உத்தரவின்கீழ் தடுப்புக்காவலில் ஒருவரை வைத்திருந்ததற்காகப் பல லட்ச ரூபாய் நஷ்டஈடு கூடக்கேட்டு வாங்கியிருக்க முடியும். வேறு பல ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்களில் சுப்ரீம் கோர்ட் இவ்வாறு நஷ்டஈடு வழங்கியிருக்கிறது.

-நன்றி-ஜூனியர் விகடன்-1990-



வாரமலர் தினமுரசு



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

ஜனநாயகம், மனித உரிமை, சிவில் நிர்வாகம் என்று தமிழ் பேசும் மக்களிடம் ஆட்சியாளர்கள் கூறும் முழக்கங்கள் வெறும் மாயமான்களே என்றும், தமது நலனுக்கு பாதகமேற்படாத வகையிலேயே தமிழ் பேசும் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்கியுள்ளனர் என்றும் கடந்தவார அலசலில் குறிப்பிட்டிருந்தோம்.

ஜனநாயக உரிமைகள், தனி மனித சுதந்திரங்கள் என்பவை ஆட்சியில் இருப்போரின் தாராள குணத்தாலும், இரக்க சிந்தனையாலும், பெருந்தன்மையாலும் கிடைத்தவையல்ல.

**உலகெங்கும் மிக நீண்ட காலமாக நடைபெற்ற கடுமையான போராட்டங்களின் பின்னரே ஜனநாயக உரிமைகளும், தனி மனித சுதந்திரங்களும் பெறப்பட்டன. இவற்றுக்காக உலங்கெங்கும் பல்லாயிரக் கணக்கானோர் தம் இன்னுயிர்களை இழந்தும், இரத்தம் சிந்தியும் போராடியிருந்தனர்.**

எனினும், ஜனநாயகம் என்பது கலப்படமற்ற, புனிதமான ஒன்றாக எப்போதுமே எங்குமே நிலவுவதில்லை.

ஆளும் வர்க்கங்களும், ஆட்சியில் இருப்போரும் தமது இருப்புக்கு ஆபத்து ஏற்படுமானால் ஜனநாயக உரிமைகளில் கைவைக்கத் தயங்குவதில்லை.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் ஜனநாயக உரிமை சாதாரண காலங்களில் விட்டுவைக்கப்பட்டிருக்கும். அதே உரிமை தமது ஆட்சிக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்றால், அந்த உரிமையை பறிக்க ஆட்சியாளர்கள் தயங்குவதில்லை.

**அதேபோல இனப்பிரச்சனை கூர்மையடைந்துள்ள நாடுகளில் பெரும்பான்மை இன அரசுகள் ஏனைய இனங்களின் உரிமைகளைப் பறிக்கவும், அவர்களது தேசிய விடுதலைப் போராட்டம், உரிமைப் போராட்டம் போன்றவற்றை அடக்கவும் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதுண்டு.**

மிகக் கூர்மையாக ஒரு விடயத்தை உற்றுநோக்கவேண்டும். ஜனநாயக உரிமைகள் என்பவற்றில், மக்கள் ஒன்றுபட்டு கிளர்ந்தெழக்கூடிய, எதிர்ப்புக் காட்டக்கூடிய உரிமைகளை அடக்கப்படும் மக்களிடம் இருந்து ஆட்சியாளர்கள் பறித்துவிடுகின்றனர்.

**மக்களின் எதிர்ப்புணர்ச்சியை மழுங்கடிக்கக் கூடியதும், தார்மீகக் கோபங்களை வடிந்தோடச் செய்யக் கூடியதுமான சில வழிகளை மட்டும் ஜனநாயக உரிமை என்ற பெயரில் விட்டுவைப்பார்கள். அவற்றையே தாங்கள் மக்களுக்கு வழங்கிய ஜனநாயக உரிமைகள் என்று உரத்து முழங்கவும் செய்வர்.**

நம்நாட்டு உதாரணங்கள் மூலமே அந்த உண்மையை நாம் தெள்ளத் தெளிவாகக் காணலாம்.

மக்கள் தம் பிரச்சனைகளுக்காக ஊர்வலம் செல்லவோ, ஆர்ப்பாட்டம் நடத்தவோ அவசரகால சட்டம் இடமளிக்காது. ஆனால் மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் திரண்டு சென்று வாக்களிக்க தடையேதும் கிடையாது.

ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பவை மக்களை போராட்டப் பாதையில் நம்பிக்கை ஏற்படச் செய்கின்றன. போராடவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

**உள்ளூராட்சித் தேர்தல் போன்றவை பிரச்சனை எல்லாம் தீர்ந்துவிட்டன, புள்ளடி போடுவதுடன் எமது கடமை முடிந்தது, இனிமேல் பிரதிநிதிகள் பார்த்துக் கொள்வர் என்று மக்களை போலியான திருப்தி கொள்ளச் செய்கின்றன.**

பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் வீர உரைகளும் மக்களின் கோபத்துக்கு வடிகாலாகவே அமைகின்றன. அத்துமீறிய கைதுகளாலும், இன அவமதிப்பாலும் கொதித்துப் போயுள்ள மக்கள், பாராளுமன்ற உரைகளைப் படிக்கும்போது ஓரளவு திருப்தி அடைகிறார்கள்.

குறிப்பிட்ட பாராளுமன்ற உரைகளுக்கு பதிலளிக்கும் அமைச்சர்கள், சில உத்தரவாதங்களை வழங்கியதாகவும், கவலைப்பட்டதாகவும் செய்திகள் வரும்போது பாதிக்கப்பட்ட மக்களது கோபம் ஆறிப்போகிறது.

**அதுபோல மனித உரிமை குழு விசாரணைகள், ஜனாதிபதிக்கான மகஜர்கள், விசாரணை ஆணைக்குழுக்கள் போன்றவை மக்களின் கோபத்தை வடியச் செய்து ஆறப்போடுவதற்கே உதவுகின்றன.**

பத்து அத்து மீறல்களில் ஒன்றுக்கு தவிர்க்க முடியாமல் நடவடிக்கை எடுப்பதுகூட மக்களின் எதிர்ப்புணர்வை தணிப்பதற்காகவே.

வடக்கு-கிழக்கில் பாலியல் வல்லுறவுகள் பல நடந்துள்ளன. அவ்வாறு இருந்தும் ஒரு சிலவற்றுக்கு மட்டுமே சட்டரீதியான




நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**உதாரணமாக, கிருஷாந்தி பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கை பத்திரிகைகளில் படிக்கும் ஒருவருக்கு, இந்தநாட்டின் சட்டம் ஒழுங்கு என்பன பாரபட்சம் இல்லாமல் கடமையைச் செய்வதாக நம்பிக்கை எற்படும். எதிராகப் போராடும் மனநிலை ஏற்படாதிருக்கும்.**

ஆனால் இவை எல்லாம் போலியான தோற்றங்களேயாகும். கடந்த 50 வருட காலமாக பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகளால் பாராளுமன்ற குறிப்பேடுகள் (ஹன்சார்ட்) நிரம்பினவே தவிர, எவ்விதமான பரிகாரமும் தமிழ் பேசும் மக்களுக்கு கிட்டியதில்லை.

பாராளுமன்றம் மூலம் தீர்வுகள் கிடைக்கும் என்றும், மும்மொழி பாண்டித்தியமிக்க தமது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் பேசிப் பேசியே உரிமைகளை மீட்டுத்தருவர் என்றும் தமிழ் பேசும் மக்கள் நம்பியிருந்தனர்.

**இவ்வாறு மக்கள் நம்பியிருந்தபோதுதான் வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் நில அபகரிப்பு கச்சிதமாக நடந்தேறியது. தனிச் சிங்களச் சட்டம் போன்றவையும், தமிழ் மக்களை அடிமைகளாக்கும் புதிய அரசியலமைப்புச் சட்டங்கள் போன்றவையும் கொண்டுவரப்பட்டன.**

பாராளுமன்றம் அதிர முழங்கிய தலைவர்களால் தனிச் சிங்களச் சட்டத்தை மட்டுமன்றி, சிங்கள சிறீ என்ற எழுத்தைக்கூட வாகனங்களில் இருந்து அகற்ற முடியாமல் இருந்தது.

**ஆனால், ஆயுதப் போராட்டம் தீவிரமான பின்னரே அதன் பயனாக தமிழுக்கு அரசகரும மொழி அந்தஸ்த்தை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டியிருந்தது. சிங்கள சிறீயும் அகற்றப்பட்டது. திட்டமிட்ட குடியேற்றங்களும் முன்னைய வேகத்தில் நடத்தப்பட முடியாமல் இருந்தன.**

எனவே, நம்நாட்டிலும் ஆட்சியாளர்கள் கடந்த ஐம்பதாண்டு காலத்தில் இன ஒடுக்குமுறைக்கும் இலங்கைத் தீவு முழுவதையும் பௌத்த சிங்கள நாடாக்கும் பேரினவாத அபிலாசைக்கும் பாதகமில்லாத ஜனநாயக உரிமைகளை மட்டுமே தமிழ் பேசும் மக்களிடம் விட்டுவைத்திருந்தனர்.

ஒரு காலகட்டம்வரை ஆர்ப்பாட்டம் நடத்தவும், சத்தியாக்கிரகம் செய்யவும், சட்டமறுப்பில் ஈடுபடவும் அன்றைய தமிழ்க் கட்சிகளுக்கு ஆட்சியாளர்கள் இடமளித்திருந்தனர்.

அந்தப் போராட்டங்களை குறிப்பிட்ட கட்சிகள் தொடர்ந்து பாராளுமன்றம் செல்லவும், வாக்கு வங்கிகளை தக்கவைக்கவும் நடத்தும் அரசியல் விளையாட்டுக்கள் என்றே பேரினவாத அரசியல்வாதிகள் கருதினார்கள். இடைக்கிடையே தமது குண்டர்களை ஏவி தமது பங்குக்கு விளையாட்டுக் காட்டினார்கள்.

**ஆனால், தமிழ் மாணவர்களும் இளைஞர்களும் பெருவாரியாக கிளர்ந்தெழுந்தபோதுதான் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் உஷாராகினர். இது அரசியல் விளையாட்டு, கனவான் அரசியல் என்ற ஆபத்தில்லாத கட்டங்களை தாண்டி, பேரினவாதத்தின் அடிமடியிலேயே கைவைக்கப்போகிறது**

என்று பயந்தனர்.

அதன்பின்னர்தான் கூட்டம் கூடுகின்ற, உரிமை கேட்டு ஒன்று திரளுகின்ற ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதிலும், போராடுவோரை அச்சுறுத்தும் சட்டங்களை பிரயோகிப்பதிலும் முனைப்புக்காட்டத் தொடங்கினர்.

அவசரகால சட்டத்தின்கீழ் சிறிமாவோ அம்மையார் ஆட்சியில் பல நூறு தமிழ் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டதோடுதான் பேரினவாத நோக்கங்களுக்கு பாதகமான ஜனநாயக உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைகள் தீவிரம் கொள்ளத் தொடங்கின.

கைதான தமிழ் இளைஞர்களை வதைக்கவும், காலவரையறை இன்றி தடுத்து வைக்கவும் பொலிஸ் அதிகாரிகளுக்கு போதிய அதிகாரம் வழங்கப்பட்டதும் அப்போதிருந்தே ஆரம்பமானது.

**அதன்பின்னர் ஏறக்குறைய கடந்த 25 வருடங்களாக மிக முக்கியமான ஜனநாயக உரிமைகள் பலவற்றை தமிழ்பேசும் மக்களிடம் இருந்து பறிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன.**

**தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய கருவிகளாக மாறக்கூடிய ஜனநாயக உரிமைகளை அவர்களிடம் இருந்து பறித்தெடுத்து, போராட முடியாத மக்களாக முடக்கிப்போடும் முயற்சிகளே அவையாகும்.**

இந்நிலையில்தான் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. அரசியல் போராட்டங்கள் தமது வழக்கமான வழிகளில் முன்னேற முடியாதபோது, அவை எதிர்நோக்கும் தடைகளை அகற்றவே அயுதப் போராட்டம் தோற்றம் பெறுகிறது.

**அதனால்தான் சீனத்தலைவர் மா.ஓ. அவர்கள் "போர் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்"- என்று குறிப்பிட்டார். அடக்கப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதும் ஜனநாயக உரிமையே ஆகும். ஜனநாயகத்துக்கான போராட்டமேயாகும். மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளுக்காகவே அவர்கள் ஆயுதம் ஏந்திப்போராட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.**

இன்று சில தமிழ்க் கட்சிகள் தாம் இப்போதுதான் ஜனநாயக வழிக்கு திரும்பியதாக அர்த்தம் புரியாமல் கூறிக் கொண்டிருப்பதால், தமது கடந்த காலங்களையே கொச்சைப்படுத்தி வருகின்றன.

ஆயுதப் போராட்டம் வெடித்த பின்னர் பேரினவாதமும் முன்னைய தந்திரங்களை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

**நில ஆக்கிரமிப்பு, மொழி அழிப்பு, பாராளுமன்றம் போன்றவற்றை நம்பவைத்து ஏமாற்றுதல் போன்றவையே இன ஒடுக்குமுறையை முன்னெடுக்க பயன்பட்ட பழைய தந்திரங்களாகும்.**

**அத்தந்திரங்கள் மூலம் தமிழ் பேசும் மக்களின் தேசிய தனித்துவத்தை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல நாசூக்காக சிதைத்துவிடவே பேரினவாதம் திட்டமிட்டிருந்தது.**

ஆயுதப் போராட்டம் தீவிரமானதால், இன ஒடுக்குமுறையையும், தனது ஏனைய அபிலாசைகளையும் நிறைவு செய்ய இராணுவத் தீர்வை கையில் எடுத்துக்கொண்டனர் பேரினவாத ஆட்சியாளர்கள்.

அதன் விளைவே இன்று பெரும் போராக மாறி நிற்கிறது. இப் போரில் முன்னைய ஆட்சியாளர்களது வியூகங்கள், தோல்வியையே தழுவியிருந்தன.

இன்றைய ஆட்சியாளர்கள் புதிய வியூகங்களை வகுத்து நிற்கின்றனர்.

**இன்றைய நகர்வுகளில் பேரினவாத நலன் மட்டுமன்றி, இன்றைய ஆட்சியாளரின் நாற்காலி நலன்களும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.**

இது வெல்லப்பட முடியாத வியூகங்கள் என்பதை சுதந்திரமான செய்திகள், தகவல்கள் மூலம் சிங்கள மக்களும், உலகமும் அறிந்து கொள்வதால் ஆட்சியாளருக்கு மூன்று முக்கியமான பாதகங்கள் ஏற்படுகின்றன.

தளராத வெற்றிக்கு உத்தரவாதமான உறுதியான தலைமை என்று ஜனாதிபதி சந்திரிக்காவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் உருவாக்கிவந்த 'இமேஜ்' இருந்த இடம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறது. எதிர்கால தேர்தல் வெற்றிகளை இது அச்சுறுத்தலாகியுள்ளது.

வெல்லப்பட முடியாத நகர்வு, இங்கேயே தீர்க்கப்பட முடியாத பிரச்சனை என்று வெளியுலகம் புரியத் தொடங்கியிருப்பதால், மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கைக்கு ஆதரவு கிடைக்க ஆரம்பித்துள்ளது.

**மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இலங்கை வந்து சென்ற ஐ.நா. பிரதிநிதி ஒலரா ஒட்டுணு சமர்பித்துள்ள அறிக்கையில் இலங்கை அரசை சாடியிருப்பதும் பெரும் அதிர்ச்சியாக மாறி இருக்கிறது.**

எனவே, தமிழ் பேசும் தரப்பின் பக்கம் உள்ள பலத்தையும், நியாயத்தையும் உள்ளூரிலும், உலக அரங்கிலும் எடுத்துக் காட்டக்கூடிய செய்திச் சுதந்திரம்மீது ஆட்சியாளர்கள் கைவைத்துள்ளனர்.

ஜனநாயகத்தின் மிகப் பிரதானமான உரிமைகளில் ஒன்று கருத்து வெளியிடுகின்ற மற்றும் செய்திகள் அறிகின்ற உரிமையாகும். அவ்வுரிமைக்கே அவசரகால சட்ட விதிகளின் கீழ் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது.

**செய்தித் தடை என்பது நாடு முழுவதும் உள்ள மக்களது செய்தி அறியும் உரிமையை பாதிக்கிறது என்ற போதும் பிரதான்மாக தமிழ் பேசும் தரப்பின் பக்கம் உலக ஆதரவு, அனுதாபம் என்பவை ஏற்படுவதையும், மனித உரிமை மீறல்கள், பாரிய அனர்த்தங்களைக்கூட தமிழ் பேசும் மக்கள் சர்வதேசம் முன் தெரிவிப்பதையுமே இரும்புத் திரைபோட்டு தடை செய்கின்றன.**

உச்சிமீது இடி விழுந்து தமிழர்கள் அபயக்குரல் எழுப்பினாலும் உலகின் செவிகளுக்கு கேட்காமல் போகலாம். எனவே இடிகள் இறங்கலாம். கொடும் மழை கொட்டலாம். வெள்ளப் பெருக்கின் சேதங்கள் வெளியே தெரியாமல் போகலாம்.

**எனவே, இன்றைய செய்தித் தடையானது, இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணும் பேரினவாதத்தின் அரசியல், இராணுவ நோக்கத்துடனும், போர் வெற்றியை தேர்தல் பிரசார மூலதனமாக நம்பியிருக்கும் பொதுஜன முன்னணியின் நலனுடனும் பின்னிப் பிணைந்த ஒன்றேயாகும். இதனை போருடன் மட்டுமே சம்பந்தப்பட்ட ஒன்றாக தனித்துப் பிரித்து பேநாக்குவது தவறான கண்ணோட்டமாகவே அமையும்.**

இந்நிலையில் இனப்பிரச்சனை தீரும்வரை தமிழ் பேசும் மக்களுக்கு உண்மையான காத்திரமான ஜனநாயகம் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளும் ஜனநாயகக் கோரிக்கைகளேயாகும்.

**ஆகவே, அரசியல் தீர்வுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக ஜனநாயகம், ஜனநாயக சூழல் என்பவற்றை கருதுவதும் தவறான கண்ணோட்டமாகவே விளங்குகிறது.**

பாராளுமன்ற தேர்தல்களோ, உள்ளூராட்சித் தேர்தல்களோ, மாகாணசபைத் தேர்தல்களோ அரசியல் தீர்வு ஏற்பட முன்னர் ஜனநாயகத்தை கொண்டுவரும் என்று எதிர்பார்ப்பது மூடத்தனமேயாகும்.

**மாறாக, அரசின் இராணுவத்தீர்வு முனைப்பானது எஞ்சியுள்ள ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் இல்லாதொழிக்கவே வழிவகுக்கப்போகிறது.**

செய்தித் தடையை கண்காணிக்க கடந்த காலங்களில் சிவில் அதிகாரிகளே நியமிக்கப்படுவதுண்டு. இம்முறை படை அதிகாரியே நியமிக்கப்பட்டுள்ளார்.

**இராணுவ நலன் என்ற கண்ணாடி வழியாகவே அரசாங்கம் வடக்கு-கிழக்கு பிரச்சனையை நோக்குகிறது என்பதையும், இப் பிரச்சனையில் முன்பைவிட இராணுவ மேலாண்மை ஓங்கியிருப்பதையுமே அவதானிக்க முடிக்கிறது.**

இந்நிலையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலும் சரி, தமிழ்க் கட்சிகள் இரந்து கேட்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் சரி
இராணுவ கட்டுப்பாட்டுக்கும், விருப்பு, வெறுப்புக்கும் அப்பாற்பட்டதாக சுதந்திரமாக செயற்படலாம் என்று நினைப்பது, மணலில் கயிறு திரிக்கும் முயற்சியாகவோ அல்லது ஏமாந்த தமிழ் பேசும் மக்களின் தொடைகளில் கயிறு திரிக்கும் முயற்சியாகவோதான் இருக்கும்.

---

# சந்திக்கு வராத சங்கதிகள்

## நக்கீரன்

**யாழ்** புதிய மேயராக கூட்டணியால் நியமிக்கப்பட்டுள்ளவர் திரு. சிவபாலன். இவர் வட்டுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்தவர்.

கூட்டணியினர் இல்லாமல், யாழ்ப்பாணத்தில் இயக்கங்கள் நாட்டாமை செய்த காலத்தில் சிவபாலன் புளொட் ஆதரவாளராக இருந்தவர். அன்றைய ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவத் தளபதியான டக்ளஸ் தேவானந்தாவின் கூட்டாளியும்கூட. புலிகளோடுதான் அதிக ஒட்டுதல் இல்லை.

கடந்த பாராளுமன்ற தேர்தல்களுக்கு பின்னர் அரசுக்கு கூட்டணி ஆதரவு கொடுத்து வருவதால், சில கூட்டுத்தாபனங்களுக்குள் தங்கள் ஆதரவாளர்களுக்கு பதவிகள் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

திரு. சிவபாலனுக்கு அவ்வாறு பதவி ஒன்றைக்கூட்டணி பெற்றுக்கொடுத்துள்ளது அரச மருந்தக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் சபையில் தான் அப் பதவி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

மாதாந்தம் அரசாங்க ஊதியம் பெறும் ஒருவராக உள்ளார் சிவபாலன். ஆளும் கட்சிக்கு விசுவாசமானவர்களில் ஒருவர் என்ற வகையில் வழங்கப்பட்ட பதவி அது.

இந்நிலையில் யாழ் மேயர் சரோஜினி பலியானதும், அடுத்த மேயர் யார்? என்ற கேள்வி எழுந்தது. யாரும் முன்வரவில்லை.

'அடுத்த மேயராக யாரையும் நியமிக்க முடியவில்லை. எல்லோரும் பயப்படுகிறார்கள். அதனால்தான் புலிகள்தான் காரணம் என்று கூட நாங்கள் கூறாமல் இருக்கிறோம், அப்படி இருந்தும் யாரும் முன்வந்தபாடில்லை' என்ற தகவலை அதிகாரத் தரப்பாருக்கு தெரிவித்த தாம் கூட்டணி வட்டாரம்.

அப்போதுதான் அங்கிருந்து யோசனை தரப்பட்டதாம். "அரசிடம் இருந்து மாதா மாதம் திரு. சிவபாலன் ஊதியம் பெறுகிறார். அவரையே மேயராக நிற்கச் சொல்லுங்கள்" என்பதே சொல்லப்பட்ட யோசனை.

மறுக்கமுடியாத நிலையில் திரு. சிவபாலன் யாழ்மேயராக பணியாற்ற ஒப்புக்கொண்டாராம்.

இத் தகவல்களை உறுதிப்படுத்த திரு. சிவபாலனை தொடர்பு கொண்டோம். முடியவில்லை. விளக்கம் தருவாரேயானால் வெளியிடத் தயாராக உள்ளோம்.

குறிப்பாக அந்த கூட்டுத்தாபன பதவி விவகாரம் பற்றி அறிய ஆவல்.

–0–

**யாழ்** மாநகர-சபையின் கூட்டணி உறுப்பினர்கள் திடீர் கொள்கைப் பற்றுடன், அவசர அவசரமாக பதவிகளை துச்சமாகக் கருதி தூக்கிவீசிக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்மாநகர பிரதிமேயராக இருந்தவர் திருநாவுக்கரசு. பட்டப் பெயர் நாவேந்தன். கூட்டணியின் மரபுப்படி பட்டப்பெயர் இல்லாவிட்டால் ஒரு கெட்-அப் இருக்காது. ஆக, மரபு காத்த மறத்தமிழர் நாவேந்தன்.

மேயர் சரோஜினியின் மரணவீட்டில் வெளிநாட்டு வானொலிச் சேவைக்கு பேட்டியளித்தார். புலிகள் என்று சொல்லாமல், "கெரில்லாக்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள் இதனால் என்ன பயன்காணப் போகிறார்கள்? என்றுதான் தெரியவில்லை" என்று அவர் கூறியதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சொன்னவர்

## சிவபாலனுக்கு மேலிட சிபாரிசு?

கூட்டணி உப தலைவர் ஆனந்த சங்கரி.

அப்போது இணைபிரியாமல் நின்றவர்கள் ஒரு மாதத்துக்குள் கொள்கை முரண்பாட்டில் மோதுப்படுகிறார்கள்.

தான் பதவி விலகியதற்கு நீண்ட கொள்கை விளக்க அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார் நாவேந்தன் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசு.

அதற்கு பதில் சொன்னால் வம்பாகிவிடும் என்பதால், தனிப்பட்ட ரீதியாக அவரைச் சாடியிருக்கிறார் ஆனந்த சங்கரி.

"அவரிடம் பதவிக்கு ஏற்ற ஒடுக்கம் இல்லை. நடத்தையில்லை" என்று பகன்றுள்ளார்.

நாவேந்தன் இப்போது எப்படி இருக்கிறாரோ, எப்படி நடத்தையுள்ளவராக இருக்கிறாரோ, அவ்வாறுதான் உ. தேர்தலுக்கு முன்னரும் இருந்தார். பின்னர் ஏன் அவருக்கு போட்டியிட ஆசனம் கொடுத்தனர்? பின்னர் ஏன் பிரதிமேயர் பதவி கொடுத்தனர்?

தங்கள் எதிரிகளை தனிப்பட்ட ரீதியில் தாக்குவது கூட்டணியின் பழைய ஸ்ரைல். கூப்பன் கள்ளன் துரையப்பா, மண்எண்ணெய் திருடன் ராஜசூரியர், பனியர் தியாகராஜா



என்றெல்லாம் பட்டப் பெயர் சூட்டி அரசியல் அறம் காத்தவர்கள் கூட்டணியினர்.

அவர்களது வழியில் பின்னர் இயக்கத் தலைமைகளும் உட்கட்சிக்குள் தங்களை எதிர்த்தவர்களை சதிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், ஒழுக்கக்கேடானவர்கள், ஏனைய இயக்க சார்பாளர்கள் என்றெல்லாம் தனிப்பட்ட வசை பாடல்களில் ஈடுபட்டு, பிரச்சனைகளை அமுக்கப்பார்த்தனர். எல்லாமே அண்ணர்கள் காட்டிய வழிதான். இன்னமும் அண்ணர்மார் பழக்கத்தை மாற்றவில்லை.

–★–

**வை. கோ**பாலசாமி ஜெயலலிதாவுடன் சேர்ந்து தேர்தலில் நின்றது நியாயமா? பாரதிய ஜனதாவுடன் கூட்டு வைத்தது சந்தர்ப்பவாதம் அல்லவா? என்று தமிழகத்தில் உள்ள தீவிரவாதமான அமைப்புக்கள் கண்டித்தன.

ஜெயலலிதாவுடன் சேர்ந்து நின்று எம்.பி. பதவியை வை.கோ. பெற்றிருக்காவிட்டால், அவரது கட்சியை மட்டுமல்ல, அவரையே புலிகளது ஆள் என்று விழுங்கியிருப்பார் கலைஞர் கருணாநிதி.

தி.மு.கவை உயிர் மூச்சாக நினைத்து பல்லாண்டு உழைத்த உண்மைத் தொண்டரான வை.கோமீது தன்னைக் கொல்ல புலிகளுடன் சேர்ந்து சதி செய்வதாக நாக்கூசாமல் கூறியவர்தான் கலைஞர். எனவே, வை.கோ.வை வீழ்த்த எந்த எல்லைக்கும் போகத் தயங்க மாட்டார்.

கலைஞரிடம் இருந்து தன்னையும், கட்சியையும் காப்பாற்ற வேறு வழியின்றி வை.கோ. நாடிய கூட்டுத்தான் ஜெயலலிதாவுடன் ஐக்கியம்.

ஆனால், வை.கோ. நினைத்திருந்தால் இன்று பாரதிய ஜனதா அமைச்சரவையில் முக்கிய அமைச்சராகியிருக்கலாம். காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டிருக்கலாம். நிறைய சம்பாதித்தும் இருக்கலாம்.

பாரதிய ஜனதா மட்டுமல்ல, ஜெயலலிதா கூட பலமாக வற்புறுத்திப் பார்த்தார். கையருகே அமைச்சர் பதவி காத்துக் கிடந்தது.

"வேண்டவே வேண்டாம், வெளியே இருந்து அதரிப்போம் என்றுதான் மக்களிடம் கூறினோம். அதனை மீறவே மாட்டேன்" என்று விட்டார்.

பதவி என்றால் ஆலாய் பறக்கும் இந்தக் காலத்தில், தன்மேல் திணிக்கப்பட்ட பதவியையே ஏற்க மறுத்த இடத்தில்தான் நிமிர்ந்து நிற்கிறார் வை.கோ.


படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# இடி அமீன்

## அதிர் இடி 13

**கடந்தவாரம்**

**ஜனாதிபதி ஒபேடே சிங்கப்பூரில் இருக்க, உகண்டாவில் அவனைப் பதவி நீக்கி ஜனாதிபதியாகிறான் இடி அமீன். தனது விசுவாசிகளுக்கு பதவி கொடுக்கிறான். உகண்டாவில் நடைபெற்ற படுகொலைகளை ஆராய இரு அமெரிக்கர்கள் வருகின்றனர்.**

**இனி....**

இடி அமீன் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை உகண்டா மக்கள் வரவேற்றனர். எங்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

பெண்களுடன் இடி அமீன் முரட்டுத்தனமாக நடப்பவன் என்று கதை பரவி இருந்தும், இடி அமீன் பதவி ஏற்றதும் பெண்களும் கொண்டாட்டங்களில் பங்கேற்றனர்.

"உகண்டாவின் கறுப்பு அழகிகள் பலரது உள்ளம் கவர் நாயகனாக மாறிவிட்டான் இடி அமீன்," என்று பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தி சில வாரங்கள் சென்று இடி அமீனுக்கும் தெரியவந்தபோது, உரத்து நகைத்தபடி: **"வெள்ளை அழகிகளுக்கும் என்னைப் பிடிக்கும்; சந்தேகம் இருந்தால் அனுப்பிவைக்கும்படி அந்தப் பத்திரிகைக்கு தெரிவித்துவிடு!"** என்றான் தன் உதவியாளரிடம்.

உகண்டாவுக்கு வந்த அமெரிக்கர்கள் இருவருக்கும் அங்கு அமீனுக்கு இருந்த செல்வாக்கும், கொண்டாட்டங்களும் ஆச்சரியமாக இருந்தன.

'ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு பயங்கர சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது,' என்று அறிந்து, அதுபற்றிய தகவல்களைச் சேகரிக்கவே அவர்கள் உகண்டா வந்தனர்.

ஒருவரது பெயர்: நிக்கலஸ். மற்றவர் பெயர்: ரொபட் சீடில். நிக்கலஸ் அமெரிக்காவில் மதுபான உற்பத்தியாளர் ஒருவரது மகன். ஓர் எழுத்தாளர். ரொபட் சீடில் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர்.

உகண்டாவில் நடைபெற்ற படுகொலைகளை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவே அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்.

அவர்கள் இருவரையும் உகண்டா அதிகாரிகள் பவ்வியமாக வரவேற்றனர்.

"எங்கள் ஜனாதிபதி மேன்மை தங்கிய இடி அமீன் தங்களுக்குத் தகுந்த மரியாதை தருமாறு உத்தரவிட்டுள்ளார்!" என்றார் ஓர் அதிகாரி.

அமெரிக்கர்கள் இருவருக்கும் அடர்த்தியான ஆச்சரியம்: "ஓ...ஐ...ஸீ! நாங்கள் அவரைக் காண அனுமதி உண்டா?"

"மன்னிக்கவேண்டும். மிக அதிக பணிகளில் மூழ்கியுள்ளார். எனவே டோரோ மாவட்ட ஆளுநர் மாண்புமிகு ஜூமா எய்கா உங்களுக்கு மட்டற்ற மரியாதை செய்யக் காத்திருக்கிறார்!" என்றதும், இடி அமீன் ஆட்சியில் மரியாதைக்கு என்ன அர்த்தம் என்று புரியாமலேயே இருவரும் அதிகாரிகளுடன் காரில் சென்றனர்.

இடி அமீனின் முன்னாள் கார்ச் சாரதியும், அப்போதைய டோரா மாநில ஆளுநருமான ஜூமா எய்காவால் அமெரிக்கர்கள் வரவேற்கப் பட்டனர்.

வரவேற்கப்பட்ட முறையே வித்தியாசமாகவும், விபரீதத்துக்கு முன்னோட்டமாகவும் இருந்தது.

கைகுலுக்குவதற்காக தன் கரத்தை நீட்டினார் ரொபட் சீடில்.

கைகுலுக்காமல் சிரித்த ஆளுநர் ஜூமா எய்கா, "வெள்ளைக்காரர்களுடன் நாங்கள் கைகுலுக்கமாட்டோம். ஏனென்றால் எங்களுக்கு வெள்ளைத் தோல் என்றாலே வெறுப்பு!" என்றார் முகத்தில் அடிப்பதுபோல.

இருவரும் அதிர்ந்து நிற்க, அந்த அறையின் இடதுபக்கக் கதவு சட்டென்று திறந்து கொள்ள, கரும் மலைபோல, கடகடவென்று சிரித்தபடி வந்தது- இடி அமீன்.

ஆளுநர் தலைகுனிந்து பணிவுகாட்ட நடந்து சென்று ஆளுநருக்கு உரிய ஆசனத்தில் அமர்ந்த அமீன், **"என்ன எங்கள் மரியாதை எப்படி?"** என்றான்.

அவர்கள் பதில் சொல்ல முன்னரே மற்றுமொரு மரியாதை செய்யப்பட்டது.

அமீனுடன் கூடவந்த இரண்டு மெய்காப்பாளர்களும் இரண்டு அமெரிக்கர்களுக்கு பின்புறமாக நின்று கொண்டிருந்தனர்.

அமீனின் கண்களின் அசைவை வைத்தே, குறிப்புணர்ந்து, அமெரிக்கர்கள் இருவரையும் பின்புறத்தில் எட்டி உதைத்தனர்.

உதைத்த வேகத்தில் அமெரிக்கர் இருவரும் முன்னால் சரிந்து இடி அமீனுக்கு முன்னால் இருந்த மேசையில் தாடை மோதச் சரிந்தனர்.

இடி அமீன் உரத்து நகைத்தபடி: **"எனக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் தலை நிமிர்ந்து நின்றால் எனக்குப் பிடிக்காது!"** என்றான். நிமிர முயன்றவர்கள் அமீனின் மெய்காப்பாளர்களால் பிடறியில் அழுத்தப்பட்டனர்.

**"கறுப்பர்கள் என்றால் உங்களுக்கு கேவலம் என்ன? இப்போது காற்றுமாறி அடிக்கிறது. இந்தக் கறுப்பன் முன்னால் நீங்கள் இரண்டு பேரும் அடிமைகளடா அடிமைகள்!"** என்று உறுமினான்.

அவர்கள் இருவருக்கும் தங்கள் உயிர் போகப்போவது சர்வ நிச்சயம் என்பது தெரிந்துவிட்டது. கடைசி முயற்சியாக அமீனுடன் பேசிப்பார்க்க விரும்பினார்கள்.

மேசையில் தாடையால் ஊன்றிக் கொண்டே, **"நாங்கள் உங்கள் எதிரிகளல்ல; எங்களை நம்புங்கள்!"** என்றார் நிக்கலஸ்.

**"அப்படியா, சந்தோசம்; இங்கே எதற்காக வந்தீர்கள்? சி.ஐ.ஏ.நாய்கள்தானே நீங்கள்?"**

"நோ...நோ...." என்று அவர்கள் கூற, **"யெஸ் யெஸ்"** என்றான் அமீன்.



என்றவன் கண் இமைக்கும் நேரத்தில் தன் பிஸ்டலை உருவி, தன் எதிரே மேசையில் கவிழ்ந்திருந்த நிக்கலஸின் நெற்றி மையத்தை குறிவைத்து விசையை அழுத்த;

"டுமீல்!"

நெற்றி மையத்தில் சின்னப் பொத்தல்.

தன் சகா தன் கண் எதிரேயே சுடப்பட்டு, பயங்கரமாக செத்துப்போக, பயத்தில் ரொபட்டின் காற்சட்டை நனைந்துவிட்டது.

நாற்காலியைவிட்டு எழுந்துவந்த இடி அமீன், **"அவனை விடுங்கடா!"** என்றுவிட்டு,



### தருவது ரசிகன்

**"இந்தா என் பூட்ஸைத் துடை!"** என்றான்.

ரொபட் சீடில் தயங்கியபோது அமீன் குத்து அவர் முகத்தில் விழுந்தது. **"இதுதான் இடி அமீன் குத்து, துடையடா!"** என்று உறுமிய உறுமலில் சடாரென்று மடங்கி அமர்ந்து பூட்ஸ் துடைக்க தன் கைக்குட்டையை எடுத்தார்.

அடுத்த நொடியே கைக்குட்டை அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

**"முட்டாள் வெள்ளையனே, துணியால் துடைக்காதே, உன் நா நுனியால் துடை!"** என்றான் இடி அமீன். பின்னால் அடிபட்டார் ரொபட் சீடில்.

இனி தப்பவே முடியாது என்று தெரிந்தது: நாவால் இடி அமீனின் பூட்சை துடைக்கத் தொடங்கினார் ரொபட் சீடில்.

இரண்டு பூட்சுகளையும் துடைத்து முடிந்ததும்; **"உன்னை உயிரோடு விடலாம் தான்; ஆனால் வெளியே போய் இங்கு நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் ஒப்பிப்பாய், அதனால்...."** என்று நிறுத்திய அமீனின் பிஸ்டல் வெடித்தது.

இரு அமெரிக்கர்களின் உடல்களும் டோரா மாநிலத்திலேயே புதைக்கப்பட்டன.

ஒரு வாரம் சென்றபின் விழித்துக் கொண்ட உகண்டாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம்; "எங்கே எங்கள் இரு பிரஜைகள்?" என்று கேட்டது.

இரகசியத் தகவல்கள் சிலவும் அமெரிக்கத் தூதரகத்துக்குக் கிடைத்தன. 'அமெரிக்கத் தூதரகத்திற்கு சில தகவல்கள் கிடைத்துவிட்டன.' என்ற தகவல் அமீனுக்கும் கிடைத்தன.

டோரா மாநில ஆளுநர் ஜூமா எய்காவுக்கு ஒருநாள் நள்ளிரவு அமீனிடம் இருந்து ஃபோன் வந்தது.

**"அந்த இரண்டு நாய்களையும் புதைத்தாயா? எரித்தாயா?"**

"தாங்கள்தானே புதைக்கச் சொன்னீர்கள்...!"

**"அப்படியா சொன்னேன்? தினமும் எத்தனையோபேரை புதைக்கிறோம், எரிக்கிறோம், எதைத்தான் ஞாபகத்தில் போட்டு வைத்திருப்பது? சரி, இரண்டு நாய்களையும் தோண்டி எடுத்து எரித்துவிடு. சாம்பலை மட்டும் பத்திரமாக பொட்டலம் கட்டி அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பிவிடு!"**

அமெரிக்கர் இருவரையும் புதைத்த இடம்பற்றிய தகவல் கிடைத்த திருப்தியில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் சிலவற்றுக்கு திட்டமிட்ட அமெரிக்க தூதரகம், சாம்பல் பொட்டலம் கிடைத்தும், தனது திட்டத்தை மூட்டை கட்டிப் போட்டுவிட்டது.

●●

சிங்கப்பூரில் உகண்டா முன்னாள் ஜனாதிபதியாகிவிட்ட ஒபேடேவின் அந்தரங்க செயலாளரான சியம்பா தனது செயலாளரின் அணைப்பில் திணறிக்கொண்டிருந்தார்.

அவரது வெற்றுடம்பில் சாய்ந்திருந்த அவரது செயலாளர் கூறினாள்: "நீங்கள் பேசாமல் இடி அமீனுடன் சேர்ந்துவிடுங்கள்."

"எப்படி? என்னையும் பிடித்துக் கொன்றுவிடமாட்டானா?" என்றார், அவளது சட்டையின் கடைசிப் பொத்தானையும் விடுவித்து பிரமித்தபடி.

அவர் கழுத்தை வளைத்து தன் கழுத்துக்குக்கீழே அவர் முகத்துக்கு தரிப்பிடம் தந்தபடி "அதனை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றவளை பிரமிப்புடம் பார்த்தவரை, தன் முத்தத்தால் பிரமிக்கச் செய்தாள்.

சியம்பா கட்சி மாறினார். ஒபேடேவுக்கு துரோகம் செய்யத் துணிந்தார்.

இடி அமீனுடன் தொடர்பு கொள்ளுமாறு ஒரு ஃபோன் இலக்கத்தை அவள் கொடுத்தாள்.

தொடர்பு கொண்டபோது இடி அமீன் மறுமுனையில் **"சியம்பா! நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நீயும் அங்கே கட்டிலில் கொண்டாடியிருப்பாய்; பொல்லாத ராட்சசி, உயிரை எடுத்திருப்பாளே?"** என்று சிரித்தவன், **"இங்கே எப்போது வருகிறாய், நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!"** என்றான் அமீன்.

சியம்பாவை அமீன் அத்தனை கரிசனையுடன் வரவேற்றதுக்கு காரணம் இல்லாமல் போகுமா?

இருந்தது!

(இடி தொடரும்)

---

## இலவச அணைப்பு



நம்ப முடியாத சமாச்சாரமெல்லாம் ஊர் உலகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. உலகம் எந்தளவுக்கு மாறி இருக்கிறது பாருங்கள்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனாவில் புதிதாக ஒரு விஸ்கி கம்பனி ஆரம்பித்துள்ளனர்.

ஒலிம்பிக் மூலம் பெயர் பெற்ற பார்சிலோனாவில், தமது விஸ்கியை பிரபலமாக்க அந்த கம்பனி கையாளும் உத்திகளும் உலகப் பிரபலமாகிவிட்டன.

அப்படி என்னதான் செய்கிறார்கள் என்கிறீர்களா? நகரில் பல இடங்களில் மதுபான விடுதிகள் ஆரம்பித்து, புது சலுகை ஒன்றை அறிவித்துள்ளனர்.

அங்கு சென்று விஸ்கியை குடிப்பவர்களுக்கு இலவச இணைப்பாக ஒரு அணைப்பும், முத்தமும் கிடைக்கும். அதற்காக பல அழகிகளை வேலைக்கு வைத்துள்ளனர்.

பெண்கள் விஸ்கி அடிக்கப் போனால் அணைப்பும், முத்தமும் கொடுக்க ஆண்களையும் வேலைக்கு வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறான விளம்பர உத்திகளால் 'எய்ட்ஸ்' போன்ற வியாதிகள் பரவும் என்று சமூக சேவை அமைப்புக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

---

## யார் பேச்சைக் கேட்பது? சுஷ்மிதா குழப்பம்



உலகை கலக்கிவிட்டு தற்போது சினிமா உலகை கலக்கும் பேரழகி சுஷ்மிதா சென்னுக்கு ஒரு பெரிய பிரச்சனை.

இன்று, நேற்றல்ல, தொன்று தொட்டு அவருக்குள்ள பிரச்சனை. அதன் சாராம்சம் அடிப்பதா? துடிப்பதா?

என்ன புரியவில்லையா? பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்தில் எந்தப் பெண்ணாவது அவரை அடித்தால் திருப்பி அடிப்பதா, அடிவாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து அம்மாவிடம் சொல்லி அழுவதா? என்று குழம்புவார்.

அம்மா கண்டிப்பான ஆள். வியாபாரத்தில் கில்லாடி. அங்கும் கண்டிப்பு.

"உன்னை யாராவது வலிய வந்து அடித்தால் நீயும் திருப்பி அடி" என்று சொல்லுவார் அம்மா.

அப்பா நேர் எதிர். சாந்த சொரூபி. இந்திய விமானப்படையில் உத்தியோகம். "உன்னை யாராவது அடித்தால் நீ திருப்பி அடிக்கக்கூடாது. டீச்சரிடம் கூறு" என்பார்.

உடனே அடுத்த பிரச்சனை; அம்மா சொல்வதைக் கேட்பதா? அப்பா சொல்வதைக் கேட்பதா?

"அப்படிப்பட்ட இரு துருவங்கள் மத்தியில் வளர்ந்ததால்தான் எனக்கு இப்போது சம புத்தி வந்திருக்கிறது சீற வேண்டிய சமயம் சீறுவேன், விட்டுக் கொடுக்கவேண்டிய நேரத்தில் விட்டுக் கொடுப்பேன்" என்கிறார் சுஷ்மிதா.

---

## தலை கீழ் முயற்சி



'தலைகீழாக நிற்காதே' என்று புத்தி சொல்வார்கள். தமிழ்நாட்டில் மதுரையில் தலைகீழாக நின்றதால்தான் ஒரு குழந்தையின் உயிரையே காப்பாற்ற முடிந்தது.

மதுரையில் ரயில்வே காலனியில் கட்டட வேலைக்காக பதின்மூன்று அடி ஆழத்தில் குறுகலான குழி ஒன்று தோண்டப்பட்டிருந்தது.

அந்தக் குழிக்குள் இரண்டு வயதுக் குழந்தை ஒன்று தவறிவிழுந்து விட்டது.

குழிக்குப் பக்கத்தில் இன்னொரு குழி வெட்டினால்தான் குழந்தையை காப்பாற்றலாம், இல்லாவிட்டால் ஆபத்து என்று அதற்கான முயற்சிகள் பரபரப்பாக நடந்தன.

குழிவெட்டி முடிக்கும்வரை குழந்தை உயிருடன் இருக்குமா? என்றும் பயந்தனர்.

அப்போது அபாரமான யோசனை ஒன்றைக் கூறினார் ரயில்வே ஊழியர் செல்வராஜ்.

தன் காலில் கயிறு ஒன்றைக் கட்டி, ஆக ஒரு அடி அகலமான அந்தக் குழிக்குள் தலைகீழாக தன்னை



இறக்கச் சொன்னார். மெல்லிய தேகம் என்பதால் குழிக்குள் சுலபமாக இறக்க முடிந்தது.

தலைகீழாக தொங்கி குழந்தையை அணைத்து அவர் தூக்கிக்கொள்ள, மறுபடி மேலே அவரைத் தூக்கினர். அதனால் குழந்தை உயிர் தப்பியது.

---

## மடோனா மந்திரம்

பொப் பாடகி மடோனாவின் பாடல்களும், அதற்கு அவர் கொடுக்கும் அசைவுகளும் பயங்கரமாக இருக்கும். அந்தப் பயங்கரத்தை காண உலகெங்கும் பல இலட்சம் ஜொள்ளர்கள் ஆவலாக உள்ளனர்.

மடோனா சமீபத்தில் வெளியிட்டுள்ள வீடியோ ஆல்பமும் அவரது ஜொள்ளர்களை ஏமாற்றவில்லை. ஆனால் சமஸ்கிருதப் பண்டிதர்களை கோபப்படுத்தி இருக்கிறது.



மடோனா

'ரே ஓஃப் லைட்ஸ்' என்னும் பெயரில் வெளியாகியுள்ள அந்த ஆல்பத்தில் சமஸ்கிருத மந்திரங்களை சொல்லியிருக்கிறார் மடோனா.

'இப்படியான ஒரு வீடியோ கசட்டில் சமஸ்கிருத மந்திரங்களை உபயோகித்ததே தவறு, அதைவிடத் தவறு, அந்த மந்திரங்களை தவறுதலாக உச்சரித்திருப்பது' என்று சமஸ்கிருதப் பண்டிதர்கள் கண்டனக் கணைகள் விடுத்துள்ளனர்.

மன்மதக் கணைகளைத் தொடுக்கும் மடோனாவை இந்தக் கண்டனக் கணைகள் யாதுசெய்யும்?

---

## பப்பராசி

டயானா பற்றிய புகைப்படங்கள் ஏராளமாக உள்ளன. அவரது புகைப்பட்ங்களைப் போட்டு ரீ சேர்ட், தொப்பி, பேனா, தட்டு என்று பல அயிட்டங்கள் விற்பனையாகின்றன.

டயானாவின் கதையை திரைப்படமாகவும் தயாரிக்கிறார்கள். இவற்றுக்கிடையே டயானாவை துரத்தி துரத்தி படம் எடுத்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட பப்பராசிகளை பற்றிய கதையும் படமாகப் போகிறது.

கூலிக்கு புகைப்படம் எடுப்பவர்கள் என்று கூறப்படுகின்ற பப்பராசிகளுக்கு



ஆதரவான படமா? எதிரான படமா? என்று தெரியவில்லை. படத்திற்கும் 'பப்பராசி' என்றே பெயர் வைத்துள்ளனர்.

---

## 'கப்'பில் தேவ்



ஒரே கிண்ணத்தை இரண்டு தடவை பெற்றுள்ளார் கபில் தேவ். எப்படிச் சாத்தியம்? என்கிறீர்களா?

1983ல் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை கபில் தேவ் தலைமையில் ஆடிக் கைப்பற்றியது இந்தியா.

அந்தக் கிண்ணத்துடன் இந்தியா திரும்பிய கபில் தேவ்வுக்கு 'ஹீரோ வெல்கம்' என்ற பெயரில் மாபெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

1999ல் நடக்கப்போகும் உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்ற வேண்டும் என்று இப்போதே வாழ்த்துவதற்காக மும்பாயில் ஒரு மாபெரும் விழா நடந்தது.

அந்த விழாவில் 1983ல் வென்ற கிண்ணத்தின் இன்னொரு பிரதியை கபில் தேவுக்கு கொடுத்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

## நில்லடி நில்லடி சீமாட்டி



↑ நாய் வாலை நிமிர்த்த முடியாது என்று தெரிந்தும் குரங்காருக்கு ஏன் இந்த வீண் முயற்சி!. ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சியையும் ஒன்று சேர வைக்கலாம் என்று ஆறறிவு படைத்த தமிழ்க் கட்சிகளே நினைக்கும்போது. இந்தக் குரங்காரின் முயற்சியை கேலி செய்வது தகுமோ?.

## டொல்பின் சிகிச்சை

→ தற்போது வெளிநாடுகளில் டொல்பின் மீனைக் கொண்டு காதுகேளாத, பேச முடியாத குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும்முறை பிரபலமாகி வருகிறது.

குழந்தைகளின் நரம்பு மண்டலங்களில் டொல்பின் மீன்களின் நுண்ணிய உயர்ந்த அதிர்வுகள் ஏற்படுத்தும் தாக்கம் பிரமிக்கத் தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டிருக்கிறது.

மேற்படி படத்தில் டொல்பின் மீனைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையைக் காணலாம்.

(தகவல்: தயா- சார்ஜா.)

## தகவல் பெட்டி



↓ இது என்ன தெரியுமா? உலகிலேயே மிகப் பெரிய புனித குரான்.

அபுதாபியில் உள்ள நிறுவனம் ஒன்று இந்த சாதனையைப் படைத்திருக்கிறது.

650 பக்கங்களில் கச்சிதமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த புனித குரானின் ஒவ்வொரு பக்கமும் 24 கரட் தங்கம் பூசப்பட்ட தாமிரத் தகடுகளால் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்க தகடும் 20 கிலோ எடை. மொத்தம் 10 தொன் எடை.

அட்டையில் வைரக்கற்கள் பதிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள். உலக சாதனையாக கின்னஸில் பொறிக்கப்பட உள்ளது.

## தங்கப் பக்கங்கள்





## அசத்தலான ஆபரணம்



↑ அன்னக்கிளி ஜிமிக்கி, குஷ்பு வளையல் என்று படங்கள் பெயரையும், பிரபலமான நடிகைகளின் பெயரையும் ஆபரணங்களுக்கு சூட்டுவதுண்டு. இலங்கை, இந்தியா போன்ற நாட்டு மக்கள் சினிமா பைத்தியங்கள், அதனால் தான் அப்படி பெயர் சூட்டி விற்கப்படுகிறது என்று மேதாவிகள் போல விளக்கம் சொல்வோர் இருக்கிறார்கள்.

சினிமாப் பிரியம் இல்லாத நாடே இல்லை எனலாம். அதுதான் உண்மை. படத்தில் இருக்கும் புதுவித நெக்லசுக்கு சூட்டியுள்ள பெயர் என்ன தெரியுமா?

டைட்டானிக்! டைட்டானிக் படம் அசத்திக் கொண்டிருப்பதால் அந்தப் பெயரில் நெக்லஸ் செய்து புஸ்பராக கல் பதக்கம் வைத்து விற்பனை செய்கிறார்கள்.

டயானாவுக்கு நகை செய்து கொடுத்த பிரபல பொற்கொல்லரான ஸ்டார் சிலுக்ஸி என்பவர்தான் இதனையும செய்துள்ளார். இதனை விற்பனை செய்து கிடைக்கும் பணம் டயானா அறக்கட்டளைக்கு வழங்கப்படவுள்ளது.

↓ இத்தாலியின் தென்பகுதியில் உள்ள பெனவென்டோ மாநிலத்தில் இந்த குட்டி டைனோசரின் 'புதை படிமம்' கண்டெடுக்கப்பட்டது.

11கோடியே 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசர் இது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

பொதுவாக எலும்புக் கூடுதான் கிடைப்பது வழக்கம். இதில் சிறு குடல் பெருங் குடல் தசை நாண்கள் ஆகியனவும் இருப்பது தான் ஆச்சரியம்.

இது எப்படி சாத்தியம்? இப்பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் பெருமளவில் உள்ளன. அத்துடன் பல சமயங்களில் ஒட்சிசன் அளவும் குறைவாக இருக்கும். அதனால்தான் உடலுறுப்புக்கள் சிதைவடையாமல் இருந்துள்ளனவாம்.

இந்தக் குட்டி டைனோசரின் நீளம் 25 சென்ரி மீற்றர். இதன் வாலை மட்டும் காணவில்லை.

## ஆச்சரியக் கண்டுபிடிப்பு



↓ உலகில் முதலாவது வெற்றிகரமான தொழிலாளர் வர்க்க புரட்சியை நடத்தியவர் லெனின். அதற்கு முன் நடந்த சில புரட்சிகள் தோல்வி கண்டிருந்தன.

சோவியத் யூனியன் தலைவராக இருந்த லெனின் உடல் பத்திரமாக பாதுகாக்கப்பட்டுவருகிறது. அந்த உடலையும் அப்புறப்படுத்த அமெரிக்க சார்பு. சக்திகள் சில ரசியாவில் ஆர்வம் காட்டிவருவது தனிக்கதை.படத்தில் இருப்பது பாதுகாக்கப்பட்டு வரும் லெனினின் உடலல்ல.

## உடல்போல்....

அதேபோல தத்ரூபமாக செய்யப்பட்ட கேக். ரசியாவில் நடந்த விழாவொன்றில் இந்த கேக் வைக்கப்பட்டிருந்தது.



## இதுதான் 'பென்ரகன்'



↑ அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் அமைந்திருக்கும் 'பென்ரகன்' கட்டடமே உலகிலுள்ள மிகப்பெரிய தனி அலுவலகக் கட்டடமாகும். 'பென்ரகன்' என்பது ஐங்கோணம் என்பதனைக் குறிக்கிறது.

அமெரிக்கத் தலை நகரான வாஷிங்டன் நகரிலிருந்து வேர்ஜீனியாவிலுள்ள ஆர்லிங்டன் செல்லும் வழியில் பொட்டாமேக் நதியின் மேற்குக் கரையில் அமைக்கப்பட்டுள்ள பென்ரகன் கட்டடமே இங்கு காணப்படுகிறது.

12 ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கிய இக்கட்டடம் ஒவ்வொன்றும் 5 மாடிகளைக் கொண்டதும் 25 வரிசைகளைக் கொண்டதுமான பல கட்டிடத் தொகுதிகளை உள்ளடிக்கியது. இக்கட்டடங்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. 10 நீள் வரிசை இணைப்புக்கட்டடங்கள் மூலமே கட்டடங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைமைச் செயலகங்களும் பாதுகாப்புச் செயலாளரின் தலைமையகமும் இங்குதான் அமைந்துள்ளன. மொத்தம் 23 ஆயிரம் பேர் இங்கு பணிபுரிகின்றனர்.

கட்டடத்தைச் சுற்றி 80 ஹெக்டேர் நிலத்தில் 10 ஆயிரம் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி உள்ளது.

ஒரு குட்டி நகரம்போல் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும் இவ்விடத்தில் தனியான தபாலகங்கள், மருத்துவ மனைகள், தொலைக்காட்சி, வானொலி நிலையங்களும் உள்ளன.

நில மட்டத்துக்குக் கீழ் கட்டடத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லக் கூடிய தனியான வாகனப்போக்குவரத்தும் இருக்கிறது.

உலகை கட்டியாளும் அமெரிக்காவின் இரகசிய இராணுவ வியூகங்கள் இங்குதான் வகுக்கப்படுகின்றன.

இராணுவப் பொறியியலாளர்கள் 1941ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இக்கட்டடத்தை நிர்மாணிக்க ஆரம்பித்தனர். 1943 ஜனவரியில் கட்டி முடித்துவிட்டனர். அப்போது இக்கட்டடத்தை நிர்மாணிக்க ஆன செலவு 83,000,000 டொலராகும். நம்நாட்டுப் பெறுமதிப்படி 531 கேடியே 20 இலட்சம் ரூபாய்களாகும்.

பார்த்தீர்களா படை பலத்துக்காக அமெரிக்கா காட்டும் அசுரத்தனமான அக்கறையை. அதே அமெரிக்காதான் உலக சமாதானத்தைப் போதிக்கிறது.

## யானைப் பறவை


→ முன்னொரு காலத்தில் இப்பரந்த பூமியில் உலவிய உயிரினங்கள் பல காலத்தால் அழிந்தொழிந்து போய்விட்டன.

மடகஸ்கார் தீவில் மிகப்பெரிய பறவை இனங்கள் ஏழுவகை மறைந்து விட்டதாகத் தெரிகிறது. ஏறத்தாழ 2000ம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் மடகஸ்காருக்கு மனிதர்கள் போய்ச்சேர்ந்தார்களாம். அப்போது அங்கு மிகப் பெரியதொரு பறவையைக் கண்டனர்.

அந்த பறவை யானையைப் போல் மிகப் பருத்துக் காணப்பட்டமையினால் அதனை யானைப் பறவை என்றே அழைத்தனர். பின்னர் இந்த இனம் முற்றாக அழிந்து போய் விட்டது.

யானைப் பறவைக்கு உடல் முழுவதும் இறகுகள் இருந்தன. இறக்கைகள் இருந்தும் இவை பறக்க முடியாத பறவைகள்தான்.

இவை 3 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியன. 450 கிலோ எடையுடன் கூடியவை. இவற்றின் முட்டைகள் 8 லீட்டர் திரவ பதார்த்தம் கொள்ளக் கூடியவை.





படிப்பகம்

www.padippakam.com

# மூன்றுமாதம் கட்டாய ஓய்வு

## விஜய்க்கு டாக்டர்கள் கட்டளை

கமல், ரஜினிக்கு அடுத்தபடியாக பூஜை போட்ட அன்றே படம் விற்பனையாகும் கதாநாயகன் விஜய். இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட ஒருகோடி ரூபாய் ஊதியம் பெறுகிறார்.

நீண்டகாலமாகப் போராடித்தான் இந்த இடத்தைப் பிடிக்க முடிந்தது. அவர்தான் விஜய்.

அவருக்கு பின்னால் வந்த அஜித்குமார், அப்பாஸ், பிரபுதேவா போன்றோர் அவரை முந்திச் சென்றனர். தன்னம்பிக்கையுடன் போராடிய விஜய் இன்று அவர்களை பின்னால் தள்ளிவிட்டு பந்தயக் குதிரையாக முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறார்.

இந்த குதிரையை நம்பி பணம் கொட்டி படம் எடுக்கத் தயாரிப்பாளர்கள் கியூவரிசையில் நிற்கிறார்கள்.

எல்லோரையும் அதிர்ச்சியடைய வைத்துவிட்டார் விஜய். திடீரென்று படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்.

ரசிகர்களும், ரசிகைகளும் பதறிப்போய் தங்கள் இஷ்ட தெய்வங்களிடம் பிரார்த்தனை நடத்தி பிரசாதங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி என்ன நோய்? முதுகெலும்பின் நடுவே உள்ள இணைப்பில் ஒரு கோளாறு. விஜய்க்கு இளவயது என்பதால் சிகிச்சை அளித்து குணமாக்கிவிடலாம். இதுவே ஐம்பது வயதைத் தாண்டிய பின்வந்தால் ஆபத்தானது என்கிறார்கள் டாக்டர்கள்.

மூன்று மாதம் படுக்கையில் இருக்குமாறு டாக்டர்கள் கூறியுள்ளனர். பின்னர் பூரண குணமடைந்து நடிக்க ஆரம்பிக்கலாம் என்கிறார்கள்.

### விஜய் பேட்டி

தனது நோய் பற்றி விஜய் படுக்கையிலிருந்தபடி வழங்கிய பேட்டியில் கூறியிருப்பதாவது:

"சொன்னா நம்பமாட்டீங்க. முப்பது அடி உயரத்திலிருந்து குதிக்கிறது. பைக் சேஸிங்க சண்டைக் காட்சி மாதிரி எதுவுமில்லை. 'ப்ரியமுடன்' படத்துக்காக கடைசிநாள் படப்பிடிப்பு. ஜாலியாக ஒரு லவ் பாட்டுக்கு ஆடிக்கொண்டிருந்தேன். ஒரு ஷொட்டுக்காக குனிந்து நிமிர்ந்தபோது லேசா எறும்பு கடித்தது போல வலி. அவ்வளவுதான்.

மறுநாள் காலையில் எழ முடியவில்லை. முதுகெல்லாம் வலி. சுளுக்கு பிடித்திருக்கும் என்று நினைத்தால் நேரமாக ஆக பயங்கர வலி. டாக்டரிடம் போனோம். டெஸ்ட் பார்த்துட்டு "போய் படுறா உனக்கு சம்மர் லீவ்"னு சொல்லி அனுப்பிட்டார். இதுக்கு சிகிச்சை ஓய்வுதான். இரண்டு மூணு மாதம் முழுமையாக ஓய்வு எடுத்தால் சரிபண்ணிடலாம்னு டாக்டர்ஸ் ஆறுதலா பேசுறாங்க. அந்த நம்பிக்கையில நானும் படுத்தாச்சு" என்கிறார் விஜய்.

## அங்கே ரக்ஷனா

'டாட்டா பிர்லா', 'வாய்மையே வெல்லும்', 'பூவரசன்' போன்ற படங்களில் தாராள கதாநாயகியாக கலக்கியவர் ரக்ஷனா.

"தமிழில் தினமும் ஒரு புதுமுகம் அறிமுகமாவதால் கடும் போட்டி நிலவுகிறது. சிலரை இயக்குநர்கள் மறந்தே போகிறார்கள். அதனால்தான் நான் தெலுங்கில் தலை காட்டி வருகிறேன்" என்கிறார் ரக்ஷனா. தலை மட்டுமா காட்டுகிறார்?



ரக்ஷனா

## காதோடு சொல்லுகிறோம்

'மு' வில் தொடங்கும் மூன்றெழுத்து நாயகன் அவர். காதலைக் காலமெல்லாம் வாழவைக்கும் நாயகிக்கும் அவருக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டது. தற்போது நெருக்கம் உடையும் கட்டத்தில் இருக்கிறது. தனது மனைவிக்கு விஷயம் தெரிந்துவிட்டதால் நாயகன் வாபஸாகிறாரா? அல்லது திகட்டிவிட்டதா? என்று தெரியவில்லை. ஆனாலும் 'தேசியப்பற்றுள்ள' படத்தில் தனது ஜோடியாக தொடையழகியை சிபாரிசு செய்திருக்கிறார் என்பது மட்டும் உண்மை.

"பிரபுவும், குஷ்புவும் ஒன்றாய் இருந்தனர், பின்னர் நாகரிகமாகப் பிரிந்தனர். ஆனால் இவர் மட்டும் என்னை மிரட்டுகிறார். கல்யாணம் செய்துக்கொள்ளாவிட்டால் ஆசிட் அடிப்பேன் என்று அச்சுறுத்துகிறார். நியாயமா?" என்று கேட்கிறார் மூன்றெழுத்து 'மா' நடிகை.

சங்கீத நடிகையுடன் 'காய்' விட்டிருந்த 'பா' நடிகர் உரிய நேரத்தில் கை கொடுத்திருக்கிறார். பட வாய்ப்புக்களே இல்லாமல் நடிகை வீட்டில் இருந்து மனம் பேதலிப்பதை அறிந்து, தனக்கு அறிமுகமான மலையாள இயக்குநர் ஒருவரிடம் சிபாரிசு செய்தாராம். படவாய்ப்பு கிடைத்திருக்கிறது நடிகைக்கு.

'வாளி' நடிகையின் வீட்டில் ஏகப்பட்ட அழகிகள் இருக்கிறார்களாம். வாளி நடிகையின் தாய்க்குலம் சினிமா உலக பெரும்புள்ளிகளுக்கு அழகிகளை விநியோகம் செய்து கைநிறைய சம்பாதிக்கிறாராம். தமிழக பிரபல இதழ் இந்த 'திடுக்' தகவலை வெளியிட்டுள்ளது.

'கௌ' நடிகை தனது திருமணத்திற்கு பிரிய நடிகர்கள் இருவருக்கும் தெரிவிக்கவில்லையாம். அவர்கள்மீதுள்ள கோபம்தான் காரண 'மாம்.

## செல்லக்கடி

விஜயகாந்த்தின் காதைக் கடிக்கும் ப்ரீதா விஜயகுமார்மீது தான் இப்போது ஹீரோக்களுக்கு கண். தங்களுக்கு ஜோடியாக அவரைப் போடுமாறு சிபாரிசு செய்கிறார்களாம்.

விஜயகாந்த், சத்யராஜ், அர்ஜுன், பாண்டியராஜன், சூர்யா... என்று பல ஹீரோக்களுடன் தலா ஒரு படம் நடிக்கிறார்.

தெலுங்கில் ப்ரீதா நடித்த முதல் படத்திற்கு நந்தி விருது கிடைத்திருக்கிறது. அதனால் கொள்ளை மகிழ்ச்சியில் இருந்தவர், படப்பிடிப்பில் விஜயகாந்த் காதை சற்று ஆழமாகவே கடித்துவிட்டாராம். 'செல்லக்கடி' என்பது இதுதானாக்கும்...

**கொசுறு தகவல்:** ப்ரீதாவின் பிறந்தநாள் ஜனவரி 10ம் திகதி.

## ரோஷிணி பிடித்த விளையாட்டு

ரதிகா (ரோஷிணி) ஜோதிகா இருவரும் நக்மாவின் அன்புத் தங்கைகள். இருவரும் நடிகைகள்.

"உங்களுடைய அக்கா நக்மாபோல உங்களுக்கு கோபம் வருமா ரோஷிணி?"

"நான் ரொம்ப பொறுமையானவள். சகிப்புத்தன்மை அதிகம். கோபமே எனக்கு வராது!"

"உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு என்ன ரோஷிணி?"

"ஆண்கள் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு விளையாடுவார்களே கபடி அதுதான் பிடிக்கும்!"

"உங்களுடைய தங்கை ஜோதிகா பிடிவாதமாக உங்களுடைய பொருட்களை எடுத்து விடுவதுண்டா?"

"நான் ஆசை ஆசையாய் வாங்கும் ஹேர் பேண்ட், காது வளையம், ஜீன்ஸ் பேண்ட், ஷர்ட் இதையெல்லாம் சண்டை போட்டு எடுத்துவிடுவாள். எங்கம்மா அவளுக்குத்தான் சப்போர்ட். எனக்கு அழுகையே வந்துவிடும். அவளைப் போல நானும் பிடிவாதக்காரியாக மாறலாம் என்றிருக்கிறேன்."

## சினி...

### இன்னொரு...

உலக அழகி ...
ஜீன்ஸில் கொஞ்சிய ...
சற்றுப் பெருத்துவிட்ட...
இன்னொரு மகிழ்...
கிறது. அடுத்த படத்தி...
ஜோடி சேரும் பாக்யம் கி...
'காதல் கோட்டை', ...
காதல் வாழ்க', 'காதலே ...
படங்களை தயாரித்தவர் சி...
யன். அவர் புதிதாகத் தய...
திற்கு 'கண்ணெதிரே தோன்...
பெயர் சூட்டியுள்ளனர்.
பிரசாந்த்-சிம்ரான் ...
நடிக்க, மணிவண்ணன், வி...
ஆகியோரும் நடிக்கவுள்ளன...
இசை: தேவா, பாடல்கள்: ...
இயக்கம் ரவிச்சந்திரன். பல ...
களிடம் பாடம் கற்றுவிட்டு ...
இயக்க வந்திருக்கிறார். நடன...
சுந்தரம்.



ரோஜா-சஞ்சய்
படம்: ஸ்வர்ணக்கா (தெலுங்கு)



சரத்குமார்-விஜயகுமார்
படம்: நட்புக்காக

## சிறு விரிசல்

ரோஜாவும் செல்வமணியும் சற்று விலகி இருக்கிறார்கள். சந்திப்பை குறைத்துக்கொண்டு ஃபோனில் மட்டும் பேசிக்கொள்கிறார்கள்.

சொந்தப்படம் எடுத்து ரோஜாவின் சம்பாத்தியத்தை கோட்டைவிட்ட செல்வமணி, ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் ரோஜா சம்பாதித்த பணத்தையும் செலவாக்கிவிட்டார். அதுதான் சின்ன விரிசல்.

## இனி இல்லை

"என் கவர்ச்சியை மட்டும் காண்பிக்க நினைப்போருக்கு அதிர்ச்சியான செய்தி. அவ்வாறான படங்களில் இனிமேல் நடிக்கமாட்டேன்." என்று அறிக்கை விடுத்துள்ளார் மந்த்ரா.

அதற்காக வருத்தப்படும் அவரது ரசிகர்கள் அறிக்கையில் உள்ள மீதிப் பகுதியைப் பார்க்கவும்: "ஆனால் கதையுடன் சேர்ந்து கவர்ச்சி காட்டுவது தப்பில்லை. நல்ல கதையை மெருகூட்ட கவர்ச்சி காட்டுவதற்கு நான் தயங்கமாட்டேன்" அடேங்கப்பா!

## அஜித் மறுப்பு

அஜித்குமாருடன் 'காதல் மன்னன்' படத்தில் நடிக்க முதலில் மீனாவைத் தான் நாடினார்கள். அஜித்குமார் பலமாக மறுப்பு தெரிவித்துவிட்டாராம்.

சிங்கப்பூரில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி ஒன்றில் அஜித்குமார் மீனாவின் கையைப் பிடித்து நடனமாட அழைத்தாராம். அதைக் கண்ட மீனாவின் தாய்க்குலம் திட்டித் தீர்த்துவிட்டதாம். திட்டல் அஜித் காதிலும் விழுந்ததாம். அதனை மறக்காமல், மீனாவை மறுத்துவிட்டார் அஜித்குமார்.

## முகப்பில்

மந்த்ரா

மீனா~கார்த்திக்
படம்: அரிச்சந்திரா

www.padippakam.com

கிசுகிசு (partial banner) "சிட்"

## லெக்.:.பைட்

"இந்த லெக்ஃபைட் மாதிரி கஷ்டமானது வேறு எதுவும் இருக்காது. அதாவது ஒரு உயரமான திண்டின்மீது தாவி ஏறி எதிராளியைக் காலால் பாய்ந்து அடிப்பது. உயரமான தூணை ஒரு காலால் மோதி, இன்னொரு காலால் எதிரியை அடிப்பது. எம்பி குதித்து காலால் அடிப்பது போன்ற லெக்ஃபைட் பண்றது ரொம்பக் கஷ்டம். லெக்ஃபைட் ஒருநாள் செய்தாலே இரண்டு நாட்கள் கால் வலிக்கும்" இது விஜயகாந்த்தின் அனுபவம்.

## குஷ்பு இட்லி

'குஷ்பு இட்லி' என்று இப்போது பெரிய ஹோட்டல்களிலும் சென்னையில் விற்பனையாகிறதாம்.

பூப்போல, மிருதுவாக, பளீர் வெண்மையாக மெத்து மெத்தென்று பருமனாக இருக்கிறதாம். இரண்டு சாப்பிட்டால் வயிறு நிரம்பிவிடுமாம்.

இந்த இட்லி பற்றி குஷ்புவின் அபிப்பிராயம்: "நிறையப்பேர் இது பற்றி என்னிடம் கூறியுள்ளனர். தமிழ்நாட்டு உணவுகளில் எனக்குப் பிடிக்காத ஒரே அயிட்டம் இட்லிதான். நான் சாப்பிட்டதே கிடையாது.

பல சினிமாக்காரர்கள் பெயரில் வளையல், புடவை என்று இருந்தாலும் ஒரு சாப்பாட்டு அயிட்டதுக்கு என்னுடைய பெயரை வைத்தது வித்தியாசம்தான். நான் குண்டு என்பதால் என் பெயரை வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்கிறார்.

## சங்கவி ஆறுதல்

படுத்த படுக்கையாக கிடக்கும் நடிகர் விஜய்யை பார்வையிட பல நடிகர்களும், நடிகைகளும் சென்றனராம்.

முதன் முதலாக பூங்கொத்துடன் சென்ற நடிகை சங்கவி. "இதமாக பேசி தைரியம் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். விஜய் ரொம்ப தைரியசாலி" என்கிறார்.

## ஐநூறு ரூபா பந்தயம்

'தர்மா' படப்பிடிப்பில் ப்ரீதா நடிப்பதை பார்க்க அவரது சகோதரி வனிதா வந்திருந்தார். வனிதாவும் நடிகைதான்.

படத்தில் விஜயகாந்த் ஒரு கையால் தூக்குகிறார் ப்ரீதாவை. அதனைப் பார்த்த வனிதா, "உன்னை ஒரு கையால் தூக்குகிறாரே. நீ அவரை தூக்கு பார்க்கலாம். தூக்கினால் 500 ருபா" என்று பந்தயம் பிடித்தாராம்.

தம் பிடித்து தூக்கிப் பார்த்தாராம் ப்ரீதா. நினைத்தது நடக்கவில்லை. 500 ருபாயை இழந்தாராம் ப்ரீதா.

"நல்லாச் சாப்பிடம்மா" என்று ஆலோசனை சொன்னாராம் விஜயகாந்த். ப்ரீதாவின் எடை 39 கிலோதானாம். அப்போ, ஐஸ்வர்யா ராயைவிட குறைச்சலாங்க?!

## மீனா என்றால் யானைக்கும்.... பயங்கர அனுபவம்...

இப்போது அதை நினைத்தால் நடுங்குகிறார் மீனா. மீனாவின் நடுக்கத்திற்கு காரணம் ஒரு யானை. நடந்த சம்பவம் பற்றி மீனாவே சிலிர்ப்போடு விளக்குகிறார்:

"'அரிச்சந்திரா' படத்தின் படப்பிடிப்பு கேரளாவில் நடந்தது. கார்த்திக்கும் நானும் சம்பந்தப்பட்ட பாடல் காட்சி.

ஒரு கோவில் திருவிழாபோல செட்டப் செய்திருந்தார்கள். 50 கெண்டை மேளக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். 80க்கும் அதிகமான யானைகளும் வரவழைக்கப்பட்டன.

கெண்டை சத்தமும், யானையின் உறுமலும் அந்த ஏரியாவையே ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தது.


கமராமேன் ரவி யாதவ் கிரேன்மீது அமர்ந்துகொண்டு 'ஷாட்ரெடி' என்று கத்தினார். கார்த்திக்கை நோக்கி நான் பாடியபடியே ஓடி வரும்போது ஒரு யானை பயங்கரமாய் பிளிறியது. நான் அதைப் பொருட்படுத்தவில்லை. அப்போது அந்த யானை பாகனையும் மீறி என்னை நோக்கி ஓடிவந்தது.

எல்லோரும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தனர். பாகனையும் தூக்கி வீசிவிட்டு யானை ஓடிவந்தது. அப்போது ஜீப் ஒன்று வேகமாக என் அருகே வந்து நின்றது. அதில் சட்டென்று தொற்றிக்கொண்டு தப்பிப் பிழைத்தேன். அடுத்த சில நொடிகளில் அந்த யானையை சுற்றிவளைத்து பிடித்து கட்டிப் போட்டார்கள்." என்று பயம் மாறாத குரலில் விபரித்து முடித்தார் மீனா.





விஜயகாந்த்-ப்ரீதாவிஜயகுமார் படம்: தர்மா



திலீப்-ஷாலினி

## ...க்க முடியுமா?

...இசைஞானி இளையராஜா ...தகால ஞாபகமாக போற்றிப் ...காப்பது ஆர்மோனியப் பெட்டி. ...மையான குடும்பத்தில் பிறந்த ...ளையராஜாவின் அன்றைய ...த்து ஆர்மோனியப் பெட்டி ...மே.

அந்த ஆர்மோனியப் பெட்டியின் ...யால் இசையமைப்பாளராகி, ...சஞானியாகி 25 வருடகாலமாக ...றிக்கொடி நாட்டிவருகிறார். ...து ஆர்மோனியப் பெட்டியைப் ...ய புத்தகம் ஒன்றை எழுதப் ...கிறார்.

## மினி சினி

* 'ஜீன்ஸ்' படத்தை அடுத்து அகத்தியன் இயக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ள ஹொலிவுட் படத் தயாரிப்பாளர் அசோக் அமிர்தராஜ், 'ரட்சகன்' பட இயக்குநர் பிரவீன் காந்தி இயக்கும் படமொன்றையும் தயாரிக்கவுள்ளார்.

* 'காதலா காதலா' தெலுங்குப் பதிப்பான 'நவ்வண்டி லவ்வண்டி' படத்தில் கமல் சொந்தக்குரலில் மூன்று பாடல்களைப் பாடியிருக்கிறார். தெலுங்கில் கமல் சொந்தக்குரலில் பாடுவது இதுவே முதல் முறை.

* இதுவரை மணிரத்னம் இயக்கிய படங்கள் யாவும் தமிழில் இருந்து இந்திக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன. முதன் முதலாக இவர் இந்தியில் இயக்கும் 'தில்ஸே' இந்தியில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்படவுள்ளது.

* 'மக்கள் ஆட்சி', 'அரசியல்' போன்ற படங்களை எடுத்து பல அரசியல்வாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள ஆர்.கே.செல்வமணி, அடுத்து குடும்பப்பாங்கான கதையுள்ள படமொன்றை இயக்கவுள்ளார். இதில் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'என் சுவாசக்காற்றே' படத்தில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக நடிப்பவர் புதுமுகம் இஷா கோபிகர். இவர் 'சந்திரலேகா' என்ற தெலுங்குப் படத்தில் நாகார்ஜுனாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

* 'சலாம் பாம்பே', 'மிஸிசிப்பி மசாலா', 'காமசூத்ரா' ஆகிய படங்களை இயக்கியுள்ள மீரா நாயர் அடுத்து 'மை ஒன் கண்ட்ரி' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் எல்லோரா பட்நாயக் என்ற ஒரிய நடிகை நாயகியாக நடிக்கிறார்.

* 'அன்புள்ள காதலுக்கு' படத்தை இயக்கி நடித்து வரும் மோகனுக்கு இன்னொரு புதுப்பட வாய்ப்பு வந்துள்ளது. பி. வாசுவிடம் உதவி இயக்குநராக இருந்தவர் மோகன் நடிக்கும் இப்படத்தை இயக்கவுள்ளார்.

* 'காதல் கோட்டை' கன்னடத்தில் தயாராகி வருவதும், கதாநாயகியாக சங்கீதா நடிப்பதும் தெரிந்த விஷயம். கன்னடத்தில் தயாராகும் 'காதல் கோட்டை'க்கு என்ன பெயர் தெரியுமா? 'நீனு சௌவே.'

* 'சொர்ணமுகி' படத்தை இயக்கியிருக்கும் அதியமான் கதாநாயகனாக நடிக்கும் 'தலைமுறை' படத்தில் இன்னொரு இயக்குநரும் நடிக்கவுள்ளார். அவர்? 'தாலாட்டுக் கேட்குதம்மா' ராஜ்கபூர்.

* 'ஜீன்ஸ்' படத்திற்குப் பின் ஐஸ்வர்யா ராய் 'தால்' என்ற இந்திப்படத்தில் நடிக்கவுள்ளார். 'கல்நாயக்' படத்தை இயக்கிய சுபாஷ் கை இயக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.

## ...ரையுலக 59 ...றுபக்கம்

# இராமனை நெருங்க மறுத்த சீதை
## இக்கால நடிகையின் துணிச்சல்

இன்று தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகனும், கதாநாயகியும் ...ன்போட்டு ஒட்டியதுபோல ஒட்டிக்கொள்கிறார்கள். கட்டிப் புரள்...ர்கள். தாராளமாக கவர்ச்சிக்காட்டி புண்ணியம் சேர்க்கிறார்கள்.

1934ம் ஆண்டு, அதாவது தமிழ் சினிமா தோன்றி நான்கு ...டங்களின் பின்னர் நடந்த சமாச்சாரம் ஒன்றை அறிந்து கொள்ளுங்கள்.

தமிழ்நாடு டாக்கீஸ் (டாக்கீஸ் என்றால் படமாளிகை) தயாரித்து ...ல் வெளிவந்த படம் 'லவகுசா'. 18 நீளமான பாடல்கள் இடம் ...ற்றிருந்தன.

இப்படத்தில் நாராயணன் என்பவர் ராமன் வேஷம் போட்டார். ...தயாக பள்ளிக்கூட ஆசிரியையான லட்சுமி என்பவர் நடித்தார்.

படப்பிடிப்பின்போது சீதை எப்போதும் ராமனுடன் நெருங்கி ...ராமல் தூரவே இருந்தார். ஒத்திகையில் நெருங்கி அமரு மாறு ...தரவு போட்டார் இயக்குநர் சௌந்திரராஜ அய்யங்கார்.

"நெருங்கி உட்காரச் சொன்னால் நடிக்கவே மாட்டேன்" என்று ...சிரியை பிடிவாதம் பிடித்தார். படப்பிடிப்பையே இரத்துச் செய்ய ...ண்டியளவுக்கு நெருக்கடியாகிவிட்டது. "கோடி ரூபாய் கொடுத்தாலும் ...ருக்கமாக அமரேன்" என்றுவிட்டார் ஆசிரியை.

"இது லவகுசா கதைதானே. எப்படியும் ராமனும் சீதையும் பிரிந்து ...னே ஆகவேண்டும். இப்போதே விலகி அமர்ந்தால் பரவாயில்லை." ...று இன்னொரு பங்குதாரர் சமாதானம் செய்துவைத்தார். அதனால் ...ப் பிடிப்பு தொடர்ந்து நடந்து, படமும் வெளியாகியது.

### சீண்டிப் பார்த்தார்

அது அந்தக் காலக் கதை. இது இந்தக் காலக் கதை.

தமிழ்ப்பட உலகுக்கு இறக்குமதியான நான்கெழுத்து நடிகைக்கு அதுதான் மூன்றாவது தமிழ்ப்படம். இணைந்து நடித்த ஹீரோ கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவர்.

நெருங்கி நடிக்கும் போதெல்லாம் அந்த ஹீரோவை வேண்டுமென்றே சீண்டுவார் நடிகை. ஹீரோ கூச்சத்தில் நெளிவதைப் பார்க்க நடிகைக்கு குஷி.

ஆரம்பத்தில் நடிகையின் சில்மிஷங்களால் கூச்சப்பட்ட நடிகருக்கு போகப்போக பழகிவிட்டது. நடிகையின் சில்மிஷங்களைப் பற்றி தன் நண்பரான சக நடிகரிடமும் கூறியிருக்கிறார்.

அந்த நடிகரோ "பழம் நழுவிப் பாலில் விழுந்தால் நஷ்டமா? எடுத்துக்கோ" என்று தூண்டிவிட்டார். 'அந்த நடிகை இந்த மாதிரி விஷயங்களில் மகா நிபுணி' என்றும் கூறி ஆசையையும் வளர்ந்துவிட்டார். அதனாலும் நடிகருக்கு மகா மகா துணிச்சல்.

நடிகர் பாய்ச்சலுக்கு தயாராகிவிட்டார் என்பதை அறியாத நடிகை பாடல் காட்சி ஒன்றில் வழக்கம்போல நடிகரைச் சீண்டினார்.

### அதிர்ச்சி

காட்சிப்படி மேடான பகுதியில் இருந்து ஒருவர் மீதொருவர் கட்டிப்புரண்டபடி கீழ்நோக்கி உருளவேண்டும்.

நடிகையோ குஷியாகி நடிகர்மீது தன் பாகம் முழுவதையும் திணித்து அழுத்த, இதுதான் சமயம் என்று நடிகர் அவரை கெட்டியாக கட்டிக்கொள்ள; உருளவேண்டிய காட்சி தத்ரூபமாக அமைந்த திருப்தியில் கைதட்டிப் பாராட்டினார் இயக்குநர்.

நடிகை முகத்தில் ஈயாடவில்லை. நடிகர் கிள்ளிய கிள்ளில் வலித்த வலியை யாரிடம் சொல்ல முடியும்.

நடிகருக்கு ஒரு மாதிரியாவிட்டது. படப்பிடிப்பு முடிந்ததும் நடிகையை நெருங்கி 'ஸாரி' சொன்னார்.

நடிகையோ அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக "மீதியை எப்போது வைத்துக் கொள்ளலாம்?" என்று கண்சிமிட்டினார். அதன் பின்னர் இருவரும் நகமும் சதையும்போல நெருக்கமாகிவிட்டனர். தற்போதும் நட்போடு உள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

## நாளையும் ஒரு...

வானத்தை..
வலம் வந்த நிலவு...
நிழல்களுடன் ஏதோ...
இரகசியம் பேசிற்று...!
o
கோபம் கொண்ட
முகில்களோ
வானத்தை
இழுத்து மூடிற்று....!
o
வானத்துக்கோ
சோகக் களை
முகமெல்லாம்
இருண்ட வாறே
உம்மென்று
கிடந்தது..!
o
அமைதியின்
அரவணைப்பை
இந்த இரவும்
அள்ளிப்
பூசிக் கொண்டது...!
o
தெரு நாய்களுக்கு
சந்தோஷம்
கூக்குரலிட்டு
ஆடிப்பாடின!
o
என்னமோ
ஏதோ
நடக்கப்போவதாக
அமைதி
கட்டியம் கூறிற்று..!
o
வெறிச்சோடியபடி
தெருவெல்லாம்
வரண்டு போய்...
கிடந்தது!

தெருவில்
பூட்ஸ் காலடிச்
சத்தங்கள்
காதைக்
கூர்மையாக்கின...!
o
அருகில்
மிக அருகில்
'டும் டும்' மென்று
மத்தளம்
கொட்டின
துப்பாக்கிகள்!
o
உதிரமெல்லாம்
உறைந்து போனதோ
என நினைக்குமுன்பே
கை கால்களில்
இலேசான உதறல்!
o
கடும் குளிர்
பனி போர்த்திய
இந்த இரவின்
மடிகளின் மீது
அமர்ந்திருந்த
எனக்கோ
வியர்க்கத்
தொடங்கிற்று!
o
என்ன நடந்ததோ
ஏது நடந்ததோ
நாளையும் ஒரு
து(ர்)ப்பாக்கிய
செய்திதான்
காத்திருக்குமோ...!?
o

என். சஹாப்தீன்-
ஒட்டமாவடி.

## அனுபவம் புதுமை

காற்றின் அசைவைத்
தென்றல் என்றால்,
கடலின் அசைவை
அலைகள் என்றால்,
முகிலின் அசைவை
மேகம் என்றால்,
உனது மனதின்
என்னுள் அசைவு
காதல்தான்!

உன் நினைவு
திடீரென எனையுலுக்கி
மனது
அடிவாங்கி மறையும்
அதிகாலை அலாரம் போல!

தூக்குப் போட்டு
செத்தபின்னும்
பதினைந்து நிமிடம்
துடிக்கும்
இதயம்போல என்நிலை!

உன் நினைவுகளால்
என் தலையணைகள்
தினம்பெறும்
முத்தங்கள்
ஆயிரம் ஆயிரம்!

கால் மிதிபட்ட
புழுப்போல துடிக்கும்
எனைப் பார்த்து!

"உனக்கென்ன கவலை?"
என்று
என்னிதயம் அறியாது
கேட்கும் உன்னிடம்
எப்படி எனக்கு
காதல் வந்தது!

சுபா வரன்-கண்டி.

---

விளக்கையும்
அடுப்பையும்
ஊதுவோம்...
விடிந்துவிட்டது!
**
இறங்குவோம்
எடுப்போம்...
சோதனைச் சாவடி!
**
பிடுங்குவோம்
கொடுப்போம்...
காதலர் தினம்!
**
நன்றாக
அருந்துவோம்..
நாளை தேர்தல்!
**
'ஆடு'வோம்
'மே'தினம்!
**
கதவை
மூடுவோம்
கட்டிலடியில்
பதுங்குவோம்..
சுதந்திர தினம்!

எஸ். பிரபா

## அ(வ)கதி நிலை

துப்பாக்கி முனை
துப்பிய ரவை
சப்பித் துப்பியது
சமாதானத்தை!
o
இருக்கையிழந்து
இறக்கையிழந்து
இறப்பில் உறங்கும்
அகதி வெண்புறா!
o
யுத்தத்திற்கெதிர்
சத்தம் எழுப்பி
சத்தம் இன்றியே
செத்தது சொந்தம்!
o
வேட்டுப் புயலில்
மாட்டிப் புரண்டு
சமாதியானது
சமூகச் சமூகம்!
o
விட்டோம் விடிவை
தொட்டோம் துயரை
நட்டோம் விதையை
நாசம் முளைத்தது!
o
நட்ட நடுப்பகல்
வெட்ட வெளியில்
நாட்டிய மெழுகாய்
உருகுது உள்ளம்!
o
சீரகதியற்று
சீரழியும்-நாம்
அவதிச் சகதியுள்
அலறும் அகதிகள்!
o
பாட்டோசை கேட்டு
பறந்தோம் வானில்
வேட்டோசை கேட்டு
விழுந்தோம் அவதியில்!
o
துன்பப் பேயின்
தூளியில் ஆடும்
அவலம் ஈன்ற
அடிமை நாங்கள்!
o
நாளை விடியும்
வேளை வருமென
இருந்தோம்-இன்னும்
இன்று முடியவில்லை!

யு.லெயல். பசீர்-வாணகமுவ.

தேன் கிண்ணம்



## அணுக்குண்டு விழுந்த பூமி

உலகில் அணுக்குண்டை அறிமுகம் செய்த நாடு அமெரிக்கா. இரண்டாம் உலகப் போர் முடிவை நெருங்கிய கட்டத்தில்தான் ஜப்பான்மீது அணுக்குண்டை போட்டு விளையாடியது அமெரிக்கா.

இரண்டாம் உலகப்போரில் அதிகளவு பலியாகியதும், வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்ததும் சோவியத் யூனியன் நாட்டு வீரர்கள்தான்.

பெருமையெல்லாம் சோவியத் யூனியனுக்கு போகப்போகிறதே என்று நினைத்த அமெரிக்கா, தன்னால்தான் உலகப் போர் முடிந்தது என்று மார்தட்டவும், தன் புஜபலம் காட்டி உலகை மிரட்டவுமே அணுக்குண்டு வீசியது.

அணுக்குண்டால் அழிந்த ஜப்பான் நகரில் ஒன்றான ஹீரோசீமா நகரின் அழிவையே படத்தில் காண்கிறீர்கள். தப்பித்தவறி இரண்டு கட்டட இடிபாடுகள் மிஞ்சி உள்ளன. ஏனைய கட்டடங்களும், மக்களும் கண்மூடி கண் திறப்பதற்குள் காணாமல் போயினர். நகரம் நரகமானது. பொதுமக்களும், கட்டடங்களும் இருந்த பெருநகரம் பொட்டல் காடாக மாறியது.

இந்த உலக அநியாயத்துக்கு காரணமான அமெரிக்காவிடம் இன்னமும் பல டசின் அணுக்குண்டுகள் உள்ளன. உலகப் பயங்கரவாதி நீதி போதிக்கலாமா?

## சுடு...சுடு...

மனிதனென்றோ
புலியென்றோ
நுண்ணுயிர் நோக்கியோடு
விலங்கியல்...
ஆராய்ச்சி எதற்காக?
சுடு..சுடு...
நன்றாகச் சுடு
நீ இமயத்தைத் தொடுவதற்காக...!
••
கண்டெடுத்து
சமர்ப்பிக்கும்
அந்த...
கதை கட்டிய குண்டுக்கு
காத்திருக்கிறது
கட்டோடு சன்மானம்!
அதற்காக...
சுடு..சுடு...
நன்றாகச் சுடு
துப்பாக்கியே அதற்காகத்தானே...
••
சுதந்திரமென்பது
தொலைவிலுமில்லை.
அப்பாவியென்றாலும்
அழகாகச் சூட்டு பட்டம்
ஒரு பட்டி ஏறும்!
••
அந்தப் 'பயங்கரவாதியின்'
ஆத்மா சாந்தியடைய
அவனுக்கும் நன்றிகூறு..
சுடு...சுடு...நன்றாகச் சுடு...
துப்பாக்கியே அதற்காகத்தானே...
••
சிறைக்கூடம்
அங்கே
காத்திரு வெண்புறாவே
கதவுகள் திறக்க
காகங்கள் கரையும் வரையும்
அதுவரை
எல்லோரும் சுட்டும்
ஆமாம்.. நன்றாகச் சுட்டும்..
துப்பாக்கியே அதற்காகத்தானே...!
••

"கல்வியூர்ச் சந்திரன்"-
கோட்டைக்கல்லாறு.



## இலங்கைக் குண்டு

இன்று தமிழ்ப் படங்களில் கவர்ச்சிக் குண்டாக வெடிக்க ஏராளம் அழகிகள் காத்திருக்கிறார்கள். தமிழ்ப்பட உலகில் கவர்ச்சிக் குண்டை முதலில் வீசியவர் தவமணி தேவி. நீச்சல் உடையில் அந்தக் காலத்தில் தோன்றுவது என்றால் எத்தனை தைரியம் இருக்க வேண்டும். தவமணிதேவியிடம் இருந்தது.

**முக்கிய செய்தி:**
தவமணி தேவியை இலங்கையில் இருந்துதான் கொண்டுபோனார்கள். பிரபல தயாரிப்பாளரான சுந்தரம் கண்டுபிடித்து உபயோகித்த கவர்ச்சிக் குண்டுதான் தவமணிதேவி. அவரது அக்காலத் தோற்றம்தான் இது.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். ஜேசநாதன்,
வயது: 24
முகவரி:
பொகவந்தலாவைத் தோட்டம்,
பொகவந்தலாவை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
ஐ. சம்சுன்நிலா,
வயது: 18
முகவரி:
297, தேசிய பாடசாலை
வீதி, அக்கரைப்பற்று-06.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்
(14.06.1998 தொடக்கம் 20.06.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மிதுனம் - சூரியன், புதன்.
சிங்கம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன்.
மேடம் - சனி, வெள்ளி.
இடபம் - செவ்வாய்.
சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: — சுப நேரம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- உயர்ந்த நட்பு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **சனி**- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### மேடம்: — சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரபாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், மனக்கவலை. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### இடபம்: — சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணிமிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3**

### மிதுனம்: — சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **சனி**- பயனற்ற செயல், காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5**

### கும்பம்: — சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், ஆடம்பர வாழ்க்கை. | மு.ப. | 10 | மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- இனசனப் பகை, மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |
| **சனி**- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கர்க்கடகம்: — சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உறவினர் உதவி, பயனுள்ள செயல். | மு.ப. | 10 | மணி |
| **திங்கள்**- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- பெரியோர் நட்பு, காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மகரம்: — சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணவரவுத் தடை. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |
| **புதன்**- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### சிம்மம்: — சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- காரியானுகூலம், இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், தொழில்சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- உயர்ந்த நிலை, கௌரவமிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன் அதிஷ்ட இலக்கம்-4**

### தனு: — சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| **புதன்**- பெரியோர் பகை, மனக்கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 11 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### விருட்சிகம்: — சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**-வெளியிட வாழ்க்கை, மனக்குறைநீங்கும். | பகல் | 11 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| **சனி**- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4**

### துலாம்: — சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கன்னி: — சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மனமகிழ்ச்சி | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, தொழில் மந்தம். | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- கடன் தொல்லை. மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**



படிப்பகம்

www.padippakam.com

# பொட்டுவைத்த முகமோ?

நெற்றியில் பெண்கள் பொட்டிட்டுக் கொள்வதை தமிழ்ப் பெண்கள் வெறும் அழகு முயற்சியாகக் கருதாமல் மங்களச் சின்னமாகவே கருதி வருகின்றனர்.



முன்பெல்லாம் பெண்கள் நெற்றியில் சாந்துப் பொட்டையே வைத்துக் கொள்வார்கள். ஆனால் இக்காலத்தில் விதவிதமான நவீன நாகரிக ரகத்தில் பொட்டுக்கள் வந்துள்ளன. உருவ அமைப்பிலும் வித்தியாசமான தோற்றங்களில்-பெண்களைக் கவரும் விதத்தில் பொட்டுக்கள் வந்துள்ளன.

பெண்கள் பொட்டிட்டுக் கொள்வது, அவர்கள் அழகிற்கு சிறப்பைத் தருவது என்றாலும் எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியான பொட்டு வைத்துக்கொள்வது அழகைத் தராது. அவரவரின் அழகைப் பொறுத்தே பொட்டு வைத்தல் நல்லது.

* கறுப்பு நிறமானவர்கள் சிவப்பு நிற சாந்து அல்லது குங்குமப் பொட்டிடுவது அழகைத் தரும்.
* சிவப்பழகைக் கொண்ட பெண்களுக்கு சிவப்பு, கறுப்பு வர்ணப் பொட்டு அழகாக இருக்கும்.
* குறுகிய நெற்றி உடையவர்கள் நெற்றியின் மத்தியில் மெல்லிய பொட்டாக வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.
* சற்று நீண்ட முக அமைப்புக் கொண்ட பெண்கள் வட்ட வடிவில் உள்ள பொட்டு வைத்துக் கொள்வது நல்லது.
* வட்ட வடிவ முகமும், சற்றுப் பரந்த முகம் உடையவர்கள் சற்று நீளவாக்கில் பொட்டு வைத்தால் சிறப்பாக இருக்கும்.

# அழகுப் பயிற்சி

உடற்பயிற்சி நிலையம் போக நேரமில்லை. உடற்பயிற்சி இயந்திரங்களை வாங்கி வீட்டில் இருந்தபடியே செய்ய வசதியும் இல்லை. இந்த நிலையில் உடலை எப்படி அளவோடு வைத்துக்கொள்வது எனப் புலம்பும் பெண்களில் நீங்களும் ஒருவரா? கவலையை விடுங்கள். வயிறு குறைய, இடை மெலிய, மார்பகங்கள் எடுப்பாக, இளமையைத் தக்க வைத்துக்கொள்ள சில எளிமையான உடற்பயிற்சிகள் இதோ:

**வயிறு குறைய...**

நேராக நிமிர்ந்து மல்லாந்து படுக்கவும். முதுகு தரையிலும், கணுக்கால்கள் ஏதேனும் ஒரு நாற்காலி அல்லது சோபாவில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். கைகள் இரண்டையும் தலைக்குப்பின்னால் சேர்த்துப் பிடித்துக்கொள்ளவும். மூச்சை மெதுவாக உள்ளிழுத்து, தலையை லேசாக உயர்த்தி, தோள்களை உயர்த்தவும். வயிற்றுத் தசைகளையும் முடிந்தவரை உள்ளே இழுக்கவும். சில நொடிகள் கழித்து, மூச்சை வெளியே விட்டபடி பழைய நிலைக்குத் திரும்பவும். தினமும் குறைந்தது 20 முறை இதைச் செய்யவும்.

**இடை மெலிய...**

கால்களை ஒன்று சேர்த்து நிமிர்ந்து, நேராக நிற்கவும்.கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்தபடி வலப்புறமாக 20 முறைகளும், இடப்புறமாக 20 முறைகள் சுற்றவும்.

**மார்பகங்கள் எடுப்பாக...**

சுவருக்கு முன்னால் நின்றுகொண்டு இரு உள்ளங்கைகளும் சுவரின் மீது படியும்படி செய்யவும். தலை, இடுப்பு எதையும் முன்னோக்கித் தள்ளாமல், மார்பகங்களை மட்டும் முன்னே கொண்டு வரவும். கைகளையும் வளைக்கக்கூடாது. தினமும் இப்படி 20 முதல் 25முறை செய்யவும்.

# சின்னச் சின்ன குறிப்புகள்

பெண்கள் கை, கால் விரல்களின் அழகைப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். கை,கால் விரல்களின் அழகைப் பேண சில டிப்ஸ் இதோ:



* கைகளைக் கழுவி கிளிசரின், பன்னீர், எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றைச் சம அளவு சேர்த்துக் கலந்து விரல்களில் தேயுங்கள்.
* விரல் நுனிப் பகுதியில் கீறல் ஏற்பட்டால், அதில் பாலாடையைப் புரட்டுங்கள்.
* பாலாடை, தேன் இரண்டையும் கலந்து விரல்களில் தேய்த்தால் கரடுமுரடான விரல்கள்கூட மென்மையாக, அழகாக மாறிவிடும்.
* பன்னீர், கிளிசரின், எலுமிச்சம்பழச் சாறு, ஒலிவ் எண்ணெய் ஆகியவைகளைக் கலந்து போத்தலில் அடைத்து வைத்துக்கொள்ளுங்கள். அதனைச் சிறந்த 'ஹேண்ட் லோஷனாக' பயன்படுத்தலாம்.
* ஒரு தேக்கரண்டி தேனில் சில துளி எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து இலே சாகச் சூடாக்கி, அதே சூட்டில் கைகளில் புரட்ட வேண்டும். 20 நிமிடம் கழித்து கழுவி விட்டு 'ஹேண்ட் கிறீம்' பூசுங்கள். அழகாகும்.
* நகங்கள் அடிக்கடி உடைந்தால், நகங்களில் எலுமிச்சம் பழத் தோலை வைத்துத் தேயுங்கள். நகம் உடையாது.
* கோடை காலத்தில் பாதங்களுக்கு அழகு கிடைக்க, குளிர்ந்த நீரில் உப்பு கலந்து அதில் பாதங்களை ஊற வையுங்கள்.
* தூங்கச் செல்லும்போது கால் பாதங்களை ஒலிவ் எண்ணெயால் மஸாஜ் செய்யுங்கள். விரல்களுக்கு இடையிலும் மஸாஜ் செய்யவேண்டும். தூங்கச் செல்லும்போது பாதங்களைக் கழுவிச் சுத்தப் படுத்தினால் கால் வேதனை தீரும். அசுத்தமும் நீங்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DW

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-06-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




# கண்ணீரில் கரைந்த இரவுகள்

புவனா

1991 செப்டம்பரில் பிள்ளைகள் இருவரும் லுட்குரோவ் பாடசாலையில் சேர்ந்த பின்னர் டயானா தனிமையில் வாடினார்.

தனிமையில் வாடிய டயானாவுக்கு வாழ்க்கைமீது மறுபடி சலிப்பு ஏற்படத் தொடங்கியது.

டயானாவின் மெய்காப்பாளர்களில் ஒருவர் டயானாவின் நிலையறிந்து உண்மையான பரிவோடு நடந்துகொண்டார்.



டயானாவும் அந்த மெய்காப்பாளரின் விசுவாசத்தைக் கண்டு அவர்மேல் அபிமானம் கொண்டார்.

டயானா வெளியே செல்லும்போது மெய்காப்பாளர்களுடன் செல்வதை அநேகமாகத் தவிர்த்தே வந்தார்.

"வருங்கால ராணி தனியாக நடமாடக் கூடாது. அயர்லாந்து கெரில்லாக்கள் அரச குடும்பம்மீது கோபமாக இருக்கிறார்கள்!" என்று அரண்மனை வட்டாரம் மிரட்டிப்பார்த்தது.

டயானா மசியவில்லை. "அவர்கள் என்னை ஒன்றும் செய்யமாட்டார்கள். அப்படித்தான் கடத்திக்கொண்டு போனாலும் இந்தச் சிறையை விட அது ஒன்றும் மோசமானதாக இருந்துவிடப் போவதில்லை!" என்று டயானா ஒருநாள் கூறியதோடு; வற்புறுத்துவதையே விட்டுவிட்டார்கள்.

உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகள் சிலவற்றுக்கு செல்லும்போதுதான் மெய்காப்பாளர்களை அனுமதிப்பார்.

ஆனால் குறிப்பிட்ட மெய்க்காப்பாளர் ஒருவர்மீது அபிமானம் ஏற்பட்ட பின்னர் வெளியே செல்லும்போது அவரையும் கூட அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

ஏனைய மெய்காப்பாளர்களுக்கு அதனால் பொறாமை. சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர்.

அந்த மெய்காப்பாளரும் பெண்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய தோற்றமுடையவர். அரண்மனைப் பெண்கள் வேறு சிலரும் அவரை சீண்டியிருக்கிறார்கள்.

## அரண்மனை அந்தரங்கம்

அரண்மனைக்குள் எத்தனையோ அந்தரங்கங்கள் இருக்கின்றன. வெளியே பகட்டாகவும், மரியாதைக்குரியதாகவும் தெரிகின்ற அரண்மனைக்குள் பணியாற்றும் ஊழியர்களுக்கு எத்தனையோ இரகசியங்கள் தெரியும்.

எப்போதாவது ஒரு சிலர் மட்டும் அந்த இரகசியங்களை வெளியே கூறத் துணிவதுண்டு. நல்ல விலைக்கு விற்று விடுவதுமுண்டு.

அநேகமான ஊழியர்கள் மூச்சுக்காட்ட மாட்டார்கள். அவர்கள் அரச குடும்பத்தை பல வழிகளிலும் சார்ந்து இருப்பவர்கள்.

கம்பீரமான ஆண்மக்கள்மேல் மையல் கொள்ளும் அரச குடும்பப் பெண்கள் சில பணியாட்களுக்கு மிகுந்த சலுகை காட்டும் போதே ஏனையோருக்கு அதன் சூட்சுமம் விளங்கிவிடும். வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள்.

அரச குடும்பப் பெண்களுக்கு அந்தரங்கச் செயலாளர்கள், உதவியாளர்கள், ஆலோசகர்கள் என்று பல பெண்கள் நடமாடும் இடம் அரண்மனை. அத்தனை பெண்களும் நவநாகரிகத்தில் ஊறித் திளைத்தவர்கள்.

திகட்டத் திகட்ட பணமும் பகட்டும் அவர்களுக்கு சலிப்பூட்டியபோது, மாறுதலுக்காக 'செக்ஸ்' தேவைப்பட்டது.

அவர்களது கணவன்மாருக்கோ மனைவிகளைக் கவனிக்க நேரமில்லை. பதவி, மேலும் உயர் பதவி, கௌரவம், விழாக்கள், விருந்துகள் என்று காலில் சக்கரம் பூட்டிக்கொண்டதுபோல ஒடித் திரிந்தனர்.

அரண்மனைக்குள்ளும் அரண்மனையைச் சார்ந்த உயர்தர குடும்பங்கள் பலவற்றிலும் இதுதான் நிலைமை.

அரண்மனைப் பெண்களும், அவர்களது நண்பிகளும் கம்பீர ஆடவர்கள் தேடவும், பணியாட்கள்மேல் மையல் கொள்ளவும் அதுவும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

சம்பிரதாயங்கள், மரபுகள் பற்றி அளவுக்கு மீறிப் பேசுகிறவர்கள், திரைமறைவில் அவற்றை மீறுகிறவர்களாகவே இருப்பர் என்று கூறப்படுவதுண்டு.

அரண்மனையைப் பொறுத்தவரை அக் கூற்றில் உண்மை இருக்கவே செய்தது.

இளவரசி டயானாவுடன் நெருக்கமான மெய்காப்பாளர் விடயமும் ஏனைய மெய்காப்பாளர்கள் மத்தியில் பேசப்பட்டளவுக்கு வெளியே தெரியவில்லை.

எனினும் அரச குடும்பத்தினருக்கு அது தெரியாமலில்லை. அந்த மெய்காப்பாளரை தற்காலிகமாக கட்டாய லீவில் அனுப்ப முயற்சி நடந்தது.

பணியில் சிரத்தையில்லை என்று காரணம் காட்டியே லீவில் அனுப்ப முயற்சிக்கப்பட்டது.

அதனை அறிந்த டயானா கொதித்தெழுந்தார். டயானாவின் எதிர்ப்பைக் கண்டு மிரண்ட அரச குடும்பத்தினர் அம் முயற்சியைக் கைவிட்டனர்.

## உடற் பயிற்சி

அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சி செய்யும் பழக்கம் டயானாவுக்கு இருந்தது.

இடைக்கிடையே பயிற்சியைக் கைவிட்டால் உடலில் சதை போட்டு விடும். 'போட்டால் போடட்டும்' என்று சில சமயங்களில் வெறுப்பாக இருந்து விடுவார்.



# அரண்மனை அந்தரங்கம்

பின்னர் சில நாட்களில் தனது முடிவை மாற்றிக்கொண்டு பயிற்சிகளில் ஈடுபடுவார்.

உடலைக் கட்டாக வைத்திருக்க வேண்டும். எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் டயானாவின் ஆசைகள். வாழ்க்கையில் வீசிய புயலால் இடைக்கிடையே அந்த ஆசைகளில் தடங்கல் ஏற்பட்டது.

மெய்காப்பாளருடன் பழகத் தொடங்கிய பின்னர் அதிகாலையில் எழுந்து பயிற்சி செய்ய ஆரம்பித்தார் டயானா.

இவையெல்லாம் அரச குடும்பத்தாருக்கு மேலும் எரிச்சலை ஏற்படுத்தின. சாள்ஸ்சும் எரிச்சலடைந்தார்.

இதனை அறிந்த டயானா, சாள்ஸுக்கு நெருக்கமான ஒருவரிடமே: "சாள்ஸ் விரும்பினால் கமீலாவுடன் இணைந்து பயிற்சி செய்யட்டும். சுறுசுறுப்பாக இருப்பார். கமீலாவுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்!" என்று கிண்டலாகக் கூற, சாள்ஸ்சின் நண்பரது முகம் சிறுத்துப்போனது.



டயானா நினைத்தது போலவே, சாள்ஸ்சின் காதுக்கு டயானாவின் கிண்டல் எட்டியது.

சாள்ஸ்சின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ; திடீரென்று ஒருநாள் அந்த மெய்காவலர் வேலையில் இருந்து நின்றுவிட்டார்.

டயானா அவரது வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, வீட்டை அவர் காலி செய்திருப்பது தெரிந்தது.

அரச குடும்பத்தினர்தான் ஏதோ சூது செய்திருக்கிறார்கள் என்பதில் டயானாவுக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை.

அதன்பின்னர் அரச குடும்பத்தாரை எரிச்சல்படுத்தும் காரியங்களில் தொடர்ந்து ஈடுபடத் தொடங்கினார்.

கடைத்தெருவுக்கு தனியாக நடந்து செல்லத் தொடங்கினார். அரைக் காற்சட்டையுடன் கடைத்தெருவில் டயானா நடந்து செல்லும் காட்சிகள் பத்திரிகைகளில் வெளியாகின.

அப் புகைப்படங்கள் வெளியான பத்திரிகைகளைத் தூக்கி வீசியெறிந்து தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர் சாள்ஸும், மகாராணியும்.

## டயானா உரை

அரண்மனை மற்றும் வெளிவிருந்துகளில் அரச குடும்பத்தினர் ஆற்றும் உரைகள் பத்திரிகைகளில் வெளியாவதும், அவற்றையிட்டு புளகாங்கிதமுற்று பேசுவதற்கும் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் அந்த உரைகள் அவர்களுக்குச் சொந்தமானதல்ல. அவர்களது அந்தரங்கச் செயலாளர்களாலோ, ஆலோசகர்களாலோ தயார் செய்யப்படுகின்றன.

உரையாற்றச் செல்ல முன்னர் ஒருதடவை வாசித்துப் பார்த்துக் கொள்வார்கள்.

இதயத்திலிருந்து அவர்கள் பேசுவதில்லை; எழுதப்பட்ட உரையை உதடுகளால் வாசிக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

டயானாவுக்கும் ஆரம்பத்தில் உரைகள் எழுதிக் கொடுக்கப்பட்டன. பிறருடைய கருத்துக்களை தனது கருத்துக்களாகக் கூறி பாராட்டுப் பெறுவதை டயானா விரும்பவில்லை.

அதனால் தனது உரைகளைத் தானே எழுதித் தயார் செய்ய ஆரம்பித்தார்.

தேவையான புள்ளிவிபரங்களைப் பெறுவதற்கு மட்டும் ஏனையோரின் உதவியை நாடினார்.

அரச குடும்பத்தினர் பிறரால் தயாரிக்கப்படும் உரைகளை காகிதம் கசங்காமல் வாசித்து விட்டு போய்விடுவர். அந்த உரைகளில் கூறப்பட்டவை பற்றி கேள்வி கேட்க யாருக்கும் அனுமதி இருப்பதில்லை.

ஏனெனில் கேள்வி கேட்டால் பதில் சொல்ல அவர்களுக்கு விபரம் போதாது.

ஆனால்,டயானா தானே உரையைத் தயாரித்து பேசுவதால், தனது உரை முடிந்ததும் 'கேள்வி கேட்கலாம்' என்று அனுமதி கொடுத்தார். அரச குடும்பத்தினருக்கு டயானாவை கடித்தே தின்றுவிடுமளவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது அச்செயல்.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கலஹா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி
இவர்தான்
**எஸ். கீர்த்தனி,**
**147/15, மனோஜ் வாசா, கலஹா.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 05

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





நெஞ்சே! வாழி! நேர்மையுடன் வாழி!
வஞ்சகக் கவலைக் கிடங்கொடேல்
மன்னோ!
தஞ்ச முண்டு சென்னேன்,
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புத்திசாலி இளவரசன்

மாணிக்கபுரி என்ற நாட்டை மணிமாறன் என்ற மன்னர் ஆட்சி செய்து வந்தார். அவருக்கு மணிவண்ணன், மதனராஜன், மதிவாணன் என மூன்று மகன்கள் இருந்தனர்.

மன்னர் மணிமாறன் தனக்குப் பின் யாரை மன்னனாக்கலாம் என்று யோசனை செய்தார். இறுதியில், மூவரில் யார் புத்திசாலியாக இருக்கிறாரோ அவரையே மன்னராக்குவது என முடிவு செய்தார் மன்னர் மணிமாறன்.

அதன்படி மன்னர் தனது மகன்கள் மூவரையும் அழைத்தார். மூவருக்கும் சிறிது பணத்தைக் கொடுத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறையைக் கொடுத்தார். இப்பணத்தை வைத்து யார் வீடு முழுவதும் நிரம்பும்படி செய்கிறாரோ அவர்தான் அடுத்த மன்னன் என்று கூறினார்.

மன்னரின் முதலாவது மகன் மணிவண்ணன் தனக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு வைக்கோலை வாங்கினான். அதை தனக்குக்கொடுத்த அறை முழுவதும் பரப்பினான்.

இரண்டாவது மகன் மதனராஜன் தனக்குக்கிடைத்த பணத்தைக் கொண்டு ஊரில் மலிவாகக் கிடைத்த புல்லுக் கட்டுக்களை வாங்கி, தனது அறை முழுக்க அடுக்கினான்.

மூன்றாவது மகன் மதிவாணன் தனது பணத்தில் மெழுகுவர்த்திகளை வாங்கி, அறையில் எரியவிட்டான்.

ஓரிரு நாட்களின் பின்னர் மன்னர்



மணிமாறன் தனது மகன்களின் நிலையை அறிய அவர்களின் அறைகளைப் பார்வையிடச் சென்றார்.

முதலாவது மகனின் அறையை எட்டிப் பார்த்தார். அறையில் வைக்கோல் குவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அறை முழுவதும் தூசு படிந்து அழுக்காக இருந்தது.

இரண்டாவது மகனின் அறையை எட்டிப்பார்த்த மன்னர், மூக்கைச் சுளித்துக் கொண்டு திரும்பி விட்டார். ஏனென்றால், அந்த அறையில் இருந்து புல்லுக் கட்டுக்கள் எல்லாம் அழுகித் துர்வாடை வீசிக்கொண்டிருந்தது.

மூன்றாவது மகனின் அறைக்குள் சென்ற மன்னர், அங்கே மெழுகுவர்த்தி எரிந்து, அறை முழுவதும் வெளிச்சம் நிரம்பியிருப்பதைக் கண்டார். அறை சுத்தமாகவும், அமைதியாகவும் இருந்தது.

மூன்றாவது மகன் மதிவாணன் மற்ற இருவரையும்விட புத்திக்கூர்மையுடையவனாக இருப்பதைக் கண்டு அவனைப் பாராட்டினார். இளவரசனான அவனுக்கு பட்டம் சூட்டி மன்னனாக்கினார்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



### தங்கக் கையுறைகள்:

பண்டைக் காலத்தில் பெருநாட்டு 'இன்கா' இனத்தவர், மகான்களின் சடலங்களுக்கு சுத்தமான தங்கத்தினாலான கையுறைகளை அணிவித்து வந்தனர்.




### இரு ஊர்களில் இருவர்:

கியூபெக் நாட்டிலுள்ள இரண்டு ஊர்களில் தலா ஒவ்வொருவர்தான் வசிக்கிறார்கள்.

### திருட்டுக்குத் தண்டனை:

இங்கிலாந்தில் ஜெரானியம் என்னும் செடியைத் திருடினால் தண்டனை கிடைக்கும். என்ன தண்டனை தெரியுமா? 5 வருடம் சிறை விதிப்பு.



### தண்டிக்கப்பட்ட நிரபராதி:

மேஜர் ஜோன் பொர்னாடி என்பவர் 3ம் வில்லியம் மன்னரைக் கொல்ல சதி செய்தார் என்று சிறையிலடைக்கப்பட்டார். உண்மையிலேயே நிரபராதியான இவர் 40 ஆண்டுகள் சிறையில் இருந்து, பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலையானார்.



## வாரம் ஒரு நாடு

### உஸ்பெகிஸ்தான்



தலைநகர்- தாஷ்கண்ட்
பரப்பு- 4,47,400 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 2.28 கோடி
மொழி- உஸ்பெக், ரஷ்யன்
சமயம்- இஸ்லாம்
நாணயம்- சோம்
எழுத்தறிவு- 97%
தனிநபர் வருமானம்- 950 டொலர்

**அமைவிடம்:**

மேற்கேயும், வடக்கேயும் கஸாக்ஸ்தான், கிழக்கே கிர்கிஸியா மற்றும் தஜிகிஸ்தான், தெற்கே ஆஃப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் சூழ்ந்திருக்கின்றன. வடமேற்கு மூலையில் ஆரல்கடல் உள்ளது.

**வரலாறு:**

முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்று. 1991ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தனி நாடாகியது.

**பொருளாதாரம்:**

பருத்தி உற்பத்தியில் உலகில் மூன்றாமிடம் வகிக்கிறது. விவசாயப் பொருட்கள், சீமெந்து, இரசாயனத் தொழிற்சாலைகள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.06.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 249
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 247

**பரிசுக்குரியவர்:**
இப்திகார் இஸ்மாயில்,
உடபதலதெனிய, மடவளை பஸார்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.எஸ்.எம். றிஹான், மஸ்கெலியா. | முகமட் இன்ஃபாஸ், பீரிஸ் பிளேஸ், தெஹிவளை. |
| மனோஜ் நமசிவாயம், பெண்கள் பாடசாலை, நுவரெலியா. | எஸ். சிறிகந்த ராஜா, கிரேட்வெஸ்லூசா, தமிழ் மகாவித்., தலவாக்கெலை. |
| எஃவ். நத்றா, மட்/ஹிபூறியா வித்தியாலயம், காத்தான்குடி. | எஸ். பானுச்சந்தர், ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். |
| பாத்திமா நுப்லா நவாஸ், மா/ ஆமினா மகா வித்தியாலயம், மாத்தளை. | எஸ். பிரியதர்ஷன், ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி, கலஹா. |
| ஜெ. இந்துஜா, நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம். | கி. ஷர்மினா, இ/சீ.சீ.தமிழ் வித்தியாலயம்,பலாங்கொடை. |

## அதிவேக ரயில்

உலகின் அதிகவேக இரயில் ஃபிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதன் பெயர் டி.ஜி.வி. இதன் வேகம் மணித்தியாலத்துக்கு 510 கிலோமீட்டர் ஆகும். இந்த இரயிலில் இன்னமும் பயணிகளை ஏற்றிச் செல்ல விடப்படவில்லை.



தற்போது ஃபிரான்ஸில் ஓடும் பயணிகள் இரயிலின் அதிக பட்ச வேகம் மணித்தியாலத்துக்கு 250 கிலோமீட்டர்.

ஃபிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் இருந்து 2 ஆயிரம் சிறிய, பெரிய நகரங்களுக்கு ஃபிரான்ஸ் அரசாங்கம் இரயில் போக்குவரத்தை நடத்தி வருகிறது.

இன்னும் 10 வருடங்களுக்குள் உலகின் அதிவேக இரயிலான டி.ஜி.வி. பயணிகளை ஏற்றிக்கொண்டு ஓடத் தொடங்கும்.

## குகை மனிதர்கள்

சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் 'பிற் காலக் குகை மனிதர்கள்.' இவர்கள் 'முற்காலக் குகை மனிதர்'களை விட அறிவில் சற்று உயர்ந்தவர்கள்.



பிற்காலக் குகை மனிதர்கள் வேட்டையில் கொன்ற விலங்குகளின் தோலை ஆடையாக அணிந்தனர். இறைச்சியில் உள்ள கொழுப்பைப் பிரித்து எடுத்து எரிபொருளாகப் பயன்படுத்தி, இரவில் விளக்குகளை எரித்து வாழ்ந்தார்கள். கற்களினால் கூரிய ஆயுதங்களைச் செய்ததுடன், விலங்குகளின் எலும்புகளைக் கொண்டும் ஆயுதங்களைச் செய்தனர். குகைகளின் சுவர்களில் ஓவியங்கள் வரைந்தும், கற்களால் தாங்கள் வேட்டையாடிய விலங்குகளைச் சித்திரங்களாகச் செதுக்கினர்.


இவர்கள் வாழ்ந்த காலம்தான் கற்காலம் எனப்படுகிறது.

## மாம்பழம்



- **மாம்பழத்தின் பிறப்பிடம் எது?**
  இந்திய மாநிலங்களில் ஒன்றான அசாம் மற்றும் மியான்மர் (பர்மா) ஆகியவற்றின் இடைப்பட்ட பகுதிகளில் பிறந்ததாகக் கூறுகின்றனர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள் மாம்பழத்தின் பிறப்பிடம் மலேசியா என்று கூறுகின்றனர்.
- **வேறு எந்த இடங்களில் மாம்பழம் உற்பத்தியாகிறது?**
  ஆசியாக் கண்டத்திலிருந்து போர்த்துக்கேயர்-ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க கண்டங்களுக்கு மாம்பழத்தை எடுத்துச் சென்று உற்பத்தி செய்தனர். உலகம் முழுவதிலும் உள்ள வெப்பவலய நாடுகளில் மாம்பழம் உற்பத்தியாகிறது.
- **மாம்பழம் அதிகம் உற்பத்தியாகும் இடம் எது?**
  இந்தியா. உலகில் உற்பத்தியாகும் மாம்பழங்களில் 59% மாம்பழம் இந்தியாவில் தான் உற்பத்தியாகிறது.
- **எத்தனை வகை மாம்பழங்கள் இருக்கின்றன?**
  500க்கும் மேற்பட்ட வகையான மாம்பழங்கள் இருக்கின்றன.
- **மாம்பழத்தில் என்ன வகையான சத்துக்கள் உள்ளன?**
  மாம்பழத்தில் விட்டமின் ஏ,சி ஆகிய சத்துக்களும் பொட்டாசியம் போன்ற கனியுப்புக்களும் அடங்கியுள்ளன.

## இன்னொரு கோபுரம்



இந்தக் கோபுரத்தைப் பார்த்ததும், உலக அதிசயங்களுள் ஒன்றான இத்தாலி நாட்டின் பைஸா கோபுரம் என்று கூறுவீர்கள். அதுதான் இல்லை. இந்தக் கோபுரம் ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள நிம்ஸ் என்ற நகரின் அருகே அமைந்துள்ளது. ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள மிகப் பழமையான கட்டடங்களில் இதுவும் ஒன்று.

இந்தக் கோபுரத்திற்கு 'உஜெஸ்' கோபுரம் என்று பெயர். கி.பி. 12ம் நூற்றாண்டில் இக் கோபுரம் கட்டப்பட்டது.

## ஏன் தெரியுமா?

வெங்காயம் உரிக்கும்போதோ அல்லது நறுக்கும் போதோ கண்ணெல்லாம் எரிச்சலாகி கண்ணீர் வரும். அது ஏன் தெரியுமா?



வெங்காயத்தில் புரொபேன்தையால் ஒட்சைட் என்னும் இரசாயனப் பொருள் ஒன்று உள்ளது. இது சுலபமாக ஆவியாகும் தன்மை கொண்டது. வெங்காயத்தை உரிக்கும்போது இந்த இரசாயனப்பொருள் உடனடியாகக் கண்களைத் தாக்கும். இதனால் கண் எரிச்சல் ஏற்பட்டு, கண்ணீர் வரும்.

இப்போது தெரிந்ததா வெங்காயம் உரிக்கும்போது கண்களில் ஏன் எரிச்சலும், கண்ணீரும் ஏற்படுகிறது என்று.



படிப்பகம்

www.padippakam.com

# திக் திக் திக் 15

# நந்தினி 440 வோல்ட்

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"யாரது..?"
பதிலுக்கு-
'தட்... தட்...'
சத்தம் மட்டும்.
"யாரது...?"
மௌனம்.
"யாரது...?"

கேட்டுக்கொண்டே- தாழ்ப்பாளை விலக்கி கதவை மெல்லத் திறந்தான் பிரகாஷ். காற்று விசுக்கென்று முகத்தின் மேல் வந்து மோத-

வெளியே-

யாருமில்லை.



பிரகாஷ் நடையைப் பெயர்த்து தயக்கமாய்-

வெளியே வந்தான்.

அவுட் ஹவுஸைச் சுற்றிலும் இருட்டு கனமாய்ப் பூசியிருக்க- சுற்றும் முற்றும் பார்த்தபடி, வீட்டின் பக்கவாட்டு வராந்தாவில் நடந்து வந்தான்.

வராந்தாவின் மையத்திற்கு வந்ததும்-

திரும்பினான்.

அடுத்த விநாடி-

"ர்ர்ர்ரப்..." என்று பின்னந்தலையில் அந்த அடி விழ- சத்தமே எழுப்பாமல் சுருண்டான் பிரகாஷ்.

வராந்தாவின் தூணுக்குப் பின்னாடியிருந்து-கையில் மண்வெட்டியோடு வெளிப்பட்டாள் நந்தினி. கண்களிலும் முகத்திலும் உக்கிரம் உட்கார்ந்திருந்தது.

கீழே சுருண்டு விழுந்த-பிரகாஷின் கழுத்தை மண்வெட்டியால் 'நச்'சென்று ஒரு போடுபோட்டாள்.

கழுத்தில் இரத்தக் கால்வாய் ஒன்று கொப்பளிக்க- விலுக்கென்று ஒரு முறை உதறிக்கொண்டான் பிரகாஷ்.

நந்தினி எழுந்தாள்.

இரத்தம் சொட்டும் மண்வெட்டியோடு கதவை நோக்கி நடந்தாள். வெறுமனே சாத்தியிருந்த கதவைத் தள்ளினாள்.

உள்ளேயிருந்து- அரையிருட்டில் சொப்னா கூப்பிட்டாள்:

"பிரகாஷ்...!"

குரலைக் காட்டாமல் மெதுவாய் உள்ளே போனாள் நந்தினி.

கட்டிலின் நுனியில் நிழலுருவமாய் உட்கார்ந்திருந்த சொப்னா. பயமாய் எழுந்தாள். குரலில் குளிர் தொற்றிக்கொள்ள கேட்டாள்:

"யா...ர...து...?"

"......."

நந்தினி சொப்னாவையே பார்த்துக் கொண்டு வந்தாள்.

"யா...யா...யாரது...?"

சொப்னா மெதுவாய்ப் பின்வாங்கினாள்.

நந்தினி சிரித்தாள். பல்வரிசை பளிச்சென்று தெரிய கேட்டாள்:

"என்ன...சொப்னா...என்னைத் தெரியலையா...?"

"ந....ந....ந....ந்....ந்ந்...."

"நந்தினி!" என்றாள் நந்தினி.

சொப்னா அதிர்ந்துபோய்-உறைந்து நின்ற அந்த விநாடி-

நந்தினியின் கையிலிருந்த-பிரகாஷின் இரத்தம் பட்டு தோய்ந்த மண்வெட்டி சொப்னாவின் நடு மண்டையில் 'நெக்'கென்று இறங்கிற்று.

சத்தம் காட்டாமல் துள்ளி விழுந்தாள் சொப்னா. விழுந்த சொப்னாவின் மார்பில் காலைப்பதித்து-முகத்தை நோக்கி- ஆக்ரோஷமாய் மண்வெட்டியால் கொத்தினாள் நந்தினி.

ஒரு நிமிஷம்-

சுத்தமாய்த் துடித்து-

மெல்ல மெல்ல அடங்கிப் போனாள் சொப்னா.

நந்தினி வியர்வை பொங்க நிமிர்ந்தாள். கையிலிருந்த மண்வெட்டியோடு குளியலறைக்குப் போய்- குழாயைத் திருப்பி விட்டு- கொட்டிய நீரில் மண்வெட்டியைக் கழுவினாள். தன்னையும் சுத்தப் படுத்திக்கொண்டாள்.

அவுட் ஹவுஸை விட்டு வெளியே வந்து- பங்களாவை நோக்கிப் போனாள்.

★★★

மறுநாள் காலை ஏழு மணி.

பொலிஸார், அவுட் ஹவுஸைச் சுற்றிலும் பரவியிருந்தார்கள். சொப்னாவையும், பிரகாஷையும் வெளியே கிடத்தி- ப்ளாஷ் 'மின்ன மின்ன' காமிராவில் அடைத்துக் கொண்டிருந்தார்கள், ஃபோட்டோ கிராபர்கள்.

வருத்தம் தோய்ந்த முகங்களோடும்
கண்ணீர் நிரம்பிய கண்களோடும்-
வாகீசன்,
பரிமளம்,
பாரி,
வயலெட்,
விமல்
எல்லோரும் நின்றிருக்க-

போர்டிகோவில் போடப்பட்டிருந்த நாற்காலியில்-கண்களைக் கவ்விய கூலிங்கிளாஸின் வழியே- வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் நந்தினி.

நந்தினிக்குள்ளே ஒரு 440 வோல்ட் அபாயம் ஒளிந்திருக்கிறது. அவள் பொலிஸில் என்றைக்காவது ஒருநாள் மாட்டிக் கொள்ளலாம்.

ஆனால்-

அதுவரைக்கும்-

அவள் கண்ணெதிரே

எந்த அக்ரமம் நடந்தாலும்

அங்கே கொலை விழுவது தவிர்க்க முடியாத ஒன்று.

வாசகர்களே!

நந்தினிக்குத் தெரியும்படியாக எந்தத் தப்பையும் பண்ணிவிடாதீர்கள்!

(முற்றும்)




## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

## பயணம் - 06

# 'அன்ன பூரணி அம்மா'

**வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை சென்ற 'அன்ன பூரணி அம்மா' கப்பல் பற்றிய சுவையான உண்மைக் கதை. விறுவிறுப்பான விவரிப்பால் நம்மை அக்காலத்திற்கே இழுத்துச் செல்கிறார் ராஜகோபால்.**

ஈ.கே. ராஜகோபால்

அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைத் தம்பிப்பிள்ளை தண்டையலின் யோசனைப்படி றொபின்சன் செய்து முடித்தார்!

1937 ஜனவரி 27-

நினைத்துக்கூடப் பார்க்க முடியாத- நெஞ்சத்தை அஞ்சவைக்கும் அந்தப் பயணம் ஆரம்பமானது!

கொழும்புத் துறைமுகத்திலிருந்து- வல்வெட்டித்துறையில் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து கடலோடுவதில் தனிக்காட்டு ராஜாவாகத் திகழ்ந்த தம்பிப்பிள்ளை தண்டையல் தலைமையில்-

வல்வெட்டித்துறைக் கடலோடிகளான தா. சபாரத்தினம், ஐ. இரத்தினசாமி, க. நடராசா, சேது நவரத்தினராசா, சி. சிதம்பரப்பிள்ளை, சுப்பிரமணியம், தில்லையம்பலம் ஆகியோர்களுடன் 'சாண்டோ'வாகத் திகழ்ந்துவந்த சங்கரதாஸ் ஆகியோருடன் இரட்டைப் பாய்மரக் கப்பலான 'அன்னபூரணி' அம்மாள்,

அசைந்து, அசைந்து செல்லத் தொடங்கியது!

கப்பல் உரிமையாளர் றொபின்சன் ஆனந்தத்தால் தம்பிப்பிள்ளைத் தண்டையலின் முதுகில் தட்டிக் கொடுத்தார்!

எல்லாருமே வெகு உற்சாகமாக, பெரும் பயங்கரம் நிறைந்த பயணத்துக்குத் தம்மைத் தயாராக்கிக் கொண்டார்கள்!

இந்தக் கப்பலில் இன்னொருவரும் கூடச்சென்றார்.

கடலோடுவதில், 'சுழிய'ரான இங்கிலாந்தைச் சேர்ந்த குக் என்பவர்தான் அவர்!

காற்றின் வேகத்துக்குத் தக்கபடி, 'அன்னபூரணி' அமைதியாகத் தன் பயணத்தை ஆரம்பித்தாள்!

★★

'அன்னபூரணி'க் கப்பலில் சென்றவர்களில் மிக வயதில் குறைந்த கடலோடி சேது நவரத்தினராசா.

அவருக்கு அப்போது வயது 21.

நவரத்தினராசாவின் தந்தையார் சேது நாராயணபிள்ளை பெரிய கடலோடியாகத் திகழ்ந்தவர்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

தந்தையுடன் சேர்ந்துகொண்டு கடலோடியாக வாழ்வை ஆரம்பித்தார் இவர்!

-இவரது தந்தையின் தலைமையில் சென்ற கப்பலில் ரங்கூன், பர்மா, பினாங் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தார்!

'பர்மா-2' என்ற சரக்குகள் ஏற்றி இறக்கும் கப்பலில் பணியாற்றிய அனுபவமும் இந்த சேது நவரத்தினராசாவுக்கு உண்டு!

●●●

கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'அன்னபூரணி'யின் கதையை சற்றுநேரம் சேது நவரத்தினராசாவிடம் கேட்டுப் பார்ப்போமா!

அவரே சொல்கிறார்:

"திரும்பிப் பார்க்கிறேன்...

கொழும்புத் துறைமுகத்தை என்ன, இலங்கை மாதாவைத்தானும் பார்க்க முடியவில்லை!

காற்றின் உதவி கொண்டு கலம் சென்று கொண்டிருந்தது.

அப்போது-


வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலம். எங்கள் திசை மாறவேண்டி இருந்தது.

மாலைதீவுக் கலங்கரை விளக்கத்தை சென்றடைவதற்குச் சுலபமாக இத்திசை அமைந்தது!

மாலைதீவைத் தாண்டிவிட்டோம்!"

அடுத்து-

கப்பல் தொழிலின் இரகசியங்கள் சிலவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும்.



சீறிச் சினந்து எதிர்கொள்ளும் புயல் காற்றினாலும், சூறாவளியினாலும் தாக்குப் பிடிக்க முடியாது.

நடுக்கடலில் இருக்கும் பெரும் பாறைகளில் பேரலைகள் முட்டி, மோதி எழுப்பும் பயங்கரத்தைப் பார்க்கவும் கேட்கவும் சக்தியற்றவர்கள்,

கப்பலை ஆடாத ஆட்டம் ஆட்டி, கொந்தளித்து ஆர்ப்பரிக்கும் கருங்கடல் அலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள்,

கடலோடிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள்!

அஞ்சி, அஞ்சிச் சாகும் கோழை நெஞ்சம் படைத்தவர்களால், கப்பல் ஓட்டியாக இருக்கவே முடியாது!

வாழ்வு, அல்லது சாவு!

சுறுசுறுப்பும் இந்தத் தொழிலுக்கு அவசியமானது.

மீண்டும் பயணக் கதைக்கு வருகிறார்:

"மாலைதீவு தாண்டிவிட்டோமல்லவா!

பகல் பொழுது முழுவதும் கப்பல் காற்றின் வேகத்துடன் சேர்ந்து சென்றதால், விரைவாகவே மாலைதீவுத் துறைமுகத்தைத் தாண்டினோம்.

இனி மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எதற்குமே தயாராக இருக்கவேண்டும்!

எந்தப் பயங்கரமும் எம்மை, எந்நேரத்திலும் எதிர்நோக்கலாம்.

றொபின்சன் எங்களுக்கு உற்சாகம் ஊட்டிக்கொண்டிருந்தார்.

எங்களுடன் சேர்ந்து, எங்கள் சாப்பாட்டைச் சில சமயம் சாப்பிடுவார்!

ஆறுமாதங்களுக்குத் தேவையான அரிசி மற்றும் சில சாமான்களும் இருந்தன.

எங்களுக்குச் சாப்பாட்டைப் பற்றிய பிரச்சனையே இருக்கவில்லை!

சில சமயங்களில் ஏற்படும் ஒரு முக்கிய பிரச்சனையைச் சமாளிக்கத்தான் எமது பாய்மரக்கப்பலில் 'எஞ்சினைப்' பூட்டியிருந்தோம்.

கருங்கடல் பிரதேசத்தில், 'சூனியப் பிரதேசம்' என்ற ஓர் இடம் கடலில் சில சமயம் ஏற்படுகிறது.

சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாகக் கடலைத் தாக்கும்போது காற்று இல்லாமல் போய்விடுகிறது!

எஞ்ஜின் இயக்கத்தில்தான் செல்ல வேண்டியிருக்கும்.

அப்படியான சந்தர்ப்பங்களில் பாவிப்பதற்குத்தான் எஞ்ஜினை முன்னெச்சரிக்கையாக தம்பிப்பிள்ளைத் தண்டையல் ஆலோசனையை றொபின்சன் ஏற்று முன்னெச்சரிக்கையாகப் பொருத்தியிருந்தார்!

சூறாவளியும் இப்படியான சூனியப் பிரதேசத்தில்தான் நிகழ்கிறது.

சமுதாயத்தில் தன்னந்தனியாகவே நிற்பதுபோல இருக்கும் கப்பலுக்கு வழிகாட்டி யார்?

சில உபகரணங்கள்தான்!

கப்பல் நகர ஆரம்பித்தவுடன் எங்கிருந்து எங்கு போக வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்வதற்கு உலக வரைபடம் ஒன்று கப்பலுக்குள் மேசை ஒன்றின் மீது விரிக்கப்பட்டிருக்கும். கடல் மார்க்கமாகச் செல்லும் கப்பல்களுக்கென்றே அந்த வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கும்.

அது எந்த நேரமும் அந்த மேசையிலேயே இருக்கும்.

நகரங்களைப் பற்றிய விபரங்கள் அந்த 'சாட்'டில் இருக்காது!

உலகத் துறைமுகங்களைக் கொண்டதாக அந்த வரைபடம் இருக்கும்.

'கொம்பாஸ்' என்ற திசையறி கருவி கப்பலுக்கு வழிகாட்டும்!

நமது கப்பல் நகர ஆரம்பித்தவுடனேயே நாம் கடந்து செல்லும் தூரத்தை அறியக் கூடியதாக ஒரு கருவி சமுத்திரத்திலும் கப்பலிலுமாகப் பொருத்தி விடப்பட்டிருக்கும்.

இக்கருவி- கப்பலோடும்போது சுழன்று சுழன்று, சென்ற தூரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும்.

அடுத்த கருவி-

சூரியனை அளந்து, சில கணக்கு முறைகளைக் கொண்டு சமுத்திரத்தில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதையறிந்து சொல்வதற்கான 'சுமான்' என்ற கருவி.

நாம் அந்தக் கருவி மூலம் எங்கு நிற்கிறோம் என்பதை உறுதிசெய்து கொண்டு, மேசையிலுள்ள உலக வரைபட 'சாட்'டில் நிற்கும் இடத்தைப் புள்ளி இட்டுக் கொள்வோம்!

சிலசமயம்,

நாம் செல்ல வேண்டிய இடத்தில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டி இருந்தால், திசையை மாற்றிப் பயணத்தைத் தொடருவோம்..."

(அடுத்த வாரமும்...)


படிப்பகம்

www.padippakam.com




34

மதுமிதாவுக்கு, முழுக்க வியர்த்து விட்டது.

துர்க்காவைப் பார்க்கப் பார்க்க, கோபம் தலைக்கு ஏறியது.

"என் சந்துருவுக்கு மட்டும், ஏதாவது விபரீதமாச்சின்னா, அப்புறம் நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்!" என்று கத்தினாள்.

"மதுமிதா கொஞ்சம் அமைதியா இரு. தப்பு நடந்து போச்சு. இப்ப என்ன செய்யலாம்னு மட்டும் தான் சிந்திக்கணும்." என்றாள் துர்க்கா.

"அந்த மைக்கேல் அல்ஃபோன்ஸாவோட திட்டம் என்னன்னும் தெரியாதுன்னு சொல்றியே"

"நான் அதெல்லாம் கேட்டுக்கலை. ஞாயித்துக்கிழமை அவங்க கல்யாணம் பண்ணிக்கிறதா இருக்காங்க. சனிக்கிழமை ராத்திரி அவனைத் தீர்த்துடுன்னு மட்டும் தான் சொன்னேன்."

"கொலைவரைக்கும் சிந்திச்சிருக்கியே பாவி! எதுக்காக உனக்கு இப்படி ஒரு ரத்த வெறி?"

"மதுமிதா, மறுபடியும் சந்திரசேகர் வீட்டுக்கு ஃபோன் போட்டுப்பாரு. அவர் வேற எங்கேயாவது போயிருக்கலாம். இப்ப திரும்பி பத்திரமா வந்துகூட இருக்கலாம்." என்றார் ஈஸ்வர்.

அவரை முறைத்துவிட்டு, மறுபடியும் சந்திரசேகரின் வீட்டுக்கு டயல் செய்தாள் மதுமிதா.

மணி அடித்துக்கொண்டேயிருக்க, மதுமிதாவுக்கு அழுகை பொங்கியது. விரக்தியுடன் ரிசீவரை வைத்தாள்.

"சந்திரசேகர் வீட்டுக்குப் பக்கத்திலயோ, எதிர்லயோ உள்ள ஏதாச்சும் வீட்டு ஃபோன் நம்பர் உனக்குத் தெரியுமா?"

"வீட்டு நம்பர் எதுவும் தெரியாது. ஆனா, வீட்டுக்கு எதிர்ல ஒரு மெடிக்கல் கடை இருக்கு!"

"அந்த நம்பர் தெரியுமா?"

"தெரியாது"

"கடை பேரு என்ன?"

மதுமிதா யோசித்துப் பார்த்து! "ராதா மெடிக்கல்ஸ்," என்றாள்.

ஈஸ்வர், . உடனே ஹாஸ்பிடலின் ரிசப்ஷனுக்கு ஓடிச் சென்று, டெலிஃபோன் டைரக்டரி எடுத்து வந்து, புரட்டி, ராதா மெடிக்கல்ஸ்ஸின் நம்பரைப் பிடித்தார். அவரே டயல் செய்தார்.

"ஹலோ ராதா மெடிக்கல்ஸ்!"

"சார், உங்க கடைக்கு எதிர்ல டிம்பர் பிஸ்னெஸ் பண்ற, சந்திரசேகர் வீடு இருக்கு. அவருக்கு முக்கியமா, அவசரமா ஒரு தகவல் சொல்லணும். அவரோட ஃபோன் அடிச்சுக்கிட்டே இருக்கு. அவர் வீடு திறந்திருக்குதா, பூட்டியிருக்குதான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்ல முடியுமா? ப்ளீஸ்"

"ஒரு நிமிஷம் சார்"

சில வினாடிகளுக்குப் பிறகு,

"வீடு பூட்டியிருக்கு சார்"

"வாசல்ல அவரோட கார் நிக்கிதா சார்?"

"இல்லைங்க. கொஞ்ச நேரம் முன்னாடி அவர் கார்ல புறப்பட்டுப் போனதைப் பார்த்ததா நம்ம கடைப் பையன் சொல்றான்."

"தேங்ஸ்!" என்று வைத்த ஈஸ்வர் "மதுமிதா, சந்திரசேகர் கார் எடுத்துக்கிட்டு எங்கேயோ போயிருக்கார். அவரோட கார் நம்பர் தெரியுமா உனக்கு?"

"தெரியும்... T.N.07 E.1525"

"ஒண்ணு செய்யலாமா? அஸிஸ்டெண்ட் கமிஷனர் ராஜேஸ்வரன் உனக்கு நல்ல பழக்கமாச்சே. அவர்கிட்ட சொல்லி இந்தக் காரை உடனடியா மடக்கி, சந்திரசேகருக்கு பாதுகாப்பு தரச் சொல்லலாமா?"

துர்க்கா பதறி, "என்ன பேசறீங்க நீங்க? பொலிஸ்ல தகவல் சொன்னா, விபரம் கேப்பாங்க. அப்புறம் என் மேல நடவடிக்கை எடுப்பாங்க!" என்றாள்.

"எனக்கு என் சந்திரசேகரோட உயிர் தான் முக்கியம்!" என்ற மதுமிதா, அவளே உதவி கமிஷனருக்கு முயற்சி செய்தாள்.

"ஹலோ ராஜேஸ்வரன் ஹியர்"

"குட் ஈவினிங் சார் நான் ஆர்ட்டிஸ்ட் மதுமிதா பேசறேன்."

"ஹலோ! எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன் சார்"

"என்ன விஷயம் சொல்லுங்க?"

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"ஒரு சின்ன உதவி சார்! சந்திரசேகர், என் ஹஸ்பெண்ட் நேத்துத்தான் அவருக்கும் எனக்கும் கல்யாணம் ஆச்சி. இப்ப அவரைக் காணோம். அவரைக் கொலை செய்யறதுக்கு ஒரு கும்பல் திட்டம் போட்டிருக்கு சார். அவர் கார் நம்பர் சொல்றேன். குறிச்சுக்கோங்க... அவர் உயிருக்கு ஆபத்துன்னு, அவருக்குத் தெரியாது சார். இப்ப அவர் எங்கே போயிருக்காருன்னு தெரியலை. அவரோட காரை லொகேட் பண்ணி அவரை கண்டுபிடிச்சி, முதல் காரியமா அவருக்குப் பாதுகாப்பு கொடுக்கணும் சார். ப்ளீஸ் சார்..."

"இருங்க, பதறாதீங்க. மெக்ஸிமம் முயற்சி பண்றேன். முதல்ல கார் நம்பர் சொல்லுங்க?"

ராஜேஸ்வரன் நம்பர் குறித்துக்கொண்டு, உடனே செயற்படுவதாகச் சொல்லி வைத் தார்.

ஈஸ்வர், கேட்டார் "ஏன் மதுமிதா, சந்திரசேகர்கிட்ட செல்ஃபோன் இல்லையா?"

மதுமிதாவின் முகம் பிரகாசமாகியது.

"இருக்கு. பதற்றத்தில எனக்கு தோணவே இல்லை!"

மதுமிதா, உடனே சந்திரசேகர் செல்ஃபோன் எண்ணை அழுத்தினாள்.

★★★

தடியன், விரித்த கத்தியுடன், காரை ஓட்டிக்கொண்டிருந்த சந்திரசேகர் மேல் முழுக் கவனத்தையும் வைத்து அருகில் அமர்ந்திருந்தான்.

இப்போது காரில், டேஷ் போர்டு மேல் வைக்கப்பட்டிருந்த சந்திரசேகரின் செல்ஃபோன் சங்கீதமாக அழைத்தது.

அதை எடுக்கப்போன அவன் கையைத் தடுத்தான் தடியன்.

"ஏதாச்சும் முக்கியமான செய்தியா இருக்கலாம். நான் பேசிடறனே?"

"கூடாது! நீ சாமர்த்திய மான ஆளா இருக்கறே! உன் னோட நிலைமையை நீ ரகசியமா தெரிவிச்சிடுவே!"

"அதெல்லாம் எதுவும் பேசலை. என்னன்னு மட்டும் கேட்டுக்கறேன்."

"கொஞ்சம் இரு யாருன்னு நான் பேசிப் பார்த் திட்டு, அவசியம் இருந்தா, உன்னைப் பேச அனுமதிக் கிறேன்."

தடியன் செல்ஃபோனை எடுத்தான்.

"ஹலோ!" என்றான்.

"ஹலோ! சந்திரசேகரைப் பேசச் சொல்லுங்க"

"நீங்க யாரு பேசறது?"

"மதுமிதா! அவரோட மனைவி! நீங்க யாரு?"

"மனைவியா? நாளைக்குத்தானே கல்யாணம் பண்ணிக்கப்போறீங்க? அதுக்குள்ள மனைவின்னு சொல்றீங்களே..."

"ஹலோ! நீங்க யாரா இருந்தாலும் சரி... தயவு செஞ்சு ஃபோனை வெச்சிடாதீங்க. ப்ளீஸ்... எனக்கும் சந்திரசேகருக்கும், நேத்தே ரகசியமாக் கல்யாணம் நடந்திருச்சு... அவசரப்பட்டு அவரைத் தீர்க்கச் சொல்லி, எங்கம்மா சொல்லிட்டாங்க. நீங்க மைக்கேல் அல்ஃபோன்ஸாவா? தயவு செஞ்சி சொல்லுங்க? சந்திரசேகருக்கு ஆபத்து எதுவும் இல்லையே? அவரை எதுவும் செஞ்சிடாதீங்க? என் அம்மா துர்க்காகூட இதோ பக்கத்திலதான் இருக்காங்க. வேணும்னா அவங்களைப் பேசச் சொல்றேன். சந்திரசேகர் எங்கே? தயவு செஞ்சி அவரைப் பேசச் சொல்லுங்க."



> "எந்த நடிகையோட சேர்ந்தும் கூத்தடிக்கிறதுக்கு, நான் சினிமாவுக்கு வரலை. ஒரு டைரக்டரா, ஜெயிக்கிற லட்சியத்தோடதான் வந்தேன். நான் அவமானப்பட்டப்போ, நம்பிக்கை விதைச்சதே என் மனைவிதான். அவங்களுக்கு துரோகம் செய்யறதா எழுதறது அநியாயம்!"
>
> இயக்குநர் சேரன் ஒரு பேட்டியில்... குங்குமம்' 10.10.97 இதழில்...

பரபரவென்று கெஞ்சினாள் மதுமிதா.

தடியன் தன் நடு மண்டையில் சொறிந்து கொண்டான்.

"நான் அல்ஃபோன்ஸாவோட ஆளு. இந்த நிமிஷம் உன் சந்திரசேகருக்கு ஒண்ணும் இல்லை. பூஜை எல்லாம் இனிமேல்தான். நீ ஃபோனை வெச்சிடு."

தொடர்பை துண்டித்து வைத்தான்.

"உனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாணமாயிடுச்சா?"

"ஆமாம்" என்றான் சந்திரசேகர்.

"எப்போ?"

"நேத்து"

"பொய் சொல்றே"

"நிஜமாத்தான்."

இப்போது கார் அந்த இடிபாடுகளுடன் கூடிய கட்டடத்தின் வாசலில் நின்றது. சந்திரசேகர் இறக்கப்பட்டான்.

அங்கே காத்திருந்த மைக்கேல் அல்ஃபோன்ஸா அருகில் வந்தான்.

"ஏண்டா லேட்டு?"

"வழில கார் டயர் பர்ஸ்ட் ஆயிடுச்சு... ஸ்டெப்னி மாத்திக்கிட்டு வர்றோம் தலைவா. இவர் என்னைத் தாக்கிட்டு, ஹீரோ வேலை செய்யப் பார்த்தாரு. மடக்கிட்டேன். பெண்டு நிமித்திருப்பேன். உங்க வார்த்தைக்கு கட்டுப் பட்டு பத்திரமா கூட்டிட்டு வந்துட்டேன்."

அல்ஃபோன்ஸா சந்திரசேகரை முறைத் தான்.

"உனக்கு நடிகை கேக்குதா? விடிஞ்சா கல்யாணமா?"

"கல்யாணம் நேத்தே முடிஞ்சிருச்சி" என்றான் அமைதியாக சந்திரசேகர்.

"உனக்கு என்ன நடக்கப்போகுதுன்னு புரிஞ்சுக்கிட்டே! தப்பிக்கிறதுக்காக இப்படி ஒரு பொய் சொல்லிப் பார்க்கிறியா?"

இப்போது மீண்டும் செல்ஃபோன் ஒலித்தது.

"அந்த ஃபோன்ல என் மனைவி மது மிதாதான் பேசறா.. வேணும்னா நீயே கேட்டுப்பாரு."

புருவங்களைச் சுருக்கிப் பார்த்தான் அல்ஃபோன்ஸா.

"அந்த ஃபோனை எடுத்துட்டு வாடா"

கொண்டுவரப்பட்ட ஃபோனில் "ஹலோ" என்றான்.

"தயவு செஞ்சி ஃபோனை மறுபடி கட் பண்ணிடாதீங்க. நான் மதுமிதா பேசறேன். ஃபோனை மைக்கேல் அல்ஃபோன்ஸாகிட்டே கொடுங்க."

"நான் அல்ஃபோன்ஸாதான் பேசறேன்."

"மை காட்! இத பாருங்க, உங்களுக்கு கொலை செய்யச் சொல்லி வேலை கொடுத்த எங்கம்மா துர்க்கா பக்கத்தில இருக்காங்க. அவங்ககிட்ட பேசுங்க. சந்திரசேகருக்கும் எனக்கும் கல்யாணம் நடந்துருச்சி. அவரை எதுவும் செஞ்சிடாதீங்க. அம்மாகிட்ட பேசுங்க."

அல்ஃபோன்ஸா எரிச்சலுடன் சிகரெட் பற்ற வைத்தான்.

"அல்ஃபோன்ஸா, நான் துர்க்கா பேசறேன்."

"என்னம்மா?"

"சந்திரசேகரை ஒண்ணும் செய்ய வேணாம்"

எதிரே நிற்கும் சந்திரசேகரைப் பார்த்த அல்ஃபோன்ஸா, "இதோ பாருங்க, என்னை என்ன உங்க வீட்டு வேலைக்காரன்னு நினைக்கிறீங்களா? எடுத்துக்கிட்ட காரியத்தை பாதியில நிறுத்தற பழக்கம் எனக்குக் கிடையாது, மறுபடி ஃபோன் செய்யாதீங்க!" என்று வைத்தான்.

இடுப்பிலிருந்து பெல்ட்டை உருவினான் அல்ஃபோன்ஸா.

(தொடரும்)

---

> இந்தவாரம் முதல் கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை

# கவியரசுவின் சுயசரிதை

## திடீர் தொடர் 01

அவன் கையில் சுமார் ஆயிரம் ரூபாய்கள் இருந்தன.

ஆயிரம் ரூபாய்; போவதோ சென்னைக்கு.

ரயிலிலெல்லாம் அவன் தூங்கவே இல்லை! சென்னையில் இறங்கியதும் ராயப்பேட்டையில் இருந்த ஓர் உணவு விடுதிக்குச் சென்றான்.

ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான்.

குளித்துவிட்டு, மயிலாப்பூரில் இருந்த தன் நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி நடக்கும் போது அவனது காலணியில் தோல் அறுந்துவிட்டது.

அதைத் தைப்பதற்காக நடைபாதையில் இருந்த ஒரு தொழிலாளியிடம் கொடுத்துவிட்டு நின்று கொண்டிருந்தான்.

அங்கேதான் அவன் வாழ்க்கையில் மறக்க முடியாத விபத்து நேரிட்டது.

அவன் சேலத்திலும் கோவையிலும் சந்தித்த அந்தப் பெண் அங்கே வந்து கொண்டிருந்தாள்.

அவளது தாயும் கூட வந்தாள்.

அவனைக் கண்டதும் நின்று பேசினார்கள். தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தார்கள்.

அப்பொழுதே புறப்பட்டான். நண்பரை மறந்துவிட்டான்.

மயிலாப்பூர் சித்திரச் குளத்தின் வடகரையில் வீடு.

அதிலே ஒட்டுக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

உள்ளே போய் அமர்ந்தான். அவர்கள் தங்கள் வறுமை நிலையைச் சொன்னார்கள்.

வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

குறிப்பறிந்து தாய் அகன்றாள்.

அந்தக் கதை அன்றோடு முடியவில்லை!

ஆறு மாத காலம் அவனது வாழ்க்கையைத் துயரம் கவ்விக்கொண்டது.

பத்தே நாளில் ஆயிரம் ரூபாயும் செலவழிந்து, கடன் வாங்கத் தொடங்கினான்.

அவள் பெரிய சாகஸக்காரி.

அவளுக்குப் பின்னால் ஒரு சரித்திரமே இருந்திருக்கிறது. அவளால் பொருளிழந்தோர் பலர்.

தொழில் கெட்டு அலைந்தவர்கள் பலர்.

அவர்கள் எல்லோருமே பெரும்பாலும் சினிமாத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள்.

ஓர் ஒலிப்பதிவாளர், படங்களை வெட்டி ஒட்டும் ஓர் எடிட்டர்.

இப்படிப் பலபேர்!

இதில் எதுவும் அவனுக்கு அப்போது தெரியாது.

புதுமயக்கம் மது மயக்கம்போல் ஒட்டிக் கொண்டது!

மயிலாப்பூர் வீட்டைக் காலி செய்ய வேண்டிய அவசியம் வந்துவிட்டது; வாடகை கொடுக்காததால்.

குடியிருப்பு மாற்றப்பட்டது.

வெள்ளாள தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு எதிரே ஒரு வீடு.

செங்கல் மட்டுமே அடுக்கப்பட்டிருந்தது; சிமெண்ட் கூடப் பூசப்படவில்லை.

உள்ளே ஒரு கூரைக் கொட்டகை: அதற்கு மாதம் பத்து ரூபாய் வாடகை.

அதற்குள்ளே மேலும் இரண்டு குடித்தனக்காரர்களும் இருந்தார்கள்.

ஒரு பக்கமும் அடைப்புக் கிடையாது. பழைய சேலைகளையே திரையாகக் கட்டி விட்டுத்தான் துயில் கொள்ள வேண்டும்.

அதில் இரண்டு மாதம் அவனும் அவளும் வாழ்ந்தார்கள்.

இந்தப் போக்கு, பெரும்பாலும் அவனது உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரியத் தொடங்கிற்று.



பலரும் அவனை வெறுக்கத் தொடங்கினார்கள்.

தான் மிகவும் கீழ்த்தரமாகவும் மரியாதையற்றவனாகவும் ஆகிவிட்டதாக அவனே நினைக்கத் தொடங்கினான்.

ஆனாலும் உடலுணர்ச்சி மேலோங்கிய நிலையில், அவளுடனேயே தங்கினான்.

இனந்தெரியாமல், குணந்தெரியாமல் எல்லோரிடமும் கடன் கேட்கத் தொடங்கினான்.

வழியில் நண்பர்களைச் சந்தித்துவிட்டால், அவர்களைப் பார்க்கவே வெட்கப்பட்டு பாதை மாறி நடக்கத் தொடங்கினான்.

உடல் இளைத்து, கண்கள் குழி விழுந்து, பார்ப்பதற்கே அருவருப்பான தோற்றத்தையும் பெற்றான்.

வாழவும் முடியாமல், மீளவும் முடியாமல் சென்னைத் தெருக்களிலே அலைவதும், வெறியில் உழல்வதுமாக வாழ்ந்தான்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பாதை மாறும் பயணங்கள்

"இந்த முகாமுக்கு வந்து அஞ்சு மாதமாப் போச்சு. எங்களை வெளியில விடுறதுக்கான எந்த அறிகுறியையும் காணயில்ல!" அன்னம்மா தனக்குள்ளாகவே பிதற்றிக் கொண்டாள்.

அவளுக்கு வயது வந்த மூன்று பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திலிருந்து அல்லலுற்று, அலைக்கழிந்து, வன்னிக் காட்டுக்குள் காய்ந்து, அங்கு இடம்பெற்ற போராட்ட சூழலுக்குள் சிக்குண்டு, அதிலிருந்து விடுபட்டு முட்டை முடிச்சுக்களுடன் நடந்தே இந்த முகாமுக்கு வந்து ஐந்து மாதங்களாகி விட்டன.

இங்கிருந்து தனது கணவர் வேலை பார்க்கும் கண்டி மாநகருக்குப் போய் விடலாம் என்ற கனவுகளுடன் காலங்களும் பறந்து போய்க் கொண்டிருந்தன. எதிர்பார்த்தவை யாவுமே ஏமாற்றங்களாக, உடலும் உள்ளமும் சோர்ந்து, உயிர் வாழ்வதன் அர்த்தங்கள் குழம்ப, ஏக்கப் பெருமூச்சே அவர்களிடம் எஞ்சி இருந்தது.

வன்னிப் பிரதேசப் போர்ச் சூழலிலும் எந்தவிதத் தடையும் இல்லாமல், பள்ளிக்கூடம் போய்ப் படித்து வந்த அந்த மூன்று பிள்ளைகளும், இன்று அந்த முகாமின் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தனர். குளிப்பு, முழுக்கு, உறக்கம், ஓய்வு அனைத்தையும் ஒழுங்கற்ற ஒழுங்கில் அனுபவித்தபடி சூழலோடு ஒன்றிக் குறுகிக் குமுறினர்.

குடும்பத் தலைவன் தொழில் புரியும் இடத்திற்கு குடும்பத்தவர்களை அனுப்பலாம் என்பது வழக்கத்திலிருந்து வருகின்ற முகாம் நடைமுறைகளுள் ஒன்று. இதனைப் பத்திரிகைகளும், அரசாங்க அறிக்கைகளும், விளம்பரங்களும் விளக்கிச் செய்திகளாக வெளியிட்டாலும் விரைவிலே போக முடியவில்லையே என்ற அங்கலாய்ப்புடன் அன்னம்மாவின் குடும்பம் தவமிருந்தது.

'விசாரிக்கப்பட்டு ஓரிரு நாட்களில் நாங்கள் விரும்பிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்து விடலாம்!' என்று நம்பி வந்தவர்களுக்கு, எல்லாமே பொய்யாய்ப் போனது கண்டு மனம் புளுங்கினர்.

கொழும்புக்கும், மட்டக்களப்பிற்கும், காலிக்கும் போய்ச்சேர அன்னம்மா குடும்பம் போல் ஆவலுடன் எண்ணிக் காத்திருப்போர் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்தது. யாழ்ப்பாணம் போக விரும்பும் எல்லோரையும் உடனுக்குடன் அனுப்பிவைக்க, ஆரம்பத்தில் இருந்த ஒழுங்குகள் இன்றில்லை. யாழ்ப்பாணப் பாதையோ,தரையும், கடலும் தடைப்பட்ட நிலையில் ஆகாயத்தைப் பார்த்தபடி, காலத்தைப் போக்கியது.

'போரின் துயரங்களில் இருந்து விடுபட்டு, வெளிநாட்டுக்கு ஓடித் தப்பிவிடலாம்,' என்ற விருப்போடு காத்திருந்த தங்கராசாவும், பெண்சாதி பிள்ளைகளும் இன்னமும் முகாமில்தான் இருக்கிறார்கள்.

'கொழும்புக்குப் போய் அண்ணர் வீட்டில் தங்கியிருக்கலாம்!' எனக் கனவு கண்ட ஆனந்தியும், தம்பியும் இன்னமும் இங்கேதான் இருக்கிறார்கள்.

ஆனால், யார் யாரோ இடைக்கிடை, எந்தவித-சலனமுமின்றி-எப்படியோ தாம் விரும்பிய இடத்திற்குத் திடீர் திடீரெனப் போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள்.

கேட்கும் ஆவணங்கள் எல்லாவற்றையும் கொடுத்தாலும், மேலும் மேலும் ஆதாரங்களும், ஆவணங்களும் தேவையெனக் கேட்டுத் தொல்லை கொடுக்கும் முகாம் பொறுப்பாளரின் செய்கை, மகனை இழந்த தாய்க்குப் புத்த பெருமான், "ஒருவருமே சாகாத வீட்டில் ஒரு கடுகு வாங்கி வா!" எனக் கூறிய கதையையே நினைவுபடுத்தியது. எங்கு தேடியும் எடுக்க முடியாத ஆதாரங்களுக்காகக் கவலையுடன் சோர்ந்திருக்கும் இந்த இடம்பெயர்ந்தோர் துயரங்கள் தொடர்ந்தன.

அன்னம்மாவும் அந்த மூன்று பிள்ளைகளும், முகாம் கொட்டகைக்குள்ளே தங்கள் முட்டை முடிச்சுக்களால் எல்லையிட்டு ஒரு மூலையில் ஒதுங்கியிருந்தனர். அவர்களது படுக்கையும், இருக்கையும் சிறிய சதுரமீட்டர் எல்லைக்குள் அடங்கிக் கிடந்தன.

பகலிலே ஈக்களின் தொல்லையும், இரவிலே நுளம்புக் கடியின் வேதனையும் வியாதிகளின் பெருக்கெடுப்புக்கு வித்தாய் அமைந்திருக்க, அவற்றிலிருந்து விடுபடும் வழி தெரியாது மௌன ஓலமிடும் மனங்கள்.

வந்தநாள் தொட்டு இன்றுவரை அந்த முகாம் கொட்டில் மண்டபத்தினுள் நடந்தேறிய மரணச்சடங்குகள், குழந்தைப்பேறுகள் யாவுமே எந்தச் சமய சடங்குகளும் இன்றி சமத்துவமாய் ஈடேறின.

'எப்போது நாங்கள் எண்ணியபடி-சுதந்திரமாக, விரும்பிய இடத்திற்குப் போய்ச் சேரலாம், என்று தீர்மானிக்க முடியாத, சுதந்திர பூமியின் பிரஜைகள் ஏக்கமும் பெருமூச்சும் இயலாமையும் பெருக,முகாம் என்ற திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் குறுகி-இழப்பதற்கு எதுவுமின்றி உலர்ந்து கிடந்தனர்.

அன்னம்மாவின் கணவர் ஆறுமுகமும் மாதத்திற்குக் குறைந்தது மூன்று முறையாவது மனைவியையும், பிள்ளைகளையும் கண்டிக்குக் கூட்டிப்போகும் ஆவலோடு, வீதிச் சோதனைகளுக்கு முகம் கொடுத்து, அங்கு வந்து வந்து அலைந்து கொண்டிருந்தார்.

அந்த நகரில் ஏழு நாட்களுக்கு மேல் தங்க முடியாது.


'பாஸ்' வழங்கும் ஒழுங்கிலே ஓர் இறுக்கம்.

'இந்த முறை எப்படியாவது மனைவி பிள்ளைகளைக் கூட்டிப் போக வேணும்!' என்ற எண்ணம் மேலும் உறுதியாக, அங்குமிங்கும் தனது ஆதாரங்களைக் காட்டி அலைந்தவருக்கு, "காசு கொடுத்தாத்தான் காரியத்தை முடிக்கலாம்" என்று காதோடு காதாக வந்த கதை அவரைப் பயமுறுத்தியது.

மாதச் சம்பளத்தில் வாடகை வீட்டில், கடைச் சாப்பாட்டோடு காலத்தையும், காசையும் இழந்து கொண்டிருக்கும் அவரோ, "மனைவி பிள்ளைகளை முகாமை விட்டு வெளிக் கொணரக் காசு கொடு" என்றால் எங்கே போவார்?

பத்தாயிரம் கொடுத்துத்தான், கனடாவுக்குப் போன தியாகு பெண்சாதி கொழும்புக்குப் போனாள்.

ஆறாயிரம் கொடுத்துத்தான் ஆனைக்கோட்டை ஐயம்பிள்ளை மகள் முகாமை விட்டு வெளியில்போனாள்.



நெடுந்தீவு மகேஷ்

'காசில்லாவிட்டால் முகாமிலிருந்து வெளியே வர முடியாதா?' எண்ணினார்-ஏங்கினார்.

பணமுள்ள வெளிநாட்டு உறவுக்காரரெல்லாம் எப்படியோ முகாமை விட்டுப் பறந்து போய்விடுகிறார்கள். அவர்களால் பழக்கப்பட்ட இந்த இலஞ்சக் கொடுமைக்குள், பணமில்லாதவர்களும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தனர்.

எண்ணிப் பார்த்த ஆறுமுகத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இந்த கொடிய இலஞ்சத்தையும், பஞ்சத்தையும் பெருக்கக் காரணமானவர்கள் யார்? உள்ளம் குமுறியது. யார் மீது ஆத்திரப்படுவதென்றே அவருக்குத் தெரியவில்லை.

துன்பங்கள் தொல்லைகள் எங்கே தொடர்ந்தாலும் அவற்றை வென்றுயர அவற்றிலிருந்து விடுபட ஊர் எல்லாம் ஓடி ஓடி அலைவதில் அர்த்தமில்லை.

'எனது மண்ணில், எனது வாழ்வுக்காக இந்தப் பஞ்சத்திற்கெதிராகவும்,கொடிய இலஞ்சத்திற்கெதிராகவும் போராட வேண்டும்!'

"என்னப்பா எங்களை வெளியில எடுக்க நீங்க ஒண்ணும் செய்யல்லையே?" அன்னம்மா அழாக்குறையாக முனகினாள். பிள்ளைகளின் கண்கள் கலங்கின.

ஆறுமுகம் தனக்குத் தெரிந்த யாரிடமாவது, 'ஓர் ஐயாயிரம் ரூபா கடன் வாங்கலாமா?' என்று எண்ணியபடி அந்த முகாமை விட்டு வெளியில் வந்தார்.

ஆறுமுகத்திற்கோ பாதைகள் மாறிச் செல்வதாகவே தோன்றியது. ◎

# விதி வலியது

பாடசாலையில் எந்தப் போட்டி நடந்தாலும் முதல் மூன்று இடங்களில் ஏதாவது ஓர் இடம் பத்மனுக்குக் கிடைத்துவிடும். விளையாட்டு முதல் கற்றல் தொடர்பான மனனப்போட்டிகள்வரை எதிலும் பத்மன் விட்டுக் கொடுக்க மாட்டான்.

பரீட்சைக்குரிய காலம் நெருங்கி விட்டால், பத்மனிடம் நோட்ஸ் வாங்கிப் படிக்க பல நண்பர்கள் விரும்புவார்கள். இத்தனைக்கும் பத்மன் இவர்களுடன்தான் ஒரே பாடசாலையில் படித்து வருகின்றான். ஆனால் பத்மனின் பதிவேடுகள் அனைத்தும் துல்லியமாக இருக்கும். பிழைதிருத்தம் செய்யப்பட்ட அடையாளமே இருக்காது, ஆசிரியர்கள் கையொப்பமிடும்போது அக் கொப்பியின் முழுப் பக்கங்களையும் ஒரு முறை புரட்டிப் பார்க்கத் தவறுவதில்லை.

உயர்தரப் பரீட்சை இன்று காலையில் ஆரம்பமாகின்றது. காலையில் கடவுளை வணங்கி, அம்மா அப்பாவின் ஆசியுடன், அவனது வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் பரீட்சை நிலையத்துக்கு அப்பாவின் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் பத்மன்.

அரைவாசி தூரம் சென்ற பின்னர் துப்பாக்கி வேட்டுச் சத்தம் தூரத்தில் முழங்கிக் கொண்டிருந்தது. இச்சத்தம் இவ்வூர் மக்களுக்கு பழக்கப்பட்டதென்பதால் என்னவென்று விசாரித்துப் பார்ப்பதே கிடையாது. காரணம் யுத்தபூமியாக இந்த நிலம் இருப்பதுவே!

சற்றுத்தூரம் சென்றிருப்பான் பத்மன். திடீரென அவனுக்கு முன்னால் சில யார் தூரத்தில் எறிகணையொன்று வீழ்ந்து வெடித்தது. "அம்மா....!" வெனக் கத்தியவாறு சைக்கிளுடன் கீழே விழுந்தான் பத்மன். எறிகணைகள் அப்பகுதிகளை அதிரவைத்துக் கொண்டிருந்தன. அவனுக்கு அருகிலே தான் அனைத்தும் விழுவதாக உணர்ந்த பத்மன் ஆடாமல் அசையாமல் தெருவிலே படுத்துக் கிடந்தான்.

தூரத்தே அழுகைக் குரல்கள் கேட்கின்றன. பார்வையை சற்றுத் திருப்பினான் பத்மன். வேலியோரத்தில் நின்றிருந்த நாய் ஊளைவிட்டுக் கொண்டிருந்தது. தாய்க்கருகே எறிகணைக்கு இலக்காகி அங்கங்கள்



வீரமுனை வானவர்கோன்

சிதைந்து இரத்தம் பரவ சதைப்பிண்டமாக மனிதவுடல் கிடக்கின்றது. அருகில் கைக்குழந்தையொன்று குருதி தோய்ந்த நிலையில் அலறும் சத்தம் பத்மனின் மனதைக் குத்திக் கிழித்துக் கொண்டிருந்தது.

உடனடியாக ஓடிச் சென்று அக்குழந்தையைத் தூக்கி காப்பாற்ற வேண்டும் போல பத்மனுக்கு இருந்தது. நகரவே முடியவில்லை. உடலை உரசிக்கொண்டு துப்பாக்கி வேட்டுக்கள் செல்கின்றனவே.

எறிகணை, துப்பாக்கி வேட்டோசைகள் அடங்கிய பின்பு பத்மனின் முதுகில் ஏதோ பொருளொன்று விழுந்த மாதிரி உணர்ந்தான். பயத்தில் இருந்ததால் மறு கணமே மயக்கமானான் பத்மன். இராணுவவீரனின் சப்பாத்துக் காலே பத்மனின் முதுகில் குத்திக் கொண்டிருந்தது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும், "அடோய்....அடோய்....!" எனும் சத்தம் திடுக்கிட வைத்தது. சப்பாத்துச் சத்தம் கேட்கின்றது. முதுகில் இருந்த சுமை அகன்று விட்டது. நிமிர்ந்து பார்த்தான் பத்மன். அருகே இராணுவ அதிகாரி ஒருவர். "சேர் நான் ரெஸ்றறுக்குப் போக வேணும்...." பயத்துடன் கேட்டான் பத்மன். அவன் கேட்டதை அவ்வதிகாரி காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. இன்னுமொருவன் அருகில் வந்தான். அதிகாரிபோல தெரியவில்லை. "மாத்தையா! பிளீஸ் நான் ரெஸ்ற்றுக்குப் போக வந்தனான்...." என்றதும், குனிந்து சேட் கொலரைப் பிடித்துத் தூக்கினான். தூக்கும்போதே மரணம் நெருங்கி விட்டதாக உணர்ந்தான் பத்மன். "என்னா...?" எனக் கேட்டு அருகில் நிற்கும் மற்றைய அதிகாரியிடம் கொண்டுபோய் ஏதோ சொன்னான்.

அடையாள அட்டையையும், அட்மிசனையும் பார்த்துவிட்டுச், "சரி போ....!" என கூறினார். ஓடிச் சென்று திறந்து கிடந்த கொம்பாஸ் பெட்டியையும், சிதறிக் கிடந்த பேனாக்களையும், சைக்கிளையும் எடுத்து உருட்டிச் சென்றான் பத்மன். தெருவோரத்தில் பலர் வரிசையாக இருத்தி வைக்கப் பட்டிருந்தனர். கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான், பதினொன்று நாற்பத்தி ஐந்து. பத்மனின் சைக்கிள் பாடசாலை நோக்கி நகராமல் வீட்டுக்குச் செல்லும் பாதைவழியே சென்று கொண்டிருந்தது. 'உயிர் தப்பியதே தம்பிரான் புண்ணியம். அடுத்த வருசம் உயிர் இருந்தால் சோதனை எழுதுவம்.'

# கானல் நீர் பேத்தைகள்

"அம்மா!" என்ற அழுகுரல் கேட்டு பாடசாலை கட்டட மூலையில் ஒதுங்கிக் கிடந்த கனகம் விழித்துக் கொண்டாள். அவளது கடைக்குட்டிதான் 'பாமா'. "அட இப்பவே முழிச்சிட்டியா-ஆண்டவா?" என ஏனோ கனகம் இதற்காக ஆண்டவனைக் கூப்பிட்டுக் கொண்டாள்.

"சீ இந்த ஊத்த உடுப்பு வேற ஒரு பக்கம் மணக்குது. மாத்திக் கட்ட வேணும்," என முணுமுணுத்துக் கொண்டவள், அருகில் படுத்திருந்த எழுபது வயதுத் தாயை எழுப்பினாள். "அம்மா இந்தாபாருங்கோ நேரம் ஆச்சு; நாளை எப்படிக் கடத்தப் போறோமோ? இன்னைக்காவது பிள்ளைகளுக்கு வயிறு நிரம்பச் சாப்பாடு கிடைக்கோணுமே! என்னம்மா? எழும்புங்கோ?" எனத் தன் மனச்சுமையைத் தாயின் நினைவுக்கு கொண்டுவந்தாள்.

"அம்மா.... புள்ள.... இந்தா... ஆ.. எழும்பறன்!" எனத் தடுமாறிக் கொண்டு கிழவி எழும்பினாள்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தபோது அவர்களுக்குத் தஞ்சம் அளித்தது இந்தத் தோட்டப் பள்ளிக்கூடமே. "என்னடி புள்ள.... இப்படிக் குளிருது என்னால் தாங்க முடியல்லயே!" என்று கூறிக்கொண்ட கிழவி தன் கிழிந்த நூல் ஆடையை இழுத்துப் போர்த்திக் கொண்டு இன்னுமொரு பழைய சேலையை பையில் இருந்து எடுத்தாள். "பாவம் பத்தும் அறியாத பிஞ்சுகள் இப்படி குளிரில் கிடந்து நடுங்குதே!" என்று தன் பேரக் குழந்தைகளைப் போர்த்தித் தூங்க வைத்தாள்.

"அம்மா!" என்று அழைத்த பாமா மட்டும், "பாட்டி அப்பாவேணும்! என்னத் தூக்கு... நான் கிணத்துக்கட்டுல உட்காந்து முகம் கழுவணும்" என கூறியதைக் கேட்டதும் கிழவியின் கண்கள் கலங்கின.

காதுகளில் மீண்டும் மீண்டும் அந்த வெடிச் சத்தங்கள் கேட்டன. மனித ஓலங்களும் மயான அமைதியும் துன்பத்தை துளைவிடச் செய்தன.

கவலை காரமாக மாறியது. "ஏன்? கழுதை பேசாமத்தூங்க மாட்டியா? இன்னும் விடியவில்லை," எனக்கூற அடிபட்ட மான் போல கவலையோடு தனது கிழிந்த புடவையையும் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தாள் பாமா.

"இம்...ச்....இம்" எனும் ஒலி கேட்கவே திரும்பிப் பார்த்த கிழவி என்ன செய்வதெனத் தெரியாது அடங்கினாள். அங்கே உடைந்த பழையதொரு சுண்ணாம்பு பூசப்படாத கட்டின் மேல் அமர்ந்திருந்த மகள் கனகம் விசும்பி விசும்பி அழுதாள்.

"அம்மா, ஆண்டவன் என்னை எப்படிச் சோதிக்கிறார் பார்...." என தேமித் தேமி அழுதாள். கிழவி மௌனமாகவே இருந்தாள். இவர்கள் மட்டுமல்லாது அந்தப் பாடசாலையில் இன்னும் நாலைந்து குடும்பங்களும் சோகமே மயமாக அமர்ந்திருந்தன. "ஆய் போவன்" என அங்கே காவலனாக வந்த ஒரு பொலிஸ்காரர் அவர்கள் இன்றே அந்த பாடசாலையை விட்டு வெளியேற வேண்டும் எனவும், இது மேலிடத்து ஆணையெனவும் கூறிச்சென்றான். அவனது சொற்கள் அங்கே நின்ற அனைவருக்கும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல இருந்தது.

வட்டவளையில் அவர்கள் அந்தப் பணக்காரரான சொந்தக்காரர் வீட்டுக்கு சென்றபோது, கனகத்தின் சித்தியான பணக்காரனின் மனைவி மட்டுமே இருந்தாள். முன்பு ஒரு தடவையும் அவள் அங்கே தன் கணவனுடன் சென்றிருக்கின்றாள். இப்போது நான்கு பிள்ளைகளுடனும், சாக நாள் எண்ணிக் கொண்டிருக்கும் கிழவியோடும் சென்றபொழுது, கதவை திறந்ததுமே சித்தியின் முகம் சுருங்கியது. "அட என்ன புள்ள நாங்க எல்லோரும் கொழும்புக்குப் போகக் கிளம்புற நேரம் வந்து நிற்கிறியே! சரி வா... வா..." எனத் தான் மனப்பாடம் செய்து வைத்ததை அப்படியே ஒப்புவித்தாள்.

செய்ய வழியின்றி கனகமும் குடும்பமும் படியேறி வீட்டினுள் சென்றதும் மூச்சு இறைக்க நூறு ரூபா நோட்டுடன் திரும்பி வந்த சித்தி! "என்னம்மா நான் பண்ண? நீ வேற நேரம் கெட்ட நேரத்துல- நேத்தே வரக்கூடாதா? நான் எல்லாம் கேள்விப்பட்ட நான்," எனக்கூறியபடியே கனகத்தின் கையில் காசை வைத்தாள். அங்கே வந்த சிறுவனை கண்டதும், "லோகநாதா கதவுகளை எல்லாம் மூடு!" எனக் கூறுவதைக் கேட்டதும், கனகம் தன்னை போகாமல் போகச் சொல்வதை அறிந்து உடனே எழுந்து வெளியேறினாள்.

ஆனால் ஏனோ அந்த நூறு ரூபாயை மட்டும் திருப்பிக் கொடுக்கவில்லை எனக் கூறுவதை விட-திருப்பிக் கொடுக்க முடியவில்லை எனக் கூறலாம். அடுத்த வேளை பகல் சாப்பாட்டுக்கு அவளிடமிருந்தது பத்தே ரூபா பணமும், வீட்டிலிருந்து கொண்டு வந்த ஒரு சுண்டு அரிசியும் கொஞ்சம் பருப்பும் மட்டுமே.

அவர்களுக்கு அடுத்தவேளைக்கு அமரக் கூட இடமில்லை. இரண்டு பெண்களையும் கையில் பிடித்துக்கொண்டாள் பாட்டி. கடைக்குட்டியை சிரமத்துடன் தூக்கிக்கொண்டு மூச்சிரைக்க நடந்தாள் கனகம். தோளில் ஆடைகளும் கோப்பைகளும் அடங்கிய பை கனத்தது. பழக்கமே இல்லாத தேயிலைச் செடியை வெறித்துப் பார்த்துக் கொண்டே நடந்தான் கோபால். அவனது சிறிய கண்கள் பலவித ஏக்கக் கதைகளைக் கூறின. அந்தப் பட்டப்பகல் வேளையிலே மணலிலே நடந்து பழக்கப்பட்ட அவர்களது கால்கள் மேடும் பள்ளமும் கொண்ட மலைகளில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தன. அங்கே 'மேட்டுப்பாலை லயம்' கண்ணுக்குத் தெரிந்தது.

"ஆ.... யாருங்க ஐயா? அது யாழ்ப்பாணத்திலே இருந்து வந்தவங்களோ? அட பாவமே இவங்களுக்கு தொர தங்க ஒழுங்கு பண்ணின கோயில் மண்டபம் பற்றித் தெரியாதோ?" என முணுமுணுத்தான் அந்த தோட்டத் தலைவன் பெரியய்யா.

"தம்பி அய்யாதொர இந்த அம்மாவையும் அக்காவையும் கொண்டுபோய் விடுடா!" என ஆணையிட, "சரிப்பா" என அவரது பதினாறு வயது நிரம்பிய அய்யாதுரை அவர்களைக் கொண்டுபோய் விட விரைவாக ஆயத்தமானான்.

பார்வையால் அவர்களுக்கு நன்றி செலுத்தி கனகமும் அவர்களது குடும்பத்தாரும் அய்யாதொரையைப் பின் தொடர்ந்தனர்.கோயில் மண்டபத்தை அவர்கள் அடைந்தபோது, அங்கே பத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இருந்தன. அதில் அநேகர் சங்கானையான கனகத்தின் ஊர் உறவினர்கள்.

"ஐயோ அம்மா!" என அந்த மண்டபமே அதிர அழுதுவிட்டு முறிந்த மரமாக தன் தாயின் மேல் சாய்ந்தாள்.

அந்த மண்டபம் ஓரளவு வசதியுடையதாக இருந்தது. அங்கு கிடந்த ஒரு சாக்குக் கட்டிலில் அவளை கிடத்தி அவளது மயக்கம் தெளிய பலரும் அவளுக்கு கைவைத்தியம் செய்தனர்.

அவளது மயக்கம் தெளியாத மயக்கம் என்பதை அறிந்துகொண்ட தாய் மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். அதற்கு மேல் ஒன்றும் செய்யவிடாது அவளது முதுமை தடுத்தது.

தந்தை இறந்ததை அறிந்த 14 வயது கோபால் தனது தங்கைகள் இரண்டு பேரையும் அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டான். அரைகுறையாக அது அவர்களுக்குப் புரிய அவர்களும் அழுதனர். கடைக்குட்டி மட்டும் தன் வயதை ஒத்த இன்னொரு சிறுமியுடன் விளையாடிக்கொண்டிருந்தாள்.

கோபாலும் தன் தங்கைகளுடன் தாயை சூழ்ந்துக் கொண்டு அவர்களது கையால் தாயின் காலைத் தடவித் தடவி அழுதான். அந்த நரம்புகள் தாயின் காதினுள், "அம்மா பசி!" எனக்கூற கனகம் திடுக்கிட்டு எழுந்தாள். "அம்மா... அம்மா" என்று அழைக்க அருகிலிருந்த கிழவி எழுந்து சென்று "என்ன கனகம்" என்று கேட்டாள்.



கிருஸாந்தினி கனகரட்னம்

அவர்களைக் கண்டதும் கனகத்திற்கு கண்ணீர் பொலபொலவென வடிந்தது. "மாயா அக்கா,எப்படி அக்கா வந்து சேர்ந்தியள். எங்கடை அவர் எதுவும் காணவில்லையோ?" என தனக்கு மிகப் பழக்கமான மாயா அக்காவைக் கட்டிப்பிடித்து அழுதாள். பதிலுக்கு அவளும் தான்பட்ட அவஸ்தைகளைக் கூறி கண்ணீர் வடித்தாள். ஆனால் கனகத்துக்கு இன்னொரு அதிர்ச்சியும் அங்கே காத்திருந்தது. அவர்களைக் கண்ட சின்னப்பு அங்கே விரைந்து வந்தார். அவர் கனகத்திற்கு சித்தப்பா முறை.

அவரைக் கண்டதும், "சித்தப்பா" என வியந்து நின்றாள். ஆனால் அவரோ கல்லில் செதுக்கிய பதுமையாக நின்று கொண்டிருந்தார். அவரது கண்கள் பனித்தன. "அம்மா கனகம்" என அவர் அழைக்க அவர் கூறப் போவதை அறிந்த மாயா அங்கே இருந்து வெளியேறிச் சென்றாள்.

"கனகம் உன்ரை.... கணவர்... எங்.... களோட தான் கடையை மூடிட்டுவர இருந்தவர் ஆனா... நேற்றுக் காலையில...செ....செல் பட்டு அங்கேயே...." என அவர் சொல்லி விட்டுவிக்க...

கனகத்திற்கு உலகமே சுற்றி, உடைந்து தன் தலையில் விழுவது போல இருந்தது.

கையில் இருந்த பணத்தைத் தாயிடம் நீட்டி "அம்மா, பிள்ளைகளுக்கு சாப்பாடு" எனக் கூற அதைப் புரிந்து கொண்ட கனகத்தின் தாய் உடனே பணத்துடன் விரைந்து சென்று ஒரு பையனிடம், "தம்பி இந்தாப்பா...பணம்! பிள்ளைகளுக்குக் கடையில போய் சாப்பாடு வாங்கிட்டு வாப்பா...." எனக் கூறி பணத்துடன் அனுப்பினாள்.

கனகம் முணுமுணுப்பது நின்றபாடில்லை. "கோ...பால்..பாமா... நி...ம...லா... கமலா.." என தன் பிள்ளைகளின் பெயர்களையே கூறிக் கூறி முடிக்க, அவளது கண்கள் ஒருகணம் மலர்ந்தன. தன்பழைய வாழ்வைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தாள். கனகம் வாய்விட்டு ஒருமுறை சிரித்துக் கொண்டாள்.

பிள்ளைகள் நிலை கண்டு பொறுக்காத பாட்டி, "என்ன புள்ள இந்த பொடியனைக் காணோம், நான் ஒருக்கா பார்த்துட்டு வாறன்....." என புறப்பட்டுப் போனாள்.

அந்த இரண்டு மணி வெயில் கிழவியின் கண்களைச் சுட்டன. டவுன் ரோட்டில் தூரத்தே கானல் நீர் தெரிந்தது. கிழவி "என்ன வெயில்" என வெறுத்துக் கொண்டாள்.

அப்போது வானில் காற்றாகப் பறந்த கனகம் தன் பிள்ளைகளை எண்ணிக் கண்ணீர் விட்டாள். அங்கே கதியற்ற நான்கு குழந்தைகள், "அம்மா... என்னம்மா? எழும்புங்கோ" என்று கூவும் மழலை மொழிகள் கேட்டன. ◆


படிப்பகம்

# கைவிடாத கண்கள்

## இலக்கிய நயம்

கண்கள் சன்னல்கள்
காதலின் சந்நிதிகள்!

கண்கள் தூண்டில்கள்
காதலின் தூண்டிகள்!

கண்கள் வரவேறபாளர்கள்
காதலின் வசிகரிப்பாளர்கள்!

கண்கள் அறிவிப்பாளர்கள்
காதலின் ஆதரவாளர்கள்!

கண்கள் பேச்சாளர்கள்
காதலின் வீச்சாளர்கள்!

கண்கள் போராளிகள்
காதலின் சார்பாளிகள!

கண்கள் திருடர்கள்
காதலின் கொள்ளையர்கள்!

கண்கள் துரோகிகள்
காதலின் காட்டிக்கொடுப்பாளர்கள்!

கண்கள் ஆயுதங்கள்
காதலின் போராயுதங்கள்!

கண்கள் படைகள்
காதலின் படையெடுப்பாளர்கள்!

கண்கள் ஆக்கிரமிப்பாளவர்கள்
காதலின் அபகரிப்பாளர்கள்!

கண்கள் அரசுகள்
காதலின் அதிகாரபீடங்கள்!

கண்கள் முரசுகள்
காதலின் முழக்கங்கள்!

கண்கள் தராசுகள்
காதலின் கணிப்பாளர்கள்!

கண்கள் வாய்கள்
காதலின் தெரிவிப்பாளர்கள்!

காதலில் கண்களும்
கலந்தே உள்ளன!

காதலுக்கு கண்கள்
எப்போதுமே
சார்பாளர்கள்தானா?

எதிரியே
நண்பனாக மாறுவதும்
நண்பனே
எதிரியாக மாறுவதும்
கண்களின்தொழிற்பாட்டிலும்
காணக்கூடியதுதான்!

அது எப்படி
இதோ இப்படி;

கண்கள் பொய்யர்கள்
காதலா? மோதலா?
கண்டறிய முடிவதில்லை!

கண்கள் எதிரிகள்
மோதி விலகிவிடுகின்றன!
கண்கள் கத்தரிகள்
இதயத் தகவலை



தணிக்கை செய்கின்றன!

கண்கள் அகழிகள்
ஆழம் தெரியாத
கோலம் காட்டுவன!

கண்களின்
தொழிற்பாடு இத்தோடு
முடிகிறதா?

காதல் தோல்வியிலும்
கண்கள்
கலந்து கொள்கின்றன!

காதல் சுமைகளை
வெளியேற்றும் வெள்ளம்
கண்களின் கண்ணீர்!

கண்ணீரில் இரண்டுவகை
இருக்கிறது
ஆனந்தக் கண்ணீர்
ஆற்றாமைக்கண்ணீர்!

ஆனந்தக் கண்ணீரில்
கனம இருக்காது!

ஆற்றாமைக்கண்ணீரில்
கனம் இருக்கும்!

கரையும்
சுமைகளின் எடையே
அந்தக் கனம்!

"குழந்தைகளை
அழவிடுங்கள்"
என்கிறார்கள்.

"அழவிட்டால் தான்
அதன் உறுப்புக்களுக்கு
ஆரோக்கியம்!"என்கிறார்கள்!

துயரில் வாடும்
காதல்ர்களும்
குழந்தைகள்தான்!

பிரிவில் வாடும்
காதலர்களும்
குழந்தைகள்தான்!

காதலில் தோல்விகண்ட
காதலர்களும்
குழந்தைகள்தான்!

அந்தக் குழந்தைகளையும்
அழவிட வேண்டும்!

பிறக்கும்போதும்
அழுகிறான்!
இறக்கும்போதும்
அழுகிறான்!
என்று கூறுகிறார்கள்!
அவர்கள்
காதலர்களை மறந்துவிட்டனர்!!
ஆனால் கண்கள்
காதலர்களை மறப்பதில்லை!

காதலர்கள்
ஒருவரை ஒருவர்
நினைக்கும்போதும்
அழுகிறார்கள்!

காதலர்கள்
ஒருவரை ஒருவர்
மறக்கும்போதும்
அழுகிறார்கள்!

இறக்கி வைத்தால்தான்
பாரம் தீரும்!
அழுது முடித்தால்தான்
சோகம் தீரும்!

புறச்சுமை
உடலைத்தான் வருத்தும்!
அகச் சுமை
உயிரையும் அழுத்தும்!

புறச்சுமை அகற்ற
கைகள் போதும்!

இரவல் கைகளும்
உதவிக்கு வரலாம்!

அகச்சுமை அகற்ற
கண்களால்தான் முடியும்!
சொந்தக் கண்களால்
மட்டும்தான் முடியும்!

இங்கே பாருங்கள்
காதலி ஒருத்தி
கண்களோடு பேசுகிறாள்.

"ஏ! கண்களே! கண்களே!
பற்றி எரிகிறது தேகம்
முற்றி விட்டது காதல்நோய்!

கண் நிறைந்த காதலரை
காட்டியது நீங்கள்தானே!

காணவைத்தீர்-காதலுற்றேன்!
காமுற வைத்தீர்
நாற்புறத் தீயிடை
என்னை நடுவினில் வைத்தீர்!

கண்களே! கண்களே!
காதலர் வருவாரா?
காமுறல் தணிப்பாரா?
காதலில் நனைப்பாரா?"
என்றவள் கேட்க
கண்கள் அழுதன!
இமைகள் நனைந்தன!

"நான் செய்த பாவம்
நீங்கள் எனக்கு கிடைத்தது!
நீங்கள் செய்த பாவம்
அவரைக் கண்டது!"
என்றாள் அவள்

கண்கள் துடித்தன
துன்பத்தால்!

தருவது ரசிகன்



காதலரை
காட்டித் தந்ததும்
நீங்கள்!
அன்புகூட்டித் தந்ததும்
நீங்கள்!
இன்று வருந்தி
அழுவதும் நீங்கள்!
நகைப்புத்தான் வருகிறது
உங்கள் பிழைப்பை நினைத்தால்!"

கண்கள்மீது
இகழ்ச்சி வீசினாள்!
பாவம் அவள்,
அவள் வருத்தம் அவளுக்கு!

"சதுமெனத் தாம் நோக்கித் தாமே
கலுழும்
இது நகத்தக்கது உடைத்து"
அதிகாரம்: 118, குறள்: 1173

---

ஸ்போர்ட்ஸ்

## உதைபந்தாட்டத் திருவிழா

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கோப்பை உதை பந்தாட்டப் போட்டி முதன் முதலில் 1930ம் ஆண்டுதான் ஆரம்பமானது. இப்போது நடப்பது 16வது உலகக் கோப்பைப் போட்டி.

முதன் முதலில் 11/2 கிலோ நிறையுள்ள தங்கத்தினால் உலகக்கோப்பை செய்யப்பட்டது. 1966ல் இக்கோப்பை திருடுபோய், பின்னர் மீட்கப்பட்டது. அதன் பிறகு 5கிலோ நிறையுடையதாக கோப்பை தயாரிக்கப்பட்டது.

இந்தத் தங்கக் கோப்பை தற்போது போட்டிகள் நடைபெறும் ஃபிரான்ஸ் நாட்டிற்கு 2 மாதங்களுக்கு முன் வந்திறங்கியது. இது மிகுந்த மரியாதையுடனும் பாதுகாப்புடனும் பாரிஸ் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு, 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு பாதுகாப்புடன் இருந்து வருகிறது.

## நான்கு முறை

உலகக் கோப்பைப் போட்டியில் 32 நாடுகள் பங்கு பற்றுகின்றன என்பது தெரியும். இவற்றில் 4 முறை சாம்பியன் பட்டத்தை வென்ற பிரேஸில் அணிக்குத்தான் 1 1/2 கூடுதல்



ரொனால்டோ

வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. உதை பந்து விளையாட்டில் சூப்பர் ஸ்டார் ரொனால்டோ பிரேஸில் அணியின் நம்பிக்கை நட்சத்திரம்.

எனினும் கடந்தமுறை உலகக் கோப்பையை பிரேஸில் வெல்வதற்குக் காரணமாகவிருந்த ரொமாரியோ காயம் காரணமாக இம்முறை போட்டிகளில் பங்கு கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்ட விமர்சகர்களின் கணிப்புப்படி கோப்பையை வெல்லும் வாய்ப்பு உள்ள அணிகள் இவை: பிரேஸில், ஜெர்மனி, இத்தாலி.

## பந்தயம்

உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் போது பந்தயம் கட்டுவது ஒன்றும் புதிதல்ல. ஆனாலும் பந்தயம் கட்டுவதில் அல்பேனிய உதைபந்தாட்ட இரசிகர் இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலே போய்விட்டார்.

ஆர்ஜென்டினா- பல்கேரியா போட்டியின் போது இவர் பந்தயப் பொருளாக வைத்தது எதைத் தெரியுமா? தனது மனைவியை.

## வெறிகொண்ட இரசிகர்கள்

1982ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் இத்தாலி சாம்பியனானது. இத்தாலி இறுதிப் போட்டிக்கு வருவதற்கு முன் பிரேஸில் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

இந்த 3 கோல்களையும் அடித்தவர் இத்தாலி நாட்டின் பவ்லோ ரோஸி. சில வருடங்கள் கழித்து ரோஸி பிரேஸிலுக்குச் சென்றார். ஒரு நாள் டாக்ஸியில் செல்லும்போது, டாக்ஸி ட்ரைவருக்கு தான் யார்? என்பதைக் கூறிவிட்டார்.



எஸ்கோபர்

உடனே வண்டியை நிறுத்திய டாக்ஸி ட்ரைவர் ரோஸியைக் கீழே இறக்கி விட்டு, "1982ல் நீங்கள் எங்களுக்குச் செய்ததற்குப் பதிலடி இது:" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

இப்படி ஒரு அணி மீது கொண்ட பற்று வன்முறையாகவும் மாறி விடுவதுமுண்டு.

1994ல் கொலம்பிய உதை பந்தாட்ட வீரர் அண்ட்ரஸ் எஸ்கோபர் தவறுதலாக சேம் சைட் கோல் அடித்தார். இதனால் கொலம்பியஅணி போட்டியிலிருந்து வெளியேறும் நிலைக்குத்தள்ளப்பட்டது

நாடு திரும்பிய எஸ்கோபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

---

## சிந்தியா பதில்கள்

* செய்தித் தணிக்கை பற்றிய உமது கருத்து என்ன?

ஆர். சக்திவேல், மட்டக்குளி.

இடக்கையால் தந்து வலக்கையால் எடுத்துக்கொள்ளக்கூடிய விதமாகத்தான் எதையும் தர நினைக்கிறார்கள். அதிகாரப் பகிர்வு முதல், செய்திச் சுதந்திரம்வரை அதுதான் கதை. எங்கள் இராஜதந்திரியின் வாயில் சர்க்கரை போடலாம். முதல்வாரம் சொன்னார்; மறுவாரம் தெரிந்துவிட்டது- மாயமான் வித்தை!

••

* யாழ்ப்பாணம் செல்லலாம் என்று நினைக்கிறேன்; பிரச்சனை இல்லைதானே?

மா. புஸ்பராணி, கொழும்பு-09.

எங்குத்தான் பிரச்சனை இல்லை! நீங்கள் எலியாக இருந்தால்கூட உயிர் போனால் புலியாகிவிடுவீர்கள்; அது போதாதா?!

••

* யாழ் மாநகர சபையின் கூட்டணி உறுப்பினர்கள் பதவி விலகிவருகிறார்களே?

எஸ். தில்லைச்சந்திரன், யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் காதிலை பூ கந்தசாமியார் வெளியிட்ட கற்பனைச் செய்திகள் இப்போது நிஜச் செய்திகளாகிக் கொண்டிருக்கின்றன.

••

* மாணவர்களிடம் குறும்புகள் அதிகமாகி வருகிறதே?

பி. மாலன், கொழும்பு-09.

இரசிக்கத்தக்க புத்திசாலிக் குறும்புகளும் உள்ளன. 'அரட்டை அரங்கில்' இரசித்த தமாஷ் ஒன்று:

மாணவனைப் பசு ஒன்றை வரைந்து காட்டுமாறு கூறினார் ஆசிரியர்.

மாணவனும் கச்சிதமாக பசுவின் ஏனைய பாகங்களை எல்லாம் வரைந்திருந்தான். வாயை மட்டும் வரையாமல் விட்டிருந்தான்.

"ஏன் வாய் கீறவில்லை?" என்று கேட்டார் ஆசிரியர்.

மாணவன் சொன்னான்:

"சேர், அது வாயில்லாத ஜீவன் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்!"

••

* உளவியல் உற்சாகமூட்டுவது எப்படி?

எல். கேசவராஜன், வவுனியா.

ரமணரிஷியிடம் ஒரு தம்பதி வந்தனர். மனைவி குண்டாக இருந்தார். அதனால் திருவண்ணாமலையில் மலையைச் சுற்றி நடந்து பிரார்த்தனை செய்ய அவரால் முடியவில்லை.

அவர் ரமணரிஷியிடம்: "சுவாமி என்னால் மலையைச் சுற்றி நடக்கவே முடியவில்லை. நீங்கள்தான் கருணைசெய்ய வேண்டும்!" என்று கூறினார்.

ரமணரிஷி அந்தப் பெண்ணின் கணவரை அழைத்து: "உங்கள் மனைவியை அழைத்துக் கொண்டு மலையைச் சுற்றி நடவுங்கள்!" என்று கூறினார்.

"என் மனைவியால் அத்தனை தூரம் நடக்க முடியாதே!" என்றார் கணவர்.

"பரவாயில்லை, உங்கள் மனைவியை அழைத்துச் செல்லுங்கள். அதே நேரம் ஒரு வண்டியை வாடகைக்கு பேசுங்கள். அது உங்களைத் தொடர்ந்து வரட்டும். உங்கள் மனைவியால் நடக்க முடியாத போது வண்டியில் ஏறிக்கொள்ளட்டும்." எனறார் ரமணரிஷி.

அப்படியே செய்தனர். மனைவி நடந்து கொண்டே இருந்தார். வண்டியில் ஏறும் எண்ணமே வரவில்லை.

'நடக்க முடியாமல் போனால் வண்டி இருக்கிறது' என்ற தெம்புதான் அவரை நடக்க வைத்திருக்கிறது. பத்தடி கூட நடக்க முடியாதவர், அன்று எட்டு மைல்தூரம் நடந்து முடித்தார்.

••

* சிந்தியா! சுருக்கமான கேள்வியும், பதிலும் எப்படி இருக்க வேண்டும்?

கே. தெய்வானை, பதுளை.

"கிளை முளைக்காத மரம் எது?"

"பட்ட மரம்!"

••

* சமீபத்தில் நீங்கள் இரசித்த ஜோக் எது?

எஸ். சிறிலால், திருமலை.

'இந்தியா அணுக்குண்டு செய்ய அமெரிக்கா மறைமுகமாக உதவியிருக்கலாம்'! என்று சில இந்தியப் பத்திரிகைகள் எழுதியதைப் படித்தபோது, அடக்கமாட்டாமல் பக பகவென்று சிரித்துவிட்டேன்.

••

* கிரிக்கெட் வீரர் சனத்தின் காதல் இரண்டு வருடங்களாக மூடு மந்திரமாக இருந்தது எப்படி?

சி. வினோத், நீர்கொழும்பு.

தமிழகப் பத்திரிகையான தினத்தந்தி சில வாரங்களுக்கு முன்னர் வெளியிட்ட கட்டுரையில் 'இரண்டு வருடக் காதல்' என்று தப்பான தகவலை தலைப்பாகவே வெளியிட்டிருந்தது. சனத்தின் அதிரடி ஆட்டம் போலவே இரண்டு மாதத்திற்குள் காதலும் கல்யாணமும் மளமளவென்று ஒப்பேறிவிட்டன. எதிலும் வேகம் காட்டும் சனத் இரண்டு வருடம் பொறுத்திருப்பதாவது!



சாதனா

••

* டியர் சிந்தியா! புதுக்கவிதை ஒன்று கூறுங்கள்?

எம். ரஷ்மி, மட்டக்களப்பு.

கவிதை எழுதுவதில்லை. இரவல்தான்.

"கண்ணே!
ஆசையோடு கேட்கிறேன்...
முத்தம் ஒன்று தா!
இலவசமாக அல்ல;
உடனே
திருப்பித் தருகிறேன்!"

••

* எப்பப்பார்த்தாலும் நம்மை குறைசொல்லும் நண்பனை என்ன செய்யலாம்?

பூ. ராகவன், அக்கரப்பத்தனை.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது நறுக்கென்று கொடும்.

இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டார்கள்.

"உன்னோடு நான் சிநேகிதம் பண்ணியதற்குப் பதிலாக ஒரு எருமை மாட்டுடன் சிநேகிதம் பண்ணியிருக்கலாம்!" என்றார் ஒருவர்.

"பண்ணியிருக்கலாம்! ஆனால் அதுக்கு அந்த எருமை மாடு சம்மதிக்கணுமே!" என்றார் மற்றவர்.

••

* ஒரே மாதிரி விடயத்தில் இருவேறு கருத்து ஏற்பட முடியுமா? அது நியாய மாக இருக்குமா?

சே.ராசரத்தினம், மஸ்கெலியா.

இருக்கும்.

ஒருவர் கூறினார்: "நான் மாமா மகளை கல்யாணம் செய்யப்போகிறேன். அதுதான் சந்தோசமாக இருக்கிறேன்!"

அடுத்தவர் சொன்னார்: "நான் மாமா மகளை கல்யாணம் செய்யவேண்டியதில்லை, அதுதான் சந்தோசமாக இருக்கிறேன்!"

••

* முகபாவம் காட்டத் தெரியாத நடிகைகளை விட்டால் இந்த இயக்குநர்களுக்கு வேறு ஆளே கிடைக்கவில்லையா?

ஆர். சாந்தகுமார், கல்கிசை.

முகபாவங்களை யார் பார்க்கப் போகிறார்கள் என்ற அலட்சியத்தால், உங்களைப் போன்றோரின் இலட்சிய நடிகைகளை இயக்குநர்கள் தேடுவதில்லை.

••

* சிக்கனத்திற்கு வரைவிலக்கணம் என்ன?

எம். ரவூப் ஹக்கீம், புத்தளம்.

அந்த இலக்கண மெல்லாம் தெரியாது. சீனப் பழமொழி ஒன்று இப்படி உரைக்கிறது:

"காடுகளுக்கு மிக
அருகில் வாழ்ந்த பொழுதும்
விறகுகளை வீணாக்காதே!"

••

* மாகாண சபைத் தேர்தல் திகதியை ஏன் அறிவிக்காமல் இருக்கின்றனர்?

மா. சற்குணம், மன்னார்.

களத்தில் இருந்து ஓலை வரும் எனக் காத்திருக்கிறார்கள்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 13

ஆண்டவரிட்ட கட்டளைப்படி மோசேயும் அவர் சகோதரரான ஆரோனும் எகிப்தை நோக்கிப் புறப்பட்டனர். எகிப்தில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் இஸ்ரயேலரை மீட்டு, அவர்களுக்காக ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கானான் நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பணியினைத் தனக்கு ஆண்டவரே அளித்திருப்பதை மோசே ஆரோனிடம் தெரிவித்தார். தனது பணியில் உதவுவதற்காகவே ஆரோனையும் ஆண்டவர் அனுப்பி வைத்திருப்பதையும் கூறினார். ஆரோன் தன்னிடம் ஆண்டவர் கூறியவற்றையும் எடுத்துரைத்தார்.

எகிப்து நாட்டை அடைந்த இருவரும் எபிரேய குலத்தவர்களில் நல்ல அறிவாற்றலும், தலைமை தாங்கும் வல்லமையும் உள்ளவர்களை ஒன்று சேர்த்தனர். ஆண்டவர் தமக்கிட்ட பணியினை அவர்களிடம் எடுத்துக் கூறினர். தங்களது மாறாத் துயரம் மறைந்து போகும் காலம் நெருங்கிவிட்டது; தாம் அனுபவித்து வரும் துன்ப துயரங்களை ஆண்டவர் பாராமுகமாக இருக்கவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர். இருப்பினும் பலருக்கு மோசே- ஆரோன் கூறிய வார்த்தைகளில் பூரண நம்பிக்கை ஏற்படவில்லை. கடவுள் இத்தகைய கட்டளையை மோசேயிடம் ஒப்படைத்தமைக்கான சான்று என்ன என்று வினவினர். இதனை எதிர்பார்த்தது போன்று, ஆண்டவர் மோசேக்கு அருளிய அருஞ்செயல்கள் சிலவற்றை செய்து காட்டினர். இவற்றைக்கண்ட இஸ்ரயேலர் மோசேயும் ஆரோனும் கூறிய வார்த்தைகளை நம்பினர். தங்களை ஆண்டவர் மறந்து- கைவிட்டு விடவில்லை என்பதனைத் தெரிந்துகொண்டனர். தரையில் குப்புற விழுந்து ஆண்டவரைத் தொழுதனர்.

மோசேயிடமும் ஆரோனிடமும் ஆண்டவரின் செய்தியைக்கேட்ட இஸ்ரயேலப் பிரமுகர்கள், தம் மக்கள் அனைவரிடமும்- அவர்கள் வாழும் பகுதிகளுக்கெல்லாம் சென்று விவரமாக எடுத்துரைத்தனர். அவர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியுடன் ஆண்டவரைத் துதித்தனர். தன்னுடைய தலைமையை ஏற்று தனது மக்கள் தன்னைப் பின் தொடர்ந்து வரத் தயங்க மாட்டார்கள் என்று மோசே உறுதியாக நம்பினார். இதனைத் தொடர்ந்து ஆரோனுடன் அரண்மனை சென்று பார்வோனைக் கண்டார்.

## மோசேயின் கோரிக்கை

இஸ்ரயேலர்கள் தங்கள் ஆண்டவரை வழிபட்டு, பலிபூசை நடத்துவதற்காக அவர்களைப் பாலைவனத்தினூடே அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று மோசே பார்வோனிடம் கோரிக்கை விடுத்தார். மோசேயின் கோரிக்கை பார்வோனுக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது. மாபெரும் சமுத்திரம் போல் பல்கிப் பெருகியிருக்கும் அப்பெரும் கூட்டத்தை அழைத்துச் செல்ல இருவர் தன் முன் வந்து கோரிக்கை விடுத்தமை பார்வோனுக்கு ஒரு வேடிக்கைபோல் இருந்தது. பார்வோனின் அவையிலிருந்த அனைவரும் பெரும் நகைச்சுவையான கதையினைக் கேட்டதுபோல் சிரித்தனர். மோசே, தான் ஆண்டவரிட்ட ஆணையைச் செயற்படுத்து முகமாகவே வந்திருப்பதாகக் கூறியது கூட அரசவையிலுள்ளவர்களை மேலும் நகைப்பூட்டியது.

"நீங்கள் இருவரும், ஒரு பெரும் மக்கள் கூட்டத்தைப் பாலை நிலத்தினூடே கூட்டிச் செல்லவந்திருப்பதாகக் கூறுகிறீர்கள். ஆண்டவரே உங்களுக்கு இப்பணியை ஒப்படைத்ததாக வேறு கூறுகிறீர்கள்! உங்கள் ஆண்டவரை எனக்குத் தெரியாது. இஸ்ரயேலர்கள் இந்த நாட்டில் பெரும் பணிகளை முடிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் போய்விட்டால் மாபெரும் நகரங்களைக் கட்டியெழுப்பும் பணியினை வேறு யார் செய்யப் போகிறார்கள்? அமைதியாக அவர்கள் வேலையைத் தொடரட்டும். அவர்களை இந்நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கவே மாட்டேன். அப்பாலே போய்விடுங்கள்!"

இவ்வாறு பார்வோன் பலத்த தொனியில் கர்ஜித்தான். பார்வோனின் ஆணவக் குரல் அவையில் எங்கும் எதிரொலித்தது.

மோசேயின் அண்ணன் ஆரோன் முன் வந்து, "மன்னவரே! வீண் மமதை கொண்டு எங்கள் ஆண்டவரை அவமதிக்கக் கருதி விடாதே! கடந்த பல நூறாண்டுகளாக இந்த நாட்டைக் கட்டியெழுப்பிய எம் மக்களை அடிமைகளாகக் கருதி, உன் நாட்டவர்கள் இழிவுபடுத்தி வந்துள்ளனர். போதுமான உணவோ, உறைவிடமோ, தகுந்த ஓய்வோ அளிக்காமல் மிருகங்களைவிட மிகக் கேவலமாக வாட்டி வதைத்து வந்துள்ளீர்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பெரும் பஞ்சத்திலும் பட்டினிச் சாவிலிருந்தும் எகிப்து நாட்டு மக்களை எம் மூதாதையரில் உயர்ந்தவரான யோசேப்பு காத்தார் என்ற நன்றியைக்கூட, உமது நாட்டவர்களும் மன்னரான நீரும் மறந்து விட்டீர்கள்! இப்போதாவது நீங்கள் விட்ட தவறுகளை உணர்ந்து எம் மக்களுக்கு விடுதலை அளியுங்கள்! இது ஆண்டவரின் ஆணை! அந்த ஆணைக்கு மதிப்பளிக்க வில்லையானால் அதே ஆண்டவரின் கோபத்துக்கு ஆளாகுவீர்கள்! அவர் வழங்கும் தண்டனைகளிலிருந்து உங்களால் தப்ப முடியாது!" என்று இடிபோன்று அவ்வவையில் முழங்கினார்.

## பார்வோனின் பிடிவாதம்

ஆரோன் குரலில் வெளிவந்த வார்த்தைகள் மிக ஆணித்தரமாக இருந்தமை கண்டு அவையிலுள்ளவர்கள் அஞ்சினர். பார்வோனும் பதற்றமடைந்தான். இருப்பினும், எகிப்திய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த இஸ்ரயேலர்களை அனுப்ப பார்வோன் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்களை அனுப்பிவிட முடியாது என்று மோசேயிடமும் ஆரோனிடமும் கண்டிப்புடன் கூறிவிட்டான்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரயேலர்களை அழைத்துச்செல்ல வேண்டும் என்று தன்னிடம் கோரிக்கை விட்டமையினால் பார்வோன் கடும் கோபம் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் இஸ்ரயேலர்களுடன் சேர்ந்து தனக்கும் எகிப்து நாட்டுக்கும் எதிராக ஏதோ சதி செய்கிறார்கள் என்று கருதிய பார்வோன், அவர்களுக்கு ஓய்வு கிடைக்காமல் செய்யத் திட்டமிட்டான். மேற்பார்வையாளர்களை அழைத்து, ஈவிரக்கம் எதுவும் காட்டாமல் இஸ்ரயேலர்களிடம் கடுமையாக வேலைவாங்கும்படி கட்டளையிட்டான்.

கட்டடங்களை நிர்மாணிக்க களிமண்ணுடன் வைக்கோல் அரிந்து சேர்த்துப் பிசைந்து கற்களை உற்பத்திசெய்ய வேண்டும். அந்தப் பணியிலீடுபடுவோர்க்கு மேற்கொண்டு வைக்கோல் தரப்படமாட்டாது என்றும், தாங்களாகவே வைக்கோலைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிடப் பட்டது. அதுமட்டுமல்லாமல் வைக்கோல் சேகரிக்கத் தனியான நேரம் ஒதுக்கப்பட மாட்டாது என்றும் கண்டிப்பான உத்தரவிடப்பட்டது. அத்துடன் தினசரி உற்பத்தி செய்யும் கற்களில் ஒன்று கூடத் தவறாமல், முன்பு உற்பத்தி செய்த எண்ணிக்கையிலேயே கற்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இப்புதிய கட்டளையால் இஸ்ரயேலர்கள் மிகவும் துயரடைந்தனர். மோசேயும் ஆரோனும்-அமைதியாக வேலைகளில் ஈடுபட்டு வந்த தங்களைக் குழப்பிவிட்டதுடன் பார்வோனையும் சினமடைய வைத்துத் தங்களைப் பெரும் துன்பக் கிடங்கில் வீழ்த்தி விட்டனர் என்றும் இருவரையும் திட்டித் தீர்த்தனர்.

மோசே மௌனமாக ஆண்டவரைத் துதித்தார். ஆண்டவர் தனக்கருளிய அருஞ்

## தொடரும் தண்டனைகள்



செயல்களைக் காட்டி, பார்வோனின் கருத்தை மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை, என்ற முடிவுக்கு வந்தவராக,

"மன்னா! எமது ஆண்டவர் எமக்கிட்ட ஆணைக்கு நீர் மதிப்பளிக்கத் தவறிவிட்டீர்! ஆகவே ஆண்டவரின் பெருமையை நீரும் உமது நாட்டு மக்களும் அவர் அளிக்கும் தண்டனைகளின் மூலம் உணரத்தான் போகின்றீர்கள்! இதோ என் சகோதரர் ஆரோனின் கையிலிருக்கும் கோலை இந்த அவையின் முன்னே அமர்ந்திருக்கும் அனைவரும் பாருங்கள்!" என்று கூறியபடி அக்கோலை அரசனின் அரியணையின் முன்பாக உள்ள படிக்கட்டுக்களின் மீது எறியும்படி ஆரோனிடம் கூறினார். அக்கோல் ஒரு பெரும் பாம்பாக மாறியது. தலையினை உயர்த்திய வண்ணம் சீறிப் பாய்ந்தது.

பார்வோன் பாம்பின் சீற்றத்தைப் பார்த்து சற்றுப் பயந்தான். இருப்பினும், அதே அவையில் நின்றிருந்த எகிப்திய மந்திரவாதிகள் தங்கள் கைகளிலிருந்து கோல் களைத் தரையில் வீசினர். அவைகளும் பாம்புகளாக மாறி, ஆரோனின் கோலால் உருவான பாம்புடன் மோதின. ஆனால் ஆரோனின் பாம்பு ஏனைய பாம்புகளைத் தாக்கி, விழுங்கிவிட்டது.

## நிறம் மாறிய நீர்நிலைகள்

பார்வோன், இதெல்லாம் ஒரு மாய விளையாட்டு என்று கூறிவிட்டு அன்று அவையைக் கலைத்துவிட்டான்.

மோசேயும் ஆரோனும் சற்று ஏமாற்றமடைந்தவர்களாக தனியானதோரிடம் சென்று ஆண்டவரைத் துதித்தனர். ஆண்டவரின் குரல் அவ்விருவருக்கும் நன்கு கேட்டது.

"மோசே! எகிப்திய மக்களுக்கும் மன்னனுக்கும் கடும் தண்டனை தரவேண்டியிருக்கிறது. ஆகவே என்னுடைய பெருமையை அவர்களுக்குப் புலப்படுத்தவே பார்வோன் மனத்தைக் கடுமைப்படுத்துகிறேன். அவனுடைய பிடிவாதத்தைக் கண்டு மனம் தளர்ந்து விடாதீர்கள். நாளைக்காலையில் பார்வோன் நைல் நதிக்கரைக்கு வரும்போது அங்கே போங்கள். இஸ்ரயேல் மக்களைப் போகவிடும்படி கோருங்கள். அவன் மறுப்பான். நைல் நதி நீரை கோலால் கலக்குங்கள். நீர் இரத்தமாக மாறிவிடும்! இதேபோல் ஒன்றன் பின் ஒன்றாக வேறுபல நடவடிக்கைகள் தொடரட்டும். இறுதியில் மிகப் பயங்கரமான தண்டனையை அவர்களுக்கு அளிப்பேன்! நான் துணை இருக்கத் துணிந்து செல்லுங்கள்!"

ஆண்டவரின் வாக்குப் பொய்க்கவில்லை. அடுத்த நாள் பொழுது புலரும் வேளையில் மன்னன் தன் அரசியுடன் அரண்மனையை ஒட்டியிருந்த ஆற்றங்கரைக்கு வந்தான். ஆண்டவர் கூறியது போல மோசே தனது கோரிக்கையை விடுத்தார். அரசன் ஏளனம் செய்தான். மோசேயின் கைக்கோல் நைல் நதி நீரைத் தொட்டதும் அந்த நீர் இரத்தமாக மாறியது. எகிப்து நாட்டினூடே பாய்ந்து செல்லும் அப்பெருநதி இரத்தமாகியது. அது மட்டுமல்லாமல் அந்நாட்டிலுள்ள ஏரிகள், குளங்கள், நீரோடைகள், கிணறுகள் அத்தனை நீர் நிலைகளிலுமுள்ள நீரனைத்தும் இரத்தமாக மாறியதுடன் அந்நீர் நிலைகளில் வாழ்ந்த மீன்களும் செத்து மிதந்தன. இதனால் எங்குமே சகிக்க முடியாத துர்நாற்றம் பரவியது. மக்கள் குடிப்பதற்கோ சமைப்பதற்கோ நீரின்றித் தவியாய்த் தவித்தனர். இவ்வாறு ஏழு நாட்கள் எகிப்து மக்கள் ஆண்டவரின் தண்டனைக்குட்படுத்தப் பட்டனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (11) விடை:** ☛ மிதியான் நாட்டிற்குச் சென்றார்.

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி ஏ.என். அக்னஸ், லக்ஷபான எஸ்டேட், மஸ்கெலியா.
2. பி. மஞ்சுளா, 39 மங்களா றோட், கலுபோவில, தெகிவளை.
3. எஸ். ஜெயச்சந்திரன், இராஜேந்திரங்குளம், வவுனியா.
4. சாலினி மடோனா, நீர்தோப்பு, அ.த.வித்தியாலயம், கொச்சிக்கடை.
5. சி. சதாகர், இல 118/50, குருணாகல் வீதி, மெல்புர, சிலாபம்.

**திருமறை 13 வினா:-** எகிப்திலுள்ள நதியின் பெயரைத் தருக?


ஜூன் 20க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 13–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : யாழ் உள்ளூராட்சி சபைகள். |
| தொழில் | : ஜனநாயகச் சாயம் பூசுவது. |
| உபதொழில் | : வெளிநாட்டு பிரமுகர்களிடம் பாத்திரம் ஏந்துவது. |
| பொழுது போக்கு | : அபிவிருத்திப் பேச்சுக்கள்-இடைக்கிடையே கூட்டங்கள். |
| நண்பர்கள் | : உள்ளேயே இருக்கிறார்கள். |
| எதிரிகள் | : வெளியே இருக்கிறார்கள். |
| உடனடி எதிரி | : சங்கிலியன் படை. |
| சாதனை | : தமிழ்க் கட்சிகளை முட்டி மோத வைத்தது. |
| வேதனை | : சமீபத்திய பதவி விலகல்கள். |
| நம்புவது | : நாற்காலிப் பிரியர்களை. |
| நம்பாதது | : விடுதலைப் புலிகளை. |
| தலைவணங்குவது | : இராணுவ நிர்வாகத்திற்கு. |
| அசையும் அசையா சொத்துக்கள் | : பழுதான குப்பை லொறிகள், கழுவாத கால்வாய்கள், உடைந்த துடைப்பங்கள், இடிந்த கட்டடங்கள் போன்றவை. |
| அதிகாரம் | : குப்பை அள்ளவும்-இடைக்கிடையே தெரு திருத்தவும். |
| சமீபத்திய மகிழ்ச்சி | : ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா ஒருமோட்டார் சைக்கிள். |
| சமீபத்திய எரிச்சல் | : எச்சரிக்கைகள். |
| இலட்சியம் | : சிவில் நிர்வாகம் என்று நம்பவைப்பது.! |

## கந்தசாமியும் முத்துத் தம்பியும்



**க:** இந்தியாவிலே அணுக்குண்டை வெடிக்க வைச்சுப்போட்டினம்.

**மு.த:** அப்படியோ, எத்தனை தமிழரைப் பிடிச்சு உள்ளே போட்டிருக்கினமாம்?

**க:** உள்ளே போடேல்ல, உள்ளம் திறந்து பாராட்டியிருக்கினம். குண்டை வெடிக்க வைச்சதில் இரண்டுபேர் தமிழ் பேசும் ஆட்கள்தானாம்.

**மு.த:** உதென்ன இழவப்பா, இங்கே குண்டு வெடித்தால் தமிழரை கைது செய்து குவிக்கினம். அங்கே குண்டு வெடித்தால் பாராட்டிக் குவிக்கினம். எனக்கு ஒன்றும் வெளிக்கேல்லை.

**க:** உமக்கு எதுதான் ஒழுங்காக விளங்கியிருக்கு?

**மு.த:** சரி விடும், மாகாணசபைத் தேர்தல் வரப்போகுதாமல்லோ? இந்த முறை ஒரு புள்ளடிக்கு டசின் ஒரு டசின் போத்தல் கேட்கப்போறன்... லோக்கல் சரக்கெல்லாம் தோதுப்படாது. வெளிநாட்டு சரக்காக தந்தால்தான் புள்ளடி போட பூத்துக்கே போறது. கையிலே சரக்கு, சீட்டுல புள்ளடி.

**க:** கனவு காணாதேயும், வடக்கு-கிழக்குக்கு மட்டும் நோ எலக்ஷன்.

**மு.த:** உதென்ன நியாயம்? ஊருக்கு ஒரு நீதியோ? பார்த்தீரோ எங்களைத் தனியாகப் பிரிச்சுத்தானே பார்க்கினம்.

**க:** முட்டாள், அவை எப்போதடா சேர்த்துப் பார்த்திருக்கினம்? இப்போது ஒரு படி மேலே போயிருக்கினம்.

**மு.த:** அதென்ன புது வில்லங்கம்?

**க:** முந்தி இன ரீதியாக பிரிச்சுப் பார்த்தினம், இப்ப இனத்தையே இரண்டாகப் பிரிச்சு பார்க்க ஒற்றைக் காலில் நிற்கினம்?

**மு.த:** அதெப்படி பிரிக்கிறது?

**க:** வடக்கென்றும் கிழக்கென்றும் வெட்டிப் பிரிக்கிறது.

**மு.து:** பேரினவாதச் சிந்தனை குட்டிபோட்டு கொளுத்திருக்கிறதுபோல கிடக்கு. எங்கட தமிழ்க் கட்சிகள் என்ன செப்புகினம்?

**க:** பிரிக்க விடோம், பிரிக்க விடோம் என்று சொல்லுகினம்.

**மு.த:** பிரிச்சா என்ன செய்வினம்?

**க:** உள்ளூராட்சி எலக்ஷன் நடக்கும்போது என்ன சொன்னவை, கொஞ்சம் திங்க் பண்ணிப் பார்த்துச் சொல்லும்.

**மு.த:** பேமஸான வசனமல்லோ, மறக்குமோ, தேர்தலில் போட்டியிட எங்களுக்கு விருப்பமில்லை, ஆனால் தேர்தல் நடப்பதால் போட்டியிடுகிறோம் எணடல்லோ பொன்மொழி உதித்தவை.

**க:** வடக்கு-கிழக்கை பிரிக்கக் கூடாது என்பது தான் எங்கள் விருப்பம், அரசு பிரிப்பதால் வேறு வழியின்றி சேர்ந்து நின்று பிரிக்க வேண்டிக் கிடக்கு என்று சொல்லிப்போடுவினம்.

**மு.த:** கொள்கை உறுதியோடு சிலபேர் பதவி விலகியிருக்கினம் பார்த்தியளோ?

**க:** எலக்ஷனில் போட்டியிடேக்கை உந்த கொள்கை உறுதியை எங்கே 'டம்' பண்ணிவச்சிருந்தவை?

**மு.த:** கிறீஸ் பூசி பொலித்தீன் பையில்போட்டு நிலத்துக்குக் கீழே வெச்சிருந்தவையாக்கும். அங்கால இங்கால சூட்டுச் சத்தம் கேட்டதும் கிளறி எடுத்துப் போட்டினம்.

## முத்தான ஆசைகள்

சின்ன சின்ன ஆசை
சிறகடிக்க ஆசை!
முத்து முத்து ஆசை
சொத்து சேர்க்க ஆசை!

நாற்காலியில் அமர்ந்து
பவர் காட்ட ஆசை!
நாலுபேர் சூழ
பவனி வர ஆசை!

எலக்ஷனில் நின்று
ஜெயித்துவிட ஆசை!
கிடைக்கின்ற வாய்ப்பை
அனுபவிக்க ஆசை!

சின்ன சின்ன ஆசை
சிறகடிக்க ஆசை!
முத்து முத்து ஆசை
சொத்து சேர்க்க ஆசை!

சொன்னதை எல்லாம்
மறந்துவிட ஆசை!
கொள்கையை உதறி
துறந்துவிட ஆசை!

பாராளுமன்ற
படி ஏற ஆசை!
மாகாணசபையின்
மடி தவழ ஆசை!

மாநகர சபையில்
முதல்வராக ஆசை!
நகர சபையில்
தலைவராக ஆசை!
மாகாண சபையில்
முதல்வராக ஆசை!

சின்ன சின்ன ஆசை
சிறகடிக்க ஆசை!

## 'பில்' கிளின்ரனுக்கு!

தாங்கள் வேண்டி விரும்பி
அன்புடன் வற்புறுத்தி
கேட்டுக் கொண்டதற்காக
அணுக் குண்டு உற்பத்தியை
நாங்கள்
நிறுத்திவிட்டோம்!



எனினும் எங்களுக்கு
கொஞ்ச அணுக்குண்டுகள்
உடனே தேவைப்படுகின்றன.
தங்களிடம்
டசின் கணக்காக
உள்ளவற்றில் நல்லதாக
ஒரு நாலு அணுக்குண்டு
அனுப்பிவைக்குமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பி.குறிப்பு:
பாவனைக்கு உதவாதவையை அனுப்பி வைக்க வேண்டாம். மறக்காமல் 'பில்' அனுப்புங்கள் கிளின்ரன்.

உண்மையுள்ள,
வாஜ்பேயி.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு–06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


## ஓவியகாவியம்

↓ இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபின்னர், சிலுவையிலிருந்து அவருடைய சடலம் கீழே இறக்கப்படுவது போன்ற இந்த ஓவியம் 1435ம் ஆண்டளவில் வரையப்பட்டது எனத் தெரிகிறது.

இதனை பெல்ஜியம் நாட்டிலுள்ள ஃபிளண்டர் மாநிலத்தைச் சேர்ந்த ரோகியர் வான்டெர் வெய்டென் என்ற ஓவியர் வரைந்துள்ளார். ஒரு மரப்பலகையில் எண்ணை வண்ணங்களால் தீட்டப்பட்ட இந்த ஓவியம் இன்றுவரை மங்காமல் தெளிவாகக் காட்சியளிக்கிறது.

இயேசு பெருமானின் நிலை கண்டு மனம் வெதும்பி மயக்கமடையும் கன்னி மரியாளை இருவர் தாங்கிப்பிடிப்பதும் சூசையப்பர் மற்றும் உறவினர் ஆகியோர் துயரமே உருவாகக்காட்சி தருவதையும் இப்படம் சித்தரிக்கிறது.

வண்ண ஓவியங்கள் தீட்டும் கலை கிறிஸ்துவுக்கு முன் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களிடம் இருந்து வந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஃபிரான்ஸ் மற்றும் ஸ்பெய்ன் நாடுகளுக்கிடையிலான எல்லைகளில் கற்குகைகளில் புராதன ஓவியங்கள் காணப்படுகின்றன.

ரோமாபுரி, கிரேக்கம், இந்தியா, எகிப்து போன்ற நாடுகளில் ஓவியக் கலை மிகச் சிறப்பாக வளர்ச்சி கண்டு வந்திருக்கிறது. அக்காலத்தில் சமய சம்பந்தமான காட்சிகளே ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இந்தியாவில் அஜந்தாக்குகை ஓவியங்கள் எல்லோரா ஓவியங்கள் தனிச் சிறப்பு மிக்கவை. இலங்கையில் சிகிரியா மற்றும் தம்புள்ளை ஓவியங்களும் பழமை வாய்ந்தவை.

பல்லாயிரம் வருடங்களானாலும் அழிந்து போகாத- மங்காத வண்ணங்களால் அக்கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அத்தகைய வர்ணக்கலவைகள் இன்று பாவினையில் இல்லை. ஒவ்ட் இன் கோல்ட் என்பது அந்தக் கலவைகளுக்கும் பொருந்தும். ■




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657




↓ பப்பிலோன் என்ற சிறியரக நாய் இதுவாகும். எழுந்து நின்றால் ஆக 28 செண்டிமீட்டர்தான் இதன் உயரம். 2 முதல் 4.5 கிலோ எடைதான் இருக்கும்.

பப்பிலோன் என்பது வண்ணத்துப் பூச்சிக்கான ஃபிரெஞ்ச் பெயர். இந்த நாயின் காதுகள் வண்ணத்துப் பூச்சியின் தோற்றமுடையதாக இருப்பதால், இந்தப் பெயர் இந்த நாய் இனத்துக்கு வழங்கப்பட்டது. இவற்றின் தோற்றுவாய் ஸ்பெய்ன் நாடு என்று தெரிகிறது.

## அழகன்



இதன் கழுத்து அடிவயிறு ஆகிய இடங்களில் முடி கத்தை கத்தையாக வளர்ந்திருக்கும். வாலின் நுனியிலும் முடி கொத்தாக அமைந்திருக்கும்.

வீடுகளில் வளர்க்க விரும்பப்படும் நாய்களில் இதுவும் ஒன்று. சிறுபிள்ளைகளுக்கு விளையாட்டுத் தோழனாக அல்லது தோழியாக இருக்கும். நம் நாட்டில் காண்பது அரிது. □

## அபூர்வம்


↘ நம் வீடுகளில் டிக் டிக் சத்தம் போடும் பல்லிகள் போன்றவையல்ல இவை. அதையும் தாண்டிய வல்லமை உள்ளவை. அதாவது பறக்கக்கூடியவை.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் பறக்கும் பல்லிகள் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் மரங்களில்தான் வாழும். உண்மையில் இவை பறப்பதில்லை.


உடலின் இரு பக்கங்களிலும் உள்ள இறக்கை போன்ற தசையினை விரித்து ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குத் தாவிச் செல்லும். இவ்வாறு பாயும் போது தன்னுடைய உடலை எந்தப்பக்கம் வேண்டுமானாலும் திருப்பிக்கொள்ளும். அப்போது இது பறப்பது போலவே காட்சி தரும்.

சாதாரணமாக இவை மரத்திலிருக்கும்போது இந்த 'இறக்கை'யை உள்ளடக்கிக் கொண்டால் சாதாரண பல்லி போன்றே தோற்றமளிக்கும். இருபது செண்டிமீட்டர் வரை நீளமாக வளரும் இப்பல்லியின் ஆண் பல்லியின் இறக்கை கவர்ச்சியான கடும் வர்ணத்திலிருக்கும்.

இந்த வண்ண அழகினைக் காட்டியே பெண்பல்லியை ஆண் பல்லி கவர்ந்திழுக்குமாம். ●



## உச்சக்கட்டம்



பல மாடிகளைக் கொண்ட ஒரு கட்டடத்தின் எட்டாவது மாடியில் தீப்பிடித்துக் கொண்டால், தீயணைக்கும் படையைச் சேர்ந்தவர்கள் அந்த எட்டு மாடிகளுக்குமான படிக்கட்டுக்களில் தாவி மேலே ஓடமுடியுமா? இதற்காக நவீன ஏணிகள் வந்துவிட்டன. தீயணைப்பு வண்டிகள் உள்ளன. நவீன வண்டிகளில் பல புதிய சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக தானே உயர்ந்த செல்லும் தன்னியக்க ஏணிகள் உள்ளன. இவற்றின் உச்சத்திலே ஒரு பெட்டி மாதிரியான ஒரு அமைப்புண்டு. அதில் ஒரே சமயத்தில் பலர் ஏறி நிற்கலாம். இவர்களுடன் அந்த ஏணி சில விநாடிகளில் எட்டுமாடி அளவு உயர்ந்துவிடும்.

இத்தகைய ஏணிகள் பலபக்கமும் சுழலக்கூடிய விதத்தில் அடிப்பாகத்தில் சுழலும் மேசையும் பொருத்தப்பட்டிருக்கும். பரந்து பரவும் தீயைக் கட்டுப்படுத்த வேண்டிய பக்கமும் திரும்பித் திரும்பி நீர் பாய்ச்ச இச்சாதனம் உதவுகிறது. படத்தில் காணப்படும் ஏணிகள் 30 மீட்டர் வரை உயரக்கூடியவை. ○

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜென்சி 09.06.1998

நெடுந்தீவு 2ம் வட்டாரத்தை சேர்ந்த அன்ரன் றேமன் இன்பமலர் தம்பதியினரின் செல்வப் புதல்வி **ஜென்சி** தனது 7வது பிறந்த தினத்தை 09.06.1998 அன்று திருகோணமலையில் இருக்கும் தனது அம்மம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். மகள் ஜென்சிசை ஜெர்மனியில் வசிக்கும் அம்மா, அப்பா திருகோணமலை அம்மம்மா, அம்மப்பா, மாமா, சித்தி, நிலாவெளியில் வசிக்கும் பெரியம்மா, குடும்பத்தினர் நீர்கொழும்பு சின்னம்மா குடும்பத்தினர், பரந்தன் செல்லையா மாமா குடும்பத்தினர், நெடுந்தீவு அப்பம்மா, யாழ் ஆயர் இல்லம் சூசை பெரியப்பா, நெடுந்தீவு மகாராயா பெரியப்பா குடும்பத்தினர், நெடுந்தீவு பெரியமாமி குடும்பத்தினர், நெடுந்தீவு மாசிலா மாமி குடும்பத்தினர், ஜெர்மனி நவரட்ணம் மாமா குடும்பத்தினர், ஜெர்மனி திவி அத்தான், றெஜில் அண்ணா, சுவிஸ் ஜன்சி மச்சாள் குடும்பத்தினர், சுவிஸ் ஜன்சன் அத்தான், ஜெசி மச்சாள், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஜென்சியை குழந்தை யேசுவின் துணையுடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல் தங்கவேல் முத்துமாரி (அம்மம்மா)

## நீயும் பொம்மை நானும் பொம்மை

→ விளையாட்டு பொம்மைகள் சிறுவர்களுக்கானவை என்ற நிலை மாறி இன்று பெரியவர்களும் விரும்பும் பொருளாக மாறிவிட்டது. பல நாடுகளிலும் பொம்மை உற்பத்தித் தொழிற்சாலைகள் புதிதுபுதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

இப்பொழுது உருவாக்கப்படும் பொம்மைகள் பெரும்பாலும் முகபாவங்களை வகை வகையாக வெளிப்படுத்துபவையாக உள்ளன. இதனால் பெரியவர்களையும் கவர்கின்றனர்.

ஜப்பானில் பொம்மைத் திருவிழாக்கள் வருடத்தில் இரு தடவைகள் நடைபெறுகின்றன. சிறுமிகளுக்கான விழா மார்ச் 3ம் திகதியும் சிறுவர்களுக்கான விழா மே 5ம் திகதியும் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

இவ்விழாக்களில் வகை வகையான பொம்மைகள் காட்சிக்காக வைக்கப்படும்.



இந்தியாவிலும் நவராத்திரி காலங்களில் பொம்மைக் கொலு ஒவ்வொரு வீட்டிலும் இடம்பெறும்.

படத்தில் காணப்படுவது ஜேர்மனியில் 1910ம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட 'கியூப்பி நகைச்சுவைப் பொம்மை'கள். நகைப்பூட்டும் முக பாவத்துடன் இவை காட்சி தருகின்றன.

உயிருள்ள குழந்தைகள் போலவே இவை தெரிகின்றன அல்லவா! நீயும் பொம்மை, நானும் பொம்மை, நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை! ○

## திறமை



← கடலில் வாழும் பிராணிகளில் மிகவும் புத்திக் கூர்மையுள்ள பிராணி டொல்ஃபின் இவை மனிதர்களுடன் நட்புகொள்ள ஆர்வமுடையவை. (மனிதருடன் சேர்ந்து கெட ஆசையோ?) கடலில்- உப்பு நீரில் வாழ்ந்தாலும் இவற்றை உப்பு நீர் ஏரிகளிலும் செயற்கைத் தடாகங்களிலும் வளர்க்கலாம்.

டொல்ஃபின் மீனைப்போன்ற தோற்றமுடையது. ஆனால் முட்டையிட்டு குஞ்சி பொரிப்பதில்லை. குட்டிபோட்டு பால் கொடுத்து வளர்க்கும். திமிங்கிலமும் டொல்பினும் ஏறத்தாழ ஒரே இனத்தைச் சார்ந்தவை. 4 மீட்டர் வரை வளரும். 270 கிலோ எடைகொண்டவையாக இருக்கும்.

புத்தி சாதுரியமுடைய பிராணி என்பதனால் இவற்றைப் பிடித்து வளர்த்து, பல விளையாட்டுக்களையும் பழக்கலாம். வெகு உயரத்தில் நின்ற வண்ணம் தனக்குப் பயிற்சி அளிப்பவர் கையில் வைத்திருக்கும் ஒரு பொருளைப் பாய்ந்து பிடிப்பதைப் படம் காட்டுகிறது. பயிற்சி பெற்ற கில்லாடியான டொல்பின் இது. எத்தனை உயரத்துக்கு பாய்கிறது பார்த்தீர்களா?!



படிப்பகம்